2-8-42

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 27 2-8-42 Price 2 Annas

ஹித-உபதேசம்

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாஸன் எழுதியது

யுத்தத்தின் முடிவு உலகத்தையே கலங்கவைத்து விட்டது. இந்தியாவிலே இது கவனம் பெறுவது சகஜம். இங்கிலாந்திலே கண்டனங்கள் பிறப்பதும் எதிர்பார்க்கக் கூடியதே. நேச நாடுகள் கவலைகாட்டிவருவது புதிது. அது காலத்தின் குறி. யுத்தம் முற்றி வருகிறது: நாளுக்கு நாள் நெருக்கடி நெருங்கி வருகிறது. இந்த நேரத்தில் இப்படிச் செய்வது தர்மமா என்கின்றனர். முன்பின் கேட்டறியாத பத்திரிகைகள் யோசனை சொல்லக் கிளம்பியிருக்கின்றன. தோஷம் அவை மீதில்லை. இந்தியக் கக்ஷியை அறிய அவைகளுக்கு வசதியில்லை. இதுவரையில் அறிந்து கொள்ள சிரத்தையுமில்லை. இன்று வாளாவிருப்பதற்கில்லை. வலுவான எதிரிகளை வெல்ல பலம் பூராவும் தேவை. சங்கிலியின் ஒரு கரணையில் வீரல் கண்டாலும் பலத்தைப் பாதிக்கும். கவலைக்குக் காரணம் அதுதான்.

இதைப் பார்க்கும் போது பழமொழியொன்று ஞாபகத்திற்கு வருகிறது. இடாதவர்களைக் கேட்பாரில்லை; இடுகிறவர்களையே கண்டிப்பர்! இந்தியாவுக்கு யோசனை சொல்பவர் இங்கிலாந்தின் மீது சற்று கவனத்தைத் திருப்புகிறதுதானே! இந்தியாவிலே சுயாட்சிக் கிளர்ச்சி நேற்றோ இன்றோ பிறந்ததல்ல; வெகு நாளைய கோரிக்கை. நல்ல நாளிலே காது கொடுக்கவில்லை. நெருக்கடி நேரத்திலும் விட்டுக்கொடுக்க மனமில்லை. நிர்ப்பந்தம் தாங்காமல் விட்டுக் கொடுத்தாலும் வசையான அதிகாரங்களை விலக்கி வைத்துக்கொள்ளுகிறார்கள். வெளித் தோற்றம் வேறு; உள் வயணம் வேறு. இந்தியர் பிடிவாதக்காரர் அல்ல. தர்ம நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர். உலகத்தின் நிலையான க்ஷேமத்தில் அக்கரையுள்ளவர். அதை ஆக்கவும் காக்கவும் அதிகாரம் கோருகின்றனர். சுயாட்சி பெற உரிமையுண்டு; வசதி தேடிக்கொள்வது அவர்கள் பொறுப்பு.

காங்கிரஸ் திட்டம் வகுத்துக் காரியத்தில் இறங்கும்போது யோசிக்கவேண்டிய விஷயம் வேறு. திட்டத்திற்குத் தியாகம் அஸ்திவாரம். தியாகம் செய்யப் பலர் பக்குவப்பட்டிருக்கின்றனர். எல்லாரும் பக்குவப்படவில்லை; திட்டம் பலன் தர எல்லாருடைய உதவியும் தேவை. எல்லாரும் கலந்து, கொள்கையில் ஆரம்பிக்கும் ... யக்கம் கட்டுக் கடங்குமா? நாட்டிலோ குறைகளுக்குக் குறைவில்லை. கசப்புமலிந்து கிடக்கிறது. கிளப்புவது எளிது. அடக்குவது எளிதல்ல. அடங்காவிட்டால் விஷப் பரீக்ஷையாக முடியும். யோசிக்க வேண்டிய விஷயம் அது. ... நாடு. எளிய காலக்ஷேபம் கூட இன்றைக்குக் கஷ்டம். துர்தசையில் பரீக்ஷை பார்ப்பது பொருந்துமா? மக்களிடையே பரஸ்பர நம்பிக்கையாவது இருந்தால் சற்று ... கொள்ளலாம். அதுவுமில்லை. வகுப்பு மாத்சர்யம் வலுவு... க்கிறது. நல்லது சொன்னாலும் செய்தாலும் பொல்லாத... டுகிறது. இந்த நிலைமையில் தீவிரத் திட்டத்தை ஆளு முன், ஒரு முறைக்குப் பலமுறை யோசிக்க வேண்டும். ... மகாத்மாவுடையது. நிஷ்கர்மமாக நிதானிக்கக் கூடியவர் அவர் தான். அவரை மீறிப் பேசப் பலர் தயங்குவர்.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட இன்னும் இரண்டு வார காலம் இருக்கிறது. நெருக்கடியை யாரும் ... விரும்பவில்லை. தவிர்க்கவே எங்கும் கவலை. சீனாவும் அமெரிக்காவும் சிரத்தை காட்டி வருவதாகச் சொல்லுகிறார்கள். ஒரு அளவுக்கு மேல் அது செல்லாது. ... மிகைப்படுத்துவதில் லாபமில்லை. அவர்களுடைய நல்லெண்ணத்தின் அறிகுறியாகவே அதை மதிப்பிடவேண்டும். ... நல்லெண்ணம் இன்றைக்கு உதவாவிட்டால் நாளைக்கு உதவலாம். அதையும் கவனிக்க வேண்டும். பெரிய ...; பல ... கொண்டது. ... கட்டு முன் பொறுமையும் பொறுப்பும் காட்ட வேண்டும்.

(சென்ற மாதம் 23-ம் தேதியன்று எழுதப்பட்டது.)

காந்திஜியின் கட்டுரை

மகாத்மா ஹரிஜன் பத்திரிகையில் "அஹிம்ஸையுடன் கூடிய காரியத் திட்டத்தில் உபவாசத்திற்குள்ள இடம்" என்ற தலைப்புடன் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"போராட்டம் எதையும் ஆரம்பிக்கக்கூடாதென்றே நாம் முயன்று வருகிறோம். அதற்காக நமது முழு முயற்சியையும் செலவிட்டு வருகிறோம். அப்படியும் போராட்டத்தை ஆரம்பிக்க நேர்ந்துவிட்டால், அது பலிப்பதற்கு அஹிம்ஸை வழியை அநுஷ்டிக்க வேண்டியது அத்யாவசியம். அதில் உபவாசம் என்பது முக்கியமானதொரு அம்சம். அதிகாரிகளுடன் சச்சரவு ஏற்பட்டால் அப்போதும், வேண்டுமென்ற பலாத்காரச் செயலில் நம்மவர் இறங்கினால் அவர்களை எதிர்த்து நிற்க வேண்டிய நிலைமையிலும் உபவாசத்துக்கு இடமுண்டு"

* * * *

தலைவர் கருத்து

காங்கிரஸ் தலைவர் மௌலானா அபுல்கலாம் ஆஸாதைப் பத்திரிகை நிருபர் ஒருவர் கண்டு மகாத்மாவும், பண்டித நேருவும் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்தபின் காங்கிரஸோடு இனி சமரசம் பேசிப் பயனில்லை என்ற ஒரு அபிப்பிராயம் இருக்கிறதே, அது அந்த அபிப்பிராயத்துக்கு ஆதாரமுண்டா? எனக் கேட்டதற்கு மௌலானா ஆஸாத் பின்வருமாறு கூறினார்:—

இந்தியாவின் சுயேச்சை உரிமையைப்பற்றி தாங்கள் குறிப்பிடுவதானால் அந்த விஷயத்தில் மத்தியஸ்தத்துக்குச் சற்றுமிடமில்லை. அது ஜீவாதாரமான கொள்கை. அதை நேச தேசங்கள் அங்கீகரித்தேயாக வேண்டும். ஆனால் யுத்த கால ஏற்பாடாக எதையாவது ... தானால் காரியக்கமிட்டி, தீர்மானத்தில் சமரஸத்துக்கு இடமிருக்கிறது. அதற்கு வழியும் ... பட்டிருக்கிறது. ... விதமான விஷயங்களை ... சமரஸப் பேச்சு ... தீர்த்து ... என்பது என்து ... அபிப்ராயம்.

சென்றவார நிகழ்ச்சிகள்

... உபதேசம் ...

இந்த இதழில் இருப்பவை

★

ஹித-உபதேசம் (ஸ்ரீ ஸி. ...
மீண்டும் பிறவி வாய்த்தால் ...
கப்பல் கவிழ்ந்தது (சிவக சிந்தாமணி ...
விஜயனின் காதலி (தொடர் ...
உமா சங்கரன் ...
சங்கீதம் (த்யாக ...
துரத்ருஷ்டம் மறைந்தது (ஸ்ரீ எ. எஸ். பி. ஐயர், ...
காமாக்ஷியின் கண் ... (உருவ...
ராமேஸ்வரம் போனாலும்! (ஸ்ரீ வி. ஸி. கோ...
சர்வதேச ஸ்திரீ (சின்...
அரசனும் விறகு வெட்டியும் (சிறு...

மீண்டும் பிறவி வாய்த்தால்..!

★

புரொபஸர் ஸர் ஸி. பி. ராமனுக்கு சமீபத்தில் ப்ராங்க்ளின் ப[illegible] கிடைத்ததை நேயர்கள் அறிவார்கள். பௌதிக சாஸ்திரத்தில் இவர் நிகரற்ற சிறப்பு நிரம்பியவர் என்பதும் யாவரும் அறிந்ததே. சமீபத்தில் "மறுபடியும் பிறவி வாய்த்தா[illegible]களுக்கு எந்தக் காரியம் [illegible]தானமாக இருக்கும்?" என்று கேட்டபோது அவர் அளித்த [illegible]யே அடியில் பிரசுரமாகும் கட்டுரையாகும். விஞ்ஞான சாஸ்திரியான ஸர். சந்திரசேகர வெங்கட ராமன் வானசாஸ்திரியாக விருக்க விரும்புவதன் காரணத்தை நீங்களே இதில் படித்தறிய லாம். [illegible] கருத்தை அவர் வெகு தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார். இதற்கு முன்பு இதே மகுடத்துடன் மஹாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரும், திவான் பஹதூர் டாக்டர் எஸ். கிருஷ்ண [illegible] ஐய்யங்காரும் எழுதிய கட்டுரைகளை பல அன்பர் படித்து ரஸித்ததே, இந்தத் தொகுதி தொடர்ந்து வெளி வருவதற்கு[illegible]ம்.

புரொபஸர் ஸர் ஸி. வி. ராமன் எழுதியது.

[illegible]கையின் ரகஸியங்கள்

[illegible]ாரு முறை பிறவி வாய்த்து[illegible] என் [illegible] தொழிலை மேற்கொள்ள[illegible] வானசாஸ்திரியாக [illegible] [illegible]வேன். [illegible] காலமும் ஆகாச [illegible]நோக்கிக்கொண்டு [illegible] நக்ஷத்திரங்களின் கதி [illegible] காலம் போக்க வேண்டும் என்பது [illegible] ஒரு ஆசை மட்டும் இதுவரை [illegible]கயின் ரகசியங்களைக் [illegible] பிடித்து. [illegible]த்துக் கொள்[illegible]ர்களுக்கு [illegible]த்தையுடன் [illegible]வதே [illegible] அபிப்பிராயம்: [illegible]நக்க முடியாது

[illegible]

[illegible]ம் சித்தி [illegible]ருந்தது. என்னி [illegible]ானத்தை உற்று [illegible] சுமார் ஏழு [illegible]ஜார் தெருவில் [illegible]டி மீது அதை [illegible] குருவின் சலன கதியை நான் கூர்மையாகக் கவனித்து வந்தேன். நான் கண்டதைக் குறிப்பெடுத்தும் வந்தேன்; இவ்விதம் சில படங்களையும் நான் தயாரித்தேன். அவை மிகவும் விரிவானவை: பல நுணுக்கமான [illegible]சங்களும் அடங்கியவை.

என் ஆசா பங்கம்

ஆனால் துரத்ருஷ்டவசமாக, அந்த 'டெலஸ் கோப்' பின் தூரத்ருஷ்டி ச[illegible] அதிகமாக இராததும், நான் அதை நிறுவியிருந்த இடம் என் காரியத்திற்குச் சற்று ப்ரதி கூலமாயிருந்ததும் நான் அதிகம் சாதிக்க முடியாமல் செய்துவிட்டன; என் ஆசைக்கு இவ்வாறு பங்கமேற்பட்டது.

என் பரம திருப்தி

மேனாடுகளில் நான் சுற்றி வந்தபோது, உலகத்திலேயே சிறந்தவை எனக் கொண்டாடப்படும் பல ஜோதிர்மண்டல ஆராய்ச்சி நிலயங்களை நேரில் போய்ப் பார்த்திருக்கிறேன்; வட அமெரிக்காவில பஸிபிக் மஹா சமுத்திரத்தின் கரையோரமாக இருப்பவை மிகப் பிரசித்திபெற்றவை. கலிபோர்னியாவில் மவுண்ட் வில்ஸன் ஆராய்ச்சி நிலயத்தில் நூறு அங்குலம் அகலமுள்ள பெரிய பூதக் கண்ணாடி ஒன்று இருக்கிறது; அதன் மூலமாக ஆகாயத்தை நான் பார்த்தபோது எனக்கேற்பட்ட உவகைக்கும் பேரின்பத்திற்கும் ஆச்சரியத்திற்கும் எல்லையே கிடையாது. என்

வாழ்க்கையிலேயே இதைக் காட்டிலும் சிறந்த சந்த[illegible]ங்கள் சம்பவிக்கமாட்டா என்ற எண்ணமும் என் உள்ளத்தில் உதித்த துண்டு. இங்கு சென்று வந்த பின்பு எனக்கேற்பட்ட ஆத்ம திருப்தியையும், பூன மகிழ்ச்சியையும், நான் பல முறைகள் பல இடங்களில் வெளிப்படுத்தி வந்தேன். மவுண்ட் வில்ஸன் விஜயத்தைப்பற்றி நான் பிரஸ்தாபிக்காத பிரசங்கமே அப்போது கிடையாது என்றும் கூறலாம்.

வானசாஸ்திரி வாழ்க்கை

இது விஷயமாகச் சிலருக்குச் சில விதமான சந்தேகங்கள் தட்டக்கூடும்: ஆகவே அவற்றை முதலிலேயே அகற்றி விடுவது தான் உசிதம். வான சாஸ்திரியின் வாழ்கை வெகு சாதாரணமானது என்று எவராவது எண்ணினால், அதைத் தாமதமின்றித் திருத்திக்கொள்ளவேண்டும். இரவ முழுதும் அவர் கண் விழித்திருக்கவேண்டும்: ஊரில் எல்லோரும் சுகமாகப் படுத்துறங்கிக் கொண்டிருக்கும்போது அவர் மட்டும் தமது கடமையில் கருத்தாயிருக்க வேண்டும்: அதிகக் கவனமாயும் இருக்கவேண்டும். அது மட்டுமல்ல: பகலிலும் அவருக்கிருக்கும் வேலை குறைவானதல்ல: தாம் ராத்திரியில் கண்ட உண்மைகளையும் அறிந்த விஷயங்களையும் கொண்டு சில முடிவுகளைக் குறித்தல் வேண்டியதாகிறது: அவற்றை விளக்கவும், பிறருக்கு வழி காட்டவும் அவர்கள் பொறுப்பாளியாகின்றனர். ஆகையால் வான சாஸ்திரியின் தொழில் அவ்வளவு "சுலபமானது" அல்ல: அது எவ்வளவோ கஷ்டமானது.

ஆசையும் சித்தியும்

அவர்கள் படும் கஷ்டங்களுக்குத் தக்க பரிஹாரம் இராமல் இல்லை: இவற்றுள் முக்கியமானது, வான சாஸ்திர நிலயங்கள, இப் பூமண்டலத்திலேயே கொண்டாடத் தக்க பிரதேசங்களில் அமைக்கப் பட்டிருப்பதேயாகும்: மேலே பார்த்தால் நிர்மலமான ஆகாசம்: சுகமான சீதோஷ்ண ஸ்திதி; ஜன சந்தடி இராத இடம்: ஆர்ப்பாட்டமும் ஆரவாரமும் அற்ற பிரதேசம்: நகரங்களுக்கு நேர்மாறான நிலை: இதற்கும் அதிகமாக இன்னும் என்ன வேண்டும்? இவ்விஷயத்திலும் மற்றும் இதுபோன்ற இதர விஷயங்களிலும் நமது ஆசைக்கும் அது பூர்த்தி பெறுவதற்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை என்பது துரதிருஷ்டகரமானது. நாம் ஆவல்கொண்டிருப்பதால், நமது நோக்கம் நிறைவேறும் என்று நினைப்பதற்கில்லை.

விஞ்ஞானியின் விருப்பம்

பின் நிற்பதேன்?

முன்னொரு காலத்தில், வான சாஸ்திரப் பகுதியில் இந்தியாவே முன்னணியில் நின்றது. இப்போதுமற்ற நாகரீக நாடுகளுக்கெல்லாம் பின்வாங்கி நிற்கிறது. நம் நாட்டின் பூகோளஸ்திதி வானசாஸ்திரப் பயிற்சிக்கு மிகவும் பொருத்தமானதாகவும் இத்துறையில் ஆராய்ச்சிக்கு மிகவும் ஏற்றதாகவும் இருந்தபோதிலும், பின்னடைந்திருப்பது கவனிக்கத்தக்கதாகும்: நம்நாட்டிலேயே இந்த சாஸ்திராப்பியாசத்திற்கு தகுதி வாய்ந்த பிரதேசமும் கல நிலையும் இருக்கும்போதிலும் நாம் பின்னே இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசை பலன் பெற

என் ஆசை பலிதமடைய வேண்டுமானால், இந்தியாவிலும் உத்தம நன்கொடையாளர்கள் தோன்ற வேண்டும். லிக், யெர்க்ஸ், யாப், டன்லாப் போன்ற பரோபகார புத்தியுள்ளவர்கள் இங்கும் முன் வர வேண்டும். வான சாஸ்திரத்தில் தங்களுக்கிருந்த விருப்பம் காரணமாக எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்க அவர்கள் தயாராயிருந்தனர். தங்கள் நாட்டின் சிறப்பையும் மேன்மையையும் பிரதானமாக உத்தேசித்து, உயர்தர நிலயங்களை அவர்கள் உவப்புடன் கட்டிக் கொடுத்தனர்.

வான சாஸ்திரம் மிகப் புராதனமானது ஆனால் மிகவும் நவீனமானது கூட. இந்த சாஸ்திரத்தைப் பலர் அப்யஸிப்பது அதி அவசியமாகும். [illegible]ரத்தையுடன் பயின்றால் நல்ல பலனையே தரும். இவர்க[illegible]ருவராக இருப்பதை[illegible]லும் மேலான பாக்கியம் எனக்கு கிடைக்கும் என்[illegible]ான் கருதவில்லை.

நோபல் பரிசு பெற்றவர்கள்- 19[illegible]

ஸ்வீடன் தேசத்தில் ஸ்டாக்ஹாம் நகரத்தில் நோபல் பரிசுபெற்ற எட்டு பேர்களுக்கு அதற்குரிய கௌரவ மளிப்பு விழா நடைபெற்றது. இதில் ஏழு பேர் புருஷர்; ஒருவர் ஸ்திரீ. ஸ்வீடன் தேசத்து மன்னர் ஐந்தாம் கஸ்டாவ் இவ்விழாவில் தலைமை வகித்தார். கௌரவம் வழங்கப்பெற்றதும் மேற்படி படம் பிடிக்கப்பட்டது. பின்னே நிற்பவர்கள் (இடதிருந்து) எம். ஸ்வேட் பர்க், 2. எம். யூலர், 3. எம். டாலின், 4. புரொபஸர் ஹான்ஸ் பிஷர் (ரஸாயன பதக்கம்) உட்கார்ந்திருப்பவர் (இடதிருந்து) ஸர் க்ளேர் லூயி (இலக்கியம்) 2. ஸர் ஸி. வெங்கட ராமன் (பௌதிகம்) 3. மேடம் ஸாகர்லாப், 4. டாக்டர் கார்ல் லாண்ட் ஸ்லீனர் (வைத்தியம்). 5. எம். பாராளி.

★

சிறந்த அறிவாளி என எல்லோராலும் கொண்டாடப்படும் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், நிர்வாக நிபுணரான உதய்பூர் திவான் ஸர். டி. விஜயராகவாசாரியார் முதலிய பிரபலஸ்தர்கள் இதே தலைப்புடன் எழுதியிருக்கும் வியாசங்கள் பினபு ஒவ்வொன்ருக வெளிவரும்.

★

வக சிந்தாமணி - 6.

கப்பல் கவிழ்ந்தது

★

வ. வேணுகோபாலன் எழுதியது

இராசமாபுரத்து வணிகன் சீதத்தன் என்பவன் கடல் கடந்து சென்று பொருள் சேமிக்க எண்ணினான். அவனுக்குப் பல கப்பல்கள் இருந்தன. ஒரு நாள் தன் கப்பலொன்றில் விற்றற்குரிய பண்டங்களை ஏற்றிக் கொண்டு, நண்பர் பலருடன் கடல் வழியே பிரயாணம் செய்தான். கடலில் பல நாட்கள் பிரயாணம் செய்து, ஒரு தீவை அடைந்தான். அந்தத் தீவில் உள்ள அரசனைச் சென்று கண்டு, அநுமதி பெற்றுத் தான் கொணர்ந்த பண்டங்களை விற்றுப் பொருளைக் கைக்கொண்டு, சில நாட்கள் அங்கே மகிழ்வுடன் தங்கியிருந்தான். பின்னர் அத்தீவுக்குத் தலைவனான அரசனிடம் விடை பெற்றுக் கப்பலேறி இராசமாபுரத்தை நோக்கிப் பிரயாணம் செய்தான்.

நடுக் கடலில் செல்லும் கப்பலில் தன் நண்பர்களுடன் உல்லாஸமாகப் பேசிக் கொண்டு உவகையால் மனமயங்கி இருந்தான் சீதத்தன். அந்தச் சமயத்தில் திடீரென்று பெருங்காற்று வீசியது; உடனே மிகக் கடுமையாக பேரிடியுடனும் மின்னலுடனும் மழை பெய்தது. எங்கு பார்த்தாலும் கொந்தளிக்கும் கடலின் அலைகள் மலைகள் போல் தோன்றி, ஒன்றோடொன்று மோதிக் கொண்டன; அதனால் கப்பல் நிலை கலங்கித் தத்தளித்தது. கப்பலிலிருந்தவர்கள் இதைக் கண்டு [illegible] உடல் நடுங்க அங்குமிங்கும் ஓடினர். உவகையோடு பேசிக் கொண்டிருந்த சீதத்தன் மனங் கலங்கி அசைவற்று நின்றான். பின்னர் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு, "நண்பர்களே! பயம் வேண்டாம். ஆழுக்கண் வந்த போது நடுக்கமின்றி அதை நீக்க. அவ்விதமின்றி அழுது புலம்பியவர் எவருமிலர். வாழ்நாள் நமக்கு இருக்குமானால் நடுக்கடலில் கப்பலமிழ்ந்தினும் பிழைத்து விடுவோம். வாழ்நாளின்றேல் நாம் உண்ணும் நீரே நம்மைக் கொன்று விடும். ஆதலால் மனம் கலங்காது அருகனை வணங்கியிருங்கள்" என்று நண்பர்களைத் தேற்றினான்.

இவ்வாறு கூறிய சீதத்தன் சிறிது மயக்கமுடன் தனியே போய்த் தலையைத் தொங்க விட்டு ஓரிடத்தில் உட்கார்ந்தான். அவன் கண்கள் சுழன்றன. அப்பொழுது கப்பலின் பாய்மரம் முறிந்து வீழ்ந்தது. உடனே கப்பல் கடலுள் கவிழ்ந்து மூழ்கியது. சீதத்தனுடன் வந்த தோழரும், அவன் தேடிய பொருளும் கப்பலோடு கடலில் ஆழ்கவே, சீதத்தன் ஓர் ஒடிந்த பாய் மரத்துண்டைப் பிடித்துத் தெப்பமாகக்கொண்டு நீந்தினான். புயற்காற்றின் உதவியால், சீதத்தன் நீந்திப் பக்கத் தீவின் கரையை அடைந்தான். கரையேறிய சீதத்தன் சிறிது ஆறுதலுற்றவனாய் நடந்து சென்று அங்குள்ள ஓர் சோலையில் புகுந்து, தன் தோழரை நினைத்து புலம்பிக்கொண்டே உலாவினான்.

அவ்வழியே அப்போது வழிப்போக்கன் போல வந்த தரன் என்னும் வித்தியாதரனைக் கண்டதும் சீதத்தன் தனக்குநிகழ்ந்த துன்பத்தை அவனிடம் கூறிப் புலம்பினான். தரன், சீதத்தன் சொல்லுவதைக் கேட்டு தனக்குள் மனமகிழ்ந்து, அவனைத் தேற்றி, "அன்பா! வருந்தாதே! யான் விஞ்சை வல்லவன். ஆதலால் நீ இழந்த பொருளையும் தோழரையும் கப்பலுடன் மீட்டுத் தருகிறேன். இனி யான் சொல்வதைக்கேள். இதோ இருக்கும் மலையின் பெயர் [illegible]தண்டகிரியென்பது. இம்மலையின் [illegible] போகவேண்டும். இதோ இருக்கும் மேழகப்பொறியில் [illegible] ஏறிக்கொள்" என்று கூறினான்.

சீதத்தன் மனமகிழ்ந்து தரன் [illegible]படி மேழகப்பொறியில் [illegible] உட்கார்ந்தான். தரன், [illegible] இயக்கி மலையிலுச்சி[illegible] அடைந்தான். உடனே இருவரும் பொறியை விட்டு இறங்கிச் சுற்றுக் களைப்பாறினர். அவ்விடத்தே மரத்தில் தணிந்து தொங்குகின்ற பழங்களைப் பறித்து உண்டனர்.

"அன்பா! நாம் இந்தத் திசை நோக்கி [illegible] காவதம் சென்றால் வித்தியாதர நகரம் உள்ளது. அங்கே போய் வருவோம்" என்று தரன் கூறினான். சீதத்தன் தரனுடைய மொழிப்படியே சம்மதித்தான். இருவரும் வித்தியாதர நகரத்தை நோக்கிச் சென்றனர். செல்லும்போது அங்கங்கே தோன்றும் மலைக் காட்சிகளைக் கண்டு களித்தான் சீதத்தன், மலைகளையே மதிலாகக் கொண்டு விளங்கிய வித்தியாதர நகரத்திற்குள் இருவரும் புகுந்தனர். அங்குள்ள மகளிரழகையும், ஆடவர் [illegible]யும் அவர்களது பொலிவான போக்கையும் கண்டு [illegible] அதிசயித்தான். தரன் சீதத்தனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவளித்து உபசரித்தான். இருவரும் சிறிது பேசிக்கொண்டிருந்தனர்.

"அன்பா! இந் நகரத்திற்கு அரசன் கலுழவேகன் என்பவன். அவன் மனைவி தாரணி என்பவள். அவர்களுக்குக் காந்தருவதத்தை என்ற குமாரி ஒருத்தி உள்ளாள். அவள் மணம் செய்வதற்குரிய பருவத்தினளாயிருக்கின்றாள். அவள் ஜாதகத்தைப் பார்த்த ஜோதிடனொருவன், 'இராசமாபுரத்தே தான் அவளுக்கு மணம் நிகழும்' என்று சொன்னான். ஆனால் பல அரசர்கள் அவளழகிலீடுபட்டு மணம் செய்து கொள்வதற்கு இங்கே வந்து காத்திருக்கின்றனர். அரசன் எண்ணம் யாதென்றும் தெரியவில்லை. இச்சமயம் நீ வந்தபடியால் அரசன் கருதியதை யறியலாம். ஆதலால் நாம் அரசனைக் கண்டு வருவோம்" என்று சீதத்தனிடம் தரன் கூறினான். சீதத்தன் மறுமொழி கூறாமல் அதற்கு உடன்பட்டான். தரன் சீதத்தனை கலுழவேகனிடம் அழைத்துச் சென்றான்.

கலுழவேகன் தரனுடைய வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தான். அச்சமயம் சீதத்தனுடன் தரன் அவன் முன் தோன்றினான். கலுழவேகன் அவ்விருவரையும் வரவேற்று உபசரித்தான். சீதத்தன், தன் வரலாற்றைத் தரன் முகமாக கலுழவேகனுக்கு உணர்த்தினான். கலுழவேகன் உவகையோடு சீதத்தனைத் தனியே அழைத்துச் சென்று, அந்தப்புரத்தே உள்ள தன் மனைவி தாரணியைக் காட்டி அறிமுகம் செய்வித்தான். தாரணியும் ஆவலுடன் சீதத்தனுக்கு முறைப்படி விருந்து செய்து உபசரித்தாள். அப்பொழுது தாரணியின் அருகில் பூங்கொடியைப் போல் சாய்ந்து நின்ற நங்கையைக் கண்டு சீதத்தன் அதிசயமுற்று நின்றான். அருகிலிருந்த கலுழவேகன், சீதத்தன் குறிப்பை யறிந்து, "அன்பா! இந் நங்கை எனது மகள்; காந்தருவதத்தை என்று பெயர். உனக்கும் மகளாகும் முறையுடையவள். இசையில் வல்லவள். இவளை இராசமாபுரம் அழைத்துச்சென்று, அந்தணர், அரசர், வணிகர் என்ற முக்குலங்களொன்றில் உதித்த எந்த ஆண் மகன், இவளை இசையில் வென்றாலும் அவனுக்கு மணம் செய்து கொடுத்து விடு; இது உன் கடமை. உன்னை இங்கு அழைத்த காரியமும் இதுவே" என்றான். அவன் மொழியைக்கேட்ட சீதத்தன் மனமகிழ்ந்து, "அரசே! அடிமைப் பணி செய்வேன்" என்று மறுமொழி கூறி உடன்பட்டான்.

அருகிலிருந்த அரசன் மனைவி தாரணி, அம்மொழியைக் கேட்டு மனம் வருந்தி நின்றாள். இவ்வித்தியாதர நகரத்தே ஒருவராயினும் இவளை இசையில் வென்று மணக்க இயலவில்லையே என்று ஏங்கி, "இந்த இழிவு இவளுக்குத் தக்கதே" என்று வெறுத்துக் கூறினாள். அதைக்கேட்ட கலுழவேகன் தாரணிக்கு ஆறுதல் கூறினான்.

"இதுகாறும், காந்தருவதத்தையை இசையில்வென்று மணப்பவர் ஒருவருமில்லை. இவளுக்கோ மணப்பருவம் வந்துவிட்டது: ஆதலால் இராசமாபுரத்தே தான் இவள் கணவனை அடைவாள்; மகளிர்க்குக் கணவனோடு இருந்து வாழ்தலே இன்பம் வருந்தாதே" என்று தாரணியைத் தேற்றினான் தாரணி மனந்தேறி மகிழ்ந்து, தன் மகளுக்குக் கொடுக்கவேண்டிய ஆடையாபரணங்களைக்கொடுத்துத் தன்னைப் பிரிவதற்கு மனம் வருந்தும் காந்தருவதத்தைக்கு ஆறுதல் கூறினாள். கலுழவேகன் பொன்னும் மணியும் நிறைந்த பல பெட்டிகளையும், வாள் வேல் முதலிய ஆயுதங்களையும், வீணை முதலிய வாத்தியங்களையும் அளித்துத் துணையாக நூற்றுக் கணக்கான மகளிரையும் அனுப்பினான். பின்னர் காந்தருவதத்தையின் உயிர்த்தோழியும், இசையில் வல்லவளுமான வீணாபதியென்னும் பேடியையும் உடனனுப்பினான். காந்தருவதத்தை தன் பரிவாரங்களுடன், தாய் தந்தையரை வணங்கி விடைபெற்று, சீதத்தனுடன் புறப்பட்டாள். கலுழவேகன் சீதத்தனையும் வீணாபதியையும் நோக்கி, "நீங்கள், காந்தருவதத்தைக்குத் தந்தையும் தாயும் போன்று இருந்து காப்பாற்ற வேண்டும்" என்று மொழிந்து அனுப்பினான். யானை குதிரை முதலியவற்றுடன் வீரர்கள்சூழ, சீதத்தன் காந்தருவதத்தையுடன் கடற்கரையை அடைந்தான் அப்போது உடன் வந்த தரன். சீதத்தனை நோக்கிப் புன்முறுவல் செய்து, "அன்ப! முன்பு ஜோதிடன் கலுழவேகனை நோக்கி, நின்மகளை இராசமாபுரம் கொண்டு போதற்குரியவன் கடலிடத்துள்ளான். அவனை அழைப்பி என்றான். அரசன் என்னை அது செய்வதற்கு அனுப்பினான். யான் உன்னைக் கப்பலில், என் விஞ்சையால் மயக்கிக் கொணர்ந்து கடற்கரையில் உலாவச் செய்தேன். பின் அரசனிடம் அழைத்துச் சென்றேன்; உண்மையில் உன் தோழரும் பொருளும் கப்பலுடன் கடலில் கவிழவில்லை. இதோ உன் தோழர் பொருளுடன் கப்பலில் உள்ளனர் பார்!" என்று கூறி மறைந்தான்.

சீதத்தன் கப்பலில் உள்ள தன் தோழர்களைக் கண்டு ஆச்சரியமடைந்து நிகழ்ந்ததை அவர்களிடம் கூறினான்.

"நண்பா! நாங்கள் ஒன்றும் அறியோம். நீ கண்டதெல்லாம் எமக்கு நாடகம் போன்றுள்ளது" என்று கூறிக் கைகொட்டிச் சிரித்தனர் தோழர்கள், சீதத்தன், காந்தருவதத்தை முதலியவர்களுடன் கப்பலில் ஏறிப்பிரயாணம் செய்து, இராசமாபுர நகரைச் சேர்ந்தான். காந்தருவதத்தையையும் மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு தன் இல்லத்தை அடைந்தான்.

அடுத்தவாரம்: இசைப்போர்

முன் கதைச் சுருக்கம்

★

விஜயன் ஜமீன்தார் ஹரிஹர கோஷாலின் புத்திரன்: சீமை சென்று திரும்பியவன்: மனைவி இறந்துவிட்டாள்: ஒரே பிள்ளை தான் அவனுக்கு. கலேசபுரத்தில் இருந்த வீட்டைத் தானே நேரில் போய் காலி செய்வதற்காக அவன் வந்தான்: தன் சிறு பிள்ளையையும் தன்னுடன் அழைத்துக்கொண்டே போனான். வீட்டில் அவன் எதிர்பார்த்த ஆஸாமி இல்லை. அனுராதா மட்டும் இருந்தாள். விஜயன் அவ்விடத்தில் தங்கியிருக்க நேரிடுகிறது. ஆகவே விஜயனின் புத்ரனை அனுராதா மிகுந்த பரிவுடன் கவனித்து வருகிறாள்: வித்தியாசமின்றி நடத்திவருகிறாள்: இது விஜயனுக்குத் தெரியும். ஆகவே அவனுக்கும் அனுராதாவுக்கும் இது காரணமாக அடிக்கடி பேச்சு நேரிடுவதுண்டு. இந்த நிலைமையில் ஒரு நாள் விஜயனிடம் ஒரு கிழவர் வந்து தாம் அனுராதாவை அவள் இஷ்டத்திற்கிணங்கி மணக்க முடிவு செய்திருப்பதாகக் கூறினர்: இந்தச்செய்தி விஜயனைத் திடுக்கிடப்பண்ணுகிறது. அவன் உடனே அனுராதாவை அண்டி இதைப்பற்றி விசாரிக்கிறான். இருவரும் சம்பாஷிக்கின்றனர். மேலே என்ன பண்ணுவதென்று கூற விஜயனுக்குத் துணியவில்லை.

* * * * *

நமது தொடர் கதை

விஜயனின் கா[illegible]

★

டாக்டர் சாட்டர்ஜி எழுதிய[illegible]

5

கல்கத்தாவிலிருந்து, பக்ஷணங்கள், பழ வகைகள், காய்கறிகள், மிட்டாய் தினுசுகள் யாவும் வந்தன. விஜயன் வேலைக்காரனிடம், சமயலறைக்கு முன் கூடையை இறக்கி வைக்கச் சொல்லி "உள்ளே கட்டாயம் இருப்பார்கள்!" என்றான்.

உள்ளே இருந்து "ஹூம்" என்று பதில் வந்தது.

"தங்களைக் கூப்பிடக் கூடக் கஷ்டமாக இருக்கிறது. எங்கள் சமூகமாக இருந்தால் மிஸ் சட்டர்ஜி, மிஸ் அனுராதா என்று சுலபமாக அழைக்க முடியும். ஆனால் இங்கே அவைகளொன்றும் நடவாது. தங்கள் பையன்கள் யாராயினும் இருந்திருந்தால் கூட உங்கள் அத்தையைக் கூப்பிடு என்று சொல்லி காரியத்தைப் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் இந்த சமயம் அவர்களும் இல்லை; என்னவென்று சொல்லி உங்களை அழைப்பது சொல்லுங்கள்?" என்றான் விஜயன்.

அனுராதா கதவருகில் வந்து "தாங்கள் எஜமானர்! என்னை ராதா என்று சொல்லி அழையுங்கள்" என்றாள்.

"அழைப்பதில் யாதொரு குற்றமும் இல்லை. ஆனால் எஜமான் என்ற தோரணையில் அல்ல. எஜமான அதிகாரம் இருந்தது ககன சட்டர்ஜியிடம், அவர் தான் மறைந்து விட்டாரே! தாங்கள் ஏன் என்னை எஜமானனென்று மதிக்க வேண்டும்! தாங்கள் எந்த வகையில் எனக்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்?" என்றான் விஜயன்.

இதற்கு உள்ளே இருந்து "அம்மாதிரி சொல்லாதீர்கள்! தாங்கள் எஜமானரே தான்" என்று பதில் வந்தது.

"அதைபபற்றி நான் தடை செய்யவில்லை. ஆனால் வயதைப் பற்றி தான் பார்க்க முடியும். நான் தங்களை விட வயதில் ரொமப பெரியவன். பெயரைச் சொல்லி அழைத்தால் அதற்காக வருந்தாதீர்கள்"

"இல்லை!"

நெருங்கிப் பழக வேண்டுமென்று, தன் சார்பாகத்தான் எவ்வளவு ஆவலும், வேகமும் காட்ட முடியுமோ அவ்வளவும் விஜயன் காட்டினான். ஆனால் எதிர்தரப்பிலிருந்து கொஞ்சம் கூட அதை எதிர்பார்க்க முடியவில்லை. எந்த விதத்திலும் அவள் எதிரே வர விருமபவில்லை. தவிரவும் சுருக்கமாகவும், மரியாதையுடனும் உள்ளே இருந்தே பதில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"வீட்டிலிருந்து கொஞ்சம், பக்ஷணம், காய்கறிகள், பழம், மிட்டாய் தினுசுகள் வந்திருக்கின்றன. இந்தக் கூடையை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். பையன்களுக்குக் கொடுங்கள்" என்றான் விஜயன்.

"இருக்கட்டும் எடுத்து வைத்திருந்து தேவையானபோது அனுப்பி வைக்கிறேன்!" என்றாள் அனுராதா.

"வேண்டாம்! அப்படிச் செய்து விடாதீர்கள்! எனது சமையற்காரனுக்கு நன்றாக சமையல் செய்யக்கூடத் தெரியாது. மத்யானத்திலிருந்து பார்க்கிறேன். சால்வையைப் போர்த்திக் கொண்டு படுத்துக்கொண்டிருக்கிறான். என்னவோ தெரியவில்லை. எங்கே உங்கள் நாட்டு மலேரியா வந்துவிடப் போகிறதோ என்று பயம்கூட ஏற்படுகிறது. படுத்துவிட்டால் பெரிய சங்கடப்படுத்திவிடுவான்" என்றான் விஜயன்

'மலேரியா எங்களிடம் இல்லை அவன் எழுந்திருக்காவிட்டால், தங்களுக்கு சமையல் யார் செய்வார்கள்?" என்றாள் அனுராதா.

"இன்று மத்யானம் என்னவோ ஆய்விட்டது, நாளைக் காலையில் யோசித்துக்கொள்ளலாம 'குக்கர்' தான் கூடவே இருக்கிறது. ஒன்றும் முடியாவிட்டால், அவனைக் கொணடே அதில் ஒரு வாய்ச் சோறு பொங்கச் சொன்னால் ஆய்விடுகிறது" என்றான் விஜயன்

"ஆனால் அதிலும் கஷ்டம் தானே?"

"இல்லை! எனக்குப் பழக்கமாகிவிட்டது: ஆமாம். இந்தப் பையன் கஷ்டபபட்டால் தான் என்னால் சகிக்க முடியாது. ஆனால் அந்தப் பாரத்தைத்தான் தாங்கள் ஏற்றுக்கொண்டுவிட்டீர்கள்! இன்று மத்தியானம் என்ன சமைத்தீர்கள்? கூடையைத் திறந்து பாருங்கள். ஏதாவது உபயோகமாகக்கூடியது இருந்தாலும் இருக்கும்"

"உபயோகமாகும்! ஆனால் இந்த வேளைக்கு நான் சமையல் ஒன்றும் செய்யவில்லை!"

"செய்யவில்லையா? ஏன்?"

குமாருக்கு உடம்பு கொஞ்சம் கணகணவென்றிருக்கிறது சமையல் செய்தால் சாப்பிட வேண்டுமென்று கூத்தடிப்பான: ஏதோ இருப்பதை சந்தோஷுக்கு போட்டுவிட்டால் போதுமானது!"

"உடம்பு சூடாக இருக்கிறதா? அவனுக்கா? அவன் எங்கே இருக்கிறான்?"

"என் [illegible]கையில் படுத்துக் கொண்டு சந்தோஷத்துடன் ஏதோ வம்பளந்து கொண்டிருக்கிறான். இன்று எங்கும் வெளியே போகாமல் என்னுடனேயே தூங்குவதாகச் சொல்லுகிறான்!"

"ஆனால் தூங்கட்டும் ஆனால் அதிக செல்லம்கொடுப்பதால் அவன் மறுபடி அத்தையை விட்டு விட்டு வீட்டுக்குவரக்கூட விரும்பமாட்டான. அது வேறு ஒரு புது உபத்திரவம் உண்டாகிவிடும்" என்றான் விஜயன்.

"ஒரு உபத்திரவமும உண்டாகாது குமார் சொல்வதைக் கேட்காத குழந்தையல்ல!"

"அவன் சொன்னதைக் [illegible] காதவனுக எப்படி ஆனானென்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆனால் அவன் தங்களை மட்டான பாடுபடுத்தவில்லை என்று தான் நான் கேள்விப்படுகிறேன்."

அனுராதா சிறிது நேரம் [illegible]மா இருந்து விட்டுப் பிற[illegible] "பாடு படுத்தினால் என்ன[illegible] என்னைத்தானே படுத்துகிறான்! வேறு யாரையும் படுத்தவில்லையே?" என்றாள்

"அது எனக்குத் தெரியும்! அத்தை யாவற்றையும் பொறுத்துக்கொள்வதாய் இருந்தாலும், பெரியம்மா அதை சகிக்க மாட்டாள். தவிரவும், என்றாவது அவனுக்கு மாற்றாந்தாய் ஒருத்தி வந்தால், இதை எல்லாம் அவள் பொறுக்கமாட்டாள். வழக்கம் கெட்டுப் போவதால் அவளும் கொடுமையானவளாக ஆகிவிடுவாள்!"

"பையனால் அவளும் துஷ்டனாக ஆகிவிடுவாளென்றால் அம்மாதிரி மாற்றாந் தாயை வீட்டிற்குள் ஏன் கொண்டுவருகிறீர்கள்? இல்லாவிட்டால்?"

"கொண்டு வர வேண்டியதில்லை தான். பையன்களுடைய போதாத காலத்திற்கு மாற்றாந் தாய்மார்கள் தாமே வந்து சேருகிறார்கள்! அப்பொழுது அவளுடைய கொடுமைக்கு அஞ்சி அத்தையின் துணையை நாட வேண்டி ஏற்படும். [illegible] ஒப்புக் கொண்டால்?" [illegible] என்றான் விஜயன்.

"தாயற்ற குழந்தையை அத்தை விட்டு விடமுடியாது. எவ்வளவு கஷ்டப்பட்டபோதிலும் சரி, எப்படியாவது அவைகளை வளர்த்து பெரியவர்களாக்கி விட்டுவிடுவாள்!" என்றாள் அனுராதா.

"பேச்சுக்குக் கேட்டு வைத்தேன்" என்று சொல்லி விஜயன் புறப்பட ஆரம்பித்தான் [illegible]

விநயமற்ற[illegible] னித்துக் [illegible] வார்த்தை [illegible] ன்.

"[illegible] ராதா. [illegible] டும். ஏ[illegible] உயிரோடு [illegible] கள் அவரை எவ்[illegible] மையுள்ளவராக எ[illegible] களா, அவர் அவ்வளவு[illegible] மையுடையவரல்லர். ஆ[illegible] சந்தோஷன் அவனுடை[illegible] தந்தையர் இருவரும் போ[illegible] டனர். புது அத்திம்பே[illegible] டில் அவனுக்கு இருக்க[illegible] கரியப்படாவிட்டால், என்ன செய்வீர்கள்? பற்றி ஆலோசித்[illegible] என்றான் விஜயன்

"அத்தைக்குத [illegible] கிடைக்கும்போது [illegible] குத் தங்க இடம் கி[illegible] போகிறதா?"

"கிடைக்க வேண்டி[illegible] ஆனால் நான் பார்த்த[illegible] அவ்வளவு நம்பிக்கைக்கு ஏற்படவில்லை!"

அந்த வார்த்தைக[illegible] ராதாவால் சிக்கி[illegible] சொல்லமுடியவில்லை. யோசிகக நேரமாயிற்[illegible] சாந்தத்துடன் ஆனால்[illegible] [illegible]ழுது மரத்தடி[illegible] [illegible] தங்க இடமிருக்[illegible] [illegible]ரும் தடுக்க முடியாது [illegible]ள்.

"விஷயம் அத்தைக்குத் தா[illegible] பொருத்தமாக இருக்கிறது [illegible]தை [illegible]க்கொண்டு விட முடியாது. ஆனால் இது நடக்ககூடியதல்ல. அந்தச் சமய[illegible] [illegible]ல் அவனை என்னிடம் அனுப்[illegible] விடலாம். அவன் குமாரின் தோழன். குமார் மனிதனானால் அவனும் மனிதனாகிவிடுவான் என்றான் விஜயன்.

உள்ளே இருந்து மறுபடி யாதொரு பதிலும் வரவில்லை விஜயன் சிறிதுநேரம் எதிர்பார்த்துக்கொண்டிருந்து விட்டுப்பிறகு வெளியே செல்லலானான்.

இரண்டு மூன்று மணி நேரங்களுக்குப் பிறகு, சநதோஷன் கதவுக்கு வெளியே வந்து நின்று கொண்டு "அத்தை தங்களைச் சாப்பிடக் கூப்பிடுகிறாள்" என்றான்.

"என்னையா?" என்று கேட்டான் விஜயன்.

"ஆமாம!" என்று சொல்லிவிட்டு அவன் சென்று விட்டான்.

அனுராதா சமையலறையில் ஆசனம போட்டிருநதாள், விஜயன் அதன் மீதிலமர்ந்து "இராப்பொழுது சுலபமாகக் கழிந்திருக்கும். தாங்கள் ஏன் இவ்வளவு கஷ்டம் எடுத்துக் கொண்டீர்கள்?" என்றான்.

அனுராதா அருகேதான் நின்று கொண்டிருந்தாள். ஆனால் பேசவில்லை [illegible]

[illegible] பரி[illegible]

அ[illegible]

தனிக் குடித்தனம்

சிறு கதை

★

ரா. வெங்கட்ராமன் எழுதியது

"ஊஸ், அப்பாடா" என்று சாய்வு நாற்காலியில் வந்து சாய்ந்தான் ராஜு.

"வந்து சேர்ந்தேளா! எங்கயானும் சுற்றி அலையறது. வீட்டுக்கு வந்ததும் உடம்பை முறித்துக்கொண்டு விழுகிறது. நல்ல உத்யோகம்! கிடக்கு இதை சாப்பிடுங்கள்" என்று சொல்லிக்கொண்டே கேஸரியையும் காபியையும் எடுத்து வந்து வைத்தாள் சீதா. "சீதா! உனக்கு 'பளீர், பளீர்' என்று இரண்டு அறை கொடுக்கணும் போலிருக்கிறது."

"எதுக்காகவாம், போனால் போகிறதென்று எப்ப வருவேள் என்று காத்திருந்து, சூடாக கேஸரியும் காப்பியும் கொடுத்ததுக்கா? அப்படி கை, விருவிரென்றிருந்தால் ஒங்கி தூணைக்கட்டி அறையுங்கோ."

"தூணிலே எதற்கு அறையணுமோ தெரியல்லையே! உன்னைத்தான் அறையவேணும்."

"அடிச்சேளானால் அப்புறம் தெரியறது!"

"என்ன பண்ணுவாயாம்?"

"ஏண்டாப்பா அடித்தோம்னு நீங்களே வருத்தப்பட்டுக் கொள்ளும்படியா பண்ணுவேன்."

"ஓகோ! எங்கே செய் பார்க்கலாம்" என்று கையை ஓங்கிக்கொண்டு போனான்.

"சரி, அடியுங்கோ!" என்று வாயை இறுக மூடியவாறு, கைகளை கட்டிக்கொண்டு நன்ருய் நிமிர்ந்து நின்ருள். மலர்க் கண்கள் அடிக்கடி இமைத்தன. முகத்தில் புன்னகை மின்ன, செக்கச் செவேலன கனிந்த கன்னத்தை காட்டினாள்.

அடிக்க மனம் வருமா, சொல்லுங்கள்! ஓங்கின கையை நிறுத்திவிட்டான்.

"நான் உன்னை அறைய, நீ மூஞ்சியை தூக்கிக்கொண்டு நிற்க; பிறகு நான் தாவாக்கட்டையை பிடித்துக்கொண்டு கெஞ்ச, நீ பிகு பண்ணிக்கொள்ள, எதிர் வீட்டு மணிப் பயல், 'என்ன மாமா! ரோமான்ஸ் நடக்கிறதா?' என்று கேட்க—வம்புதான்!" என்று சொல்லி முடிக்கவே இருவரும் ஏக காலத்தில் கலகலவென்று சிரித்தார்கள்.

இவ்விதம் தினம் அவர்கள் வீட்டில் ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடந்துகொண்டு தானிருக்கும்.

ராஜாராமனும் சீதாவும் மனமொத்த இளம் தம்பதிகள். தனிக் குடித்தனம் செய்ய ஆசைகொண்டு தாயார், தங்கை, தம்பி, முதலானோரை விட்டுவிட்டு தனிக் குடித்தனம் ஆரம்பித்தார்கள். வந்து நான்கு மாதங்களாகிவிட்டன. ராஜு எப்பொழுதும் கொஞ்சம் மசமசவென்றிருப்பவன். பிறருடைய தூண்டுகோலில்லாமல் தன் கடமையைக்கூட நிறைவேற்றிக்கொள்ளமாட்டான். சீதா கொஞ்சம் ஆசாரக்காரி; அவ்விதம் சற்று இருக்க வேண்டும் என்று நினைப்பவள். நல்ல சுறுசுறுப்பு. தன் வீட்டு வேலைகளையும் பார்த்துக்கொண்டு அவனுடைய தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் ஆற்றல் கொண்டவள்.

"இப்படி எண்ணை தேய்த்துக் கொள்ளாமல் நிற்கிறேளே, புதன்கிழமைகூட எண்ணை தேய்த்துக்கொள்ளவில்லை. உடம்பு என்னத்திற்காகும்" என்பாள்.

"உடம்பு எதற்கு வேணுமானாலும் ஆகட்டும், நீ இங்கே வந்து உட்கார். சொல்கிறேன்" என்பான் ராஜு.

"நன்னயிருக்கு! எனக்கு சமைக்கவேண்டாம், ஒரு வேலையும் செய்யவேண்டாம். உங்களோடு உட்கார்ந்திருந்தால், சாப்பாடு இரண்டு பேருக்கும் இலையில் வந்து விழுந்து விடும். எப்படியானும் போங்கோ. நான் போறேன்" என்று போவாள்.

"பெரிய வேலை வெட்டி முறிக்கிறவள் மாதிரிதான்! போகாதே இங்கே வா" என்றிழுக்கப் போவான்.

"ஐயோ என் மேலே படாதங்கோளேன்! கஷ்ட காலம்"

"யாருக்குக் கஷ்ட காலம்?"

"ஆமாம், இப்படி கூத்தடிக்கிறேளே, அம்மாயிருந்தால் இப்படியெல்லாம் செய்வேளா?"

"அம்மாவுக்கு தெரியாமல் செய்கிறேன்."

"அப்படியாவது என்னவாம்? சரி. ஊரிலிருந்து அம்மாவை உடனே புறப்பட்டு வரும்படி எழுதுங்கோ. உள்களோடே சிரமப்பட என்னாலே ஆகாது அம்மா?"

"நீயே எழுதேன்!"

"அம்மா வந்தால் தான் என்ன? உங்க சேஷ்டைப் போகப் போகிறதா என்ன? அவசரமாய் ரூமிலேந்து ஏதோ வேலையிருக்கிற மாதிரி 'சீதா! சீதா!' என்று கத்துவேள். வந்தாலும் ஆபத்து; வராமலும் இருக்கமுடியாது. அங்கே வந்து என்னவென்று கேட்டால், 'கிட்டவா சொல்றேன்' என்பீர்கள். ஒரு வேலையுமிருக்காது"

"சீதா, உன் வாய் ரொம்ப பெருகிப்போய்விட்டது. எப்பொழுது உன்னை அந்த மாதிரி சொல்லியிருக்கிறேன்?"

"நாளைக்கு சொல்றேன்!"

"ஓகோ. நாளைக்கு இப்படிச் செய் என்று சொல்லிக்கொடுக்கிருயா? சரி தான், சரி தான். அப்புறம் என்ன செய்ய வேணும்?"

"என் வாயைக் கிளறுவதில் உங்களுக்கு அபார ஆனந்தம்."

இந்தத் தோரணையிலேயே அவர்களது வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது.

வீட்டிலே கல கலவென்று மனிதர்கள் இருக்கையில் புதிதாக மணவாழ்க்கையில் கண்ணைத் திறந்து விடப்பட்ட வாலிபர்களுக்கும் பெண்களுக்கும் சற்று மனத்தாங்கலாகத் தானிருக்கும்.

"ஐயோ, இந்த சனியன் பிடித்த பாட்டி தொலையமாட்டேங்கருளே, கூனி மாதிரி இடுப்பை ஒடித்துக் கொண்டு அப்படியாவது இங்கே என்ன வேலே?" என்று சொல்லத்தான் தோன்றும்.

"இந்த அசடு பிடிச்ச அப்பாவுக்கு ஏதாவது தொண தொண வென்று கூப்பிட்டுக் கொண்டே இருக்கணும்" என்று முணுமுணுத்துக் கொண்டு பிறகு, "ஏன் அப்பா! என்ன பண்ணனும் என்கிறேள்?" என்று எரிந்து விழும்படி இருக்கும்.

தன் தம்பியைப் பார்த்து, 'ஏ, குரங்கு! ரூமிற்குள் என்னடா, குழந்தையுடன் விளையாட்டு? வெளியிலே போய் விளையாடித் தொலையேன்!" என்று சீறியும் விழுவதுண்டு.

"ஏண்டாப்பா! வீட்டிலே சித்த நாழி கண்டு பிடிக்கறது அரிதாயிருக்கும், இப்ப அடுப்பங்கரைக்கும் கூடத்துக்குமாய் ஆலாவட்டம் 'போறயே! ஆம்படையானை கஷ்டப்படுத்தராளேன்னு பார்க்க வரையா?" என்று மாமி கேட்டால், சாது போல நின்றுகொண்டிருக்கும் இளம் மனைவியை ஒரு தரம் ஜாடையாகப் பார்த்து கண்ணை சிமிட்டிவிட்டு "போங்க மாமி" என்று சொல்லிவிட்டு வந்து விடும்படி நேரும்.

ஆகவே தனிமையை இளம் காதலர் விரும்புவது சகஜம். ராஜாராமனும் சீதாவும் மட்டும் அதற்கு விலக்கல்ல. ஆனால் வர வர இருவருக்குமே சற்று சலிப்பு ஏற்படத்தான் செய்தது.

"எங்கேயாவது நாம்ப மட்டும் தனியா குடித்தனம் வைத்து நம் இஷ்டப்படி சினிமாவுக்கும் பீச்சுக்கும் குஷியா போய்விட்டு வீட்டிற்கு வந்து இந்த தொந்திரவில்லாமல் கொஞ்ச நாளாவது ஆனந்தமாய் இருக்க வேண்டும் என்று நினைத்தே, ஊரிலிருந்து தனியாக வந்திருந்தார்கள். முதலிலெல்லாம் அவளை விட்டுப் பிரிய மனம் தாளாத ராஜு இப்பொழுது வர வர வெளியில் நடக்கும் காரியங்களிலீடுபட்டு அகாலமாய் வீடு திரும்புகிருன். இரவு ஒன்பது மணி வரையில் காணு விட்டால் ஆசை, பிணக்கு, சாகஸம், இந்த எண்ணங்களெல்லாம் மாறி திகில் பிடித்து விடுகிறது சீதாவுக்கு.

சீதாவின் கண்டிப்பும், பிரியமான வேண்டுகோளும் அவள் கணவனைக்கட்டுப்படுத்தவில்லை; தட்டிச் செல்லும்படிதான் நேர்ந்தது.

ராஜு வர, வர இரவு பத்து மணிக்கு வர ஆரம்பித்தான். வந்ததும் சாப்பிட்டு விட்டு படுக்கப் போய்விடுவான், எங்கே போகிருன்? என்ன செய்கிருன்? என்பவை ஒருவருக்குமே தெரியாது. இதை இப்படியே நீடித்துக் கொண்டு போக சீதாவுக்கு பிடிக்கவில்லை.

ஒரு நாள் ராஜா ராமன் மேற்கூறியபடி இரவு வெகு நேரம் கழித்து வந்து சாப்பிடாமல் படுக்கப் போய் விட்டான்.

சீதா துக்கத்துடன் உள்ளே வந்து, "சாப்பிடவில்லையா? சாதமெல்லாம் அப்படியே கிடக்கிறதே" என்ருள்.

"எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை. நீ வேண்டுமானால் சாப்பிடு போ" என்று அலக்ஷியமாய் சொல்லியனுப்பி விட்டான்.

சீதாவுக்கு துக்கம் நெஞ்சை யடைக்க, அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. சமையலறையில் உட்கார்ந்து சாப்பிடாமல் அரை மணி நேரம் அழுது தீர்த்தாள். அவளுக்கு பழைய நினைவுகள் கண் முன் தோன்றின.

ஒரு சமயம்-அப்பொழுது ராஜு காலேஜில் படித்துக் கொண்டிருந்தான்-அவன் அறையில் பால் கொண்டு வைத்து விட்டு வர சீதாவை போகச் சொன்னாள் மாமி. வைத்து விட்டு திரும்புகையில் 'சீதா!' என்று மெதுவாக அழைத்தான். அவள் திரும்புவதற்குள், அவனே எழுந்து வந்து அவள் கையைப் பிடித்து இழுத்துச் சென்று அன்பு முத்தங்கள் சொரிந்தான். ஆசையாக தன் பக்கத்தில் உட்கார வைத்து அவ்வளவு பாலையும் பிடிவாதமாக அவளுக்கே கொடுத்து சாப்பிடச் செய்தான்.

"ராஜு! சீதா உள்ளே என்ன பண்ணுகிருள்? நீ படிக்காமல் அவளுடன் பேசிக்கொண்டிருக்கயா என்ன"? என்று அவன் அம்மா கேட்டதும், தன்னைத் தூக்கி நிறுத்திவிட்டு விழுந்து விழுந்து படிக்கிருப்போல் பாசாங்கு செய்தும், அம்மாவுக்கு தெரியாமல் அந்த அறையை விட்டு வெளியிலனுப்பியதையும், 'சீதா இங்கில்லையே, நான் மட்டும் தான் படிக்கிறேன்' என்று பதில் சொன்னதும் அவள் ஞாபகத்திற்கு வந்தன. அப்படிப்பட்ட வாழ்க்கை இனி ஏற்படுமா என்று ஏக்கம்கொள்ள வாரம்பித்தாள்.

திடீரென்று பின்னால் ராஜு வந்து நின்று "சீதா, ஏன் இப்படி உட்கார்ந்துகொண்டு அழுகிருய்?" என்ருன்.

"இனி போதும் நாம் தனிக் குடித்தனம் செய்தது. எனக்கு இது கட்டோடு பிடிக்கவில்லை. ஆபீஸில் டிரான்ஸ்பர் கேளுங்கள்" என்ருள்.

கஷ்டத்தின் நடுவே அனுபவிக்கும் சுகம் தான் ஆநந்தம் என்பது அவளறிந்த அனுபவம். அவனுக்கும் அப்படித்தான் தோன்றியது.

பகல் இரவு எந்த நேரத்திலும் குலவுவதற்கு விடப்பட்ட ஒரு பெண்ணின் ஏகாந்தம், சலிப்பைத்தான் உண்டாக்கி விடுகிறது. வாழ்க்கையில் நான்கு பேர் வீட்டிலிருக்கையில் பகிரங்கத்தில் முடியாத அந்த இளம் தம்பதிகளின் சிறிது நேர சந்திப்பு இருக்கிறதே, அதைவிட பிரம்மானந்தம் கொடுக்கக் கூடியது வேறொன்றுமில்லை என்பது சீதாவும் ராஜாராமனும் கண்டு பிடித்த உண்மை. அது சரி தானே?

பிச்சைக்காரன்

★

ஸ்ரீ பகவதி சரண் எழுதியது

"ஐயம்" மொழிபெயர்த்தது

காலை எட்டு மணிக்கெல்லாம் கடை வீதியிலுள்ள கடைகளெல்லாம் திறந்து வியாபாரம் ஆரம்பமாயிற்று. சிறிது சிறிதாக ஜன நடமாட்டம் அதிகரித்தது. அனந்தன் குடிசையை விட்டுக் கிளம்பினன் பிச்சை எடுக்க. அவன் அந்த நகரத்தில் ஒரு மூலையில் ஒரு ஓட்டைக் குடிசையில் வசித்து வந்தான். காலையில் குடிசையை விட்டுக் கிளம்புவான். மாலையில் தான் திரும்பி வருவான். பகல் நேரம் பூராவும் நகரத்தில் கழிப்பான். ஒரு நாள்கூட அதிகாலையில் எழுந்து செல்லத் தவறமாட்டான். இன்று சென்ற தெருவுக்கு நாளை செல்லமாட்டான். இன்று அவனுடைய முறைப்படி கடைத்தெரு செல்ல வேண்டும். முதல் நாள் இரவு சாப்பிடவில்லை. பசி மிகக் கொடூரமாக இருந்தது. நேரே எதிரே இருந்த மிட்டாய்க் கடையண்டை சென்ருன். சுடச்சுடப் பொரித்துக்கொண்டிருக்கும் பூரியின் வாசனை அவன் நாவில் ஜலம் ஊறச் செய்தது. பசியோ தாங்க முடியவில்லை. காலை வேளை. லாலா என்ன சொல்வானே என்ற பயம்! என்ன செய்வது, கேட்டு விடுவதென்று முடிவாகத் தீர்மானம் செய்து கொண்டான்.

"பாபு! கடவுள் பெயரால் ஏதாகிலும் கொடுங்கள்! புண்ணியம் உண்டு! நேற்று பூராவும் சாப்பிடவில்லை!" என்ருன்.

இவன் குரலைக் கேட்டதும் கடைக்காரன் கோபத்துடன் "வந்துவிட்டாயா? இன்னும் பொழுது விடியக்கூட இல்லை. போ! போ! இன்னும் போணியாகவில்லை!" என்று எரிந்து விழுந்தான்.

லாலாவின் முகத்தையும் அவனுடைய கடுகடுப்பான வார்த்தையையும் கண்டு அனந்தன் மறு முறை கேட்கத் தைரியமில்லாமல் அடுத்த கடையை நோக்கி நடந்தான். அங்கேயும் இதே கதிதான். இரண்டு கடைகள் தாண்டிச்சென்ருன். அங்கே ஒரு வாலிபன் பத்திரிகை படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"பாபு! பகவான் பெயரால்..." என்று ஆரம்பித்தான் அனந்தன்.

"போ! போ! பத்திரிகை படிக்கும்போது தொந்தரவு செய்யாதே!" என்று கடிந்தான் யுவன். அனந்தன் பேசாமல் நடந்தான். மணி பனிரண்டாகி ஒன்றும் அடித்தது. அவனுக்குப் பசி காதை அடைத்தது. கண்கள் சோர்ந்தன. சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். ஒன்றும் வழியில்லை, போகிறவர்கள்-வருகிறவர்களைக் கேட்டால் அவர்கள் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. அலைந்து திரிந்து ஒரு தெருவழியாகத் தன் குடிசையை நோக்கி நடந்துகொண்டிருந்தான். வலது புறம் ஒரு பெரிய வீடு இருந்தது, இங்கே ஒரு முறை கேட்டுப் பார்க்கலாம், இங்கேயாவது கிடைக்காதா? என்று எண்ணி மெல்ல வாயிற்படியண்டை சென்று ஏமாற்றமடைந்த குரலில் "சாமி! கடவுள் பெயரால் ஏதானும் கொடுங்கள். பசி தாங்க முடியவில்லை!" என்ருன்,

ஆறு அல்லது ஏழு வயதுள்ள அழகான சிறுமி ஒருவள் வெளியே வந்தாள். அனந்தனைப் பார்த்து "என்ன பாபா கேட்கிருய்?" என்ருள்.

அனந்தனின் கண்களில் நம்பிக்கை ஜ்வலித்தது. சொப்பனம்தான் காண்கிறேனா என்று கூட நினைத்தான். "குழந்தாய்! பசிக்கிறது, ஏதாவது கொடுத்தால் சாப்பிடுவேன்!" என்ருன்.

சிறுமி அவன் கந்தைத் துணிகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். "பாபா! உன்னிடம் நல்ல துணி இல்லை!" என்று கேட்டாள்.

அனந்தன் அவள் கேள்வியைக் கவனிக்கவே இல்லை. பேசாமல் குழந்தையையே பார்த்துக்கொண்டிருந்தான்,

இதற்குள் வேலைக்காரி வந்து "கிஷோரி கண்ணு! வா! உள்ளே வா! அம்மா! உள்ளே அம்மா கூப்பிடுராங்களே! இங்கே என்ன செய்யரே?" என்ருள்.

கிஷோரி அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு "நான் இந்த பாபாவுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். பாரேன், அவனிட்டம் நல்ல துணியே இல்லையே!" என்ருள். அனந்தன் பேசாமல் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"பிச்சைக்காரா, சோறு போடுகிறேன் சாப்பிடுகிருயா?" என்று கேட்டாள் வேலைக்காரி.

"எது கொடுத்தாலும் சரி!" என்ருன் அனந்தன். கிஷோரி குதுகுலத்துடன் "ஆனல் உட்காரு! நிறைய சாதம் போடுகிறேன். ஓடிப் போயிடாதே! என்ன?" என்ருள்.

பிறகு வேலைக்காரியுடன் உள்ளே சென்று ஒரு இலை நிறைய சாதம் வைத்து எடுத்துக் கொண்டுவந்து அனந்தன் எதிரில் வைக்கச் சொன்னாள். அனந்தன் பேசாமல் உட்கார்ந்தான்.

"உம்! சாப்பிடு பாபா! சாப்பிடு!" என்ருள் கிஷோரி.

அனந்தனுக்கு பசியே இல்லை. கிஷோரியின் இன்முகமே அவன் பசியைத் தணித்துவிட்டது.

"என் பாபா, சாப்பிடவில்லையா? பசி இல்லையா உனக்கு?" என்று கேட்டாள் கிஷோரி.

"குழந்தாய்! கடவுள் உன்னைச் சௌக்கியமாய் வைக்கட்டும், இன்று முழுவதும் ஒன்றுமே கிடைக்கவில்லை. நீ தான் இன்று இந்த ஏழைக்கு அன்னமளித்தாய்!"

"அது இருக்கட்டும்! அவள் அவள் சொன்னளே நீ குழந்தைகளை பிடித்துகொண்டு போக மாட்டாயே? என்னைப் பிடித்துக் கொண்டு போகாதே! என்ன! அப்புறம் சாதம் போடமாட்டேன்! தெரியுமா" என்ருள் குழந்தை.

அனந்தன் பதிலே சொல்லவில்லை. குழந்தையின் மழலைச் சொற்களைக்கேட்டு ஆனந்தித்துக்கொண்டிருந்தான். பிறகு குழந்தையைப்பார்த்து, "குழந்தாய்! பயப்படாதே! நான் உன்னைப் பிடித்துக்கொண்டு போக மாட்டேன்!" என்ருன்.

கிஷோரி சிரிக்கலானாள். அனந்தன் அதைப் பார்த்து திருப்தியடைந்தான். வேலைக்காரிவந்து "கிஷோரி, வா, போவோம்!" என்று குழந்தையை உள்ளே அழைத்துக்கொண்டு சென்ருள்.

அனந்தனும் அவ்விடத்தை விட்டு எழுந்தான். அவனால் முடியுமானல் சாயங்காலம்வரை குழந்தையுடனேயே பேசிக் கொண்டிருந்திருப்பான். பசி தணிந்தது. தன் குடிசையை நோக்கி நடக்கலானன். ஆனல் அவன் கண்களுக்கு எங்கும் கிஷோரியின் முகமே தென்பட்டது. நேரே தன் குடிசைக்குச் சென்று படுத்து யோசிக்கலானன்.

* * * *

ஜானகி பிரஸாத் அந்த நகரத்தில் பெரிய மனிதர். எல்லோருக்கும் அவரிடம் மதிப்புண்டு. அதிகம் படித்தவரல்ல. ஆனல் புத்திமான். எல்லோரிடமும் இன்முகமாகப் பேசுவார். ஒரு மில்லின் பாகஸ்தர். லாவாதேவியும் உண்டு. காந்தி பக்தர். நாட்டின் விடுதலை இயக்கத்தில் மிக்க ஆர்வம் கொண்டவர். அவர் முயற்சியால்தான் சமீபத்தில் ஹரி ஜனங்களுக்கு ஒரு கிணறுகூட வெட்டிக்கொடுத்தார்கள். அவர் கிஷோரியைத் தன் உயிரினும் மேலாக மதித்துவந்தார். தன்னுடைய சகல சம்பத்துக்களும் அவளே என்றிருந்தார். அவருக்கு விவாகமாகி வெகு நாள் வரை குழந்தை இல்லாமல் போகவே ரொம்ப துக்கமடைந்திருந்தார். அவர் மனைவியும் தன்னை விட அபாக்யவதி இந்த உலகத்தில் ஒருவரும் இல்லை என்று எண்ணி வருந்தினள். குழந்தைகள் தானே ஸ்திரீகளை சௌபாக்யவதிகளாக்குகின்றன! குழந்தை வேண்டுமென்று எவ்வளவோ தான தருமங்கள் செய்தார்கள்.

ஒரு நாள் மாலை ஜானகி பிரஸாத் கங்கைக் கரையோரம் உலாவிக்கொண்டிருந்தார். ஒரு பக்கம் துணியில் சுருட்டி ஏதோ வைக்கப்பட்டிருந்தது. அருகில் சென்று பார்த்தார். குழந்தை தூங்கிக்கொண்டிருந்தது. சந்தோஷத்துடன் எடுத்துக் கொண்டு வந்து தன் மனைவியிடம் கொடுத்தார். கடவுளால் கொடுக்கப்பட்ட குழந்தை என்றெண்ணி இருவரும் அதை அன்புடன் வளர்த்தார்கள். அந்தக் குழந்தைதான் இந்தக் கிஷோரி, இப்பொழுது ஏழு வருஷங்கள் சென்று விட்டன, அவள் தான் அவர்களுடைய கண்ணின் கருமணி. அவளுக்காக அவர்கள் எதையும் துறக்க சித்தமாக இருந்தார்கள்,

வெளித் தாழ்வாரத்தில் நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தார் ஜானகி பிரஸாத். கிஷோரி பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு தன் மழலைச் சொற்களில் என்னென்னவோ கேட்டுக்கொண்டிருந்தாள். சில சமயம் அவள் வேடிக்கையான கேள்விகளெல்லாம் கேட்பாள். ஜானகி பிரஸாத் ஒவ்வொன்றுக்கும் பொறுமையாகப் பதில் கூறுவார், அன்று ஜானகி பிரஸாத் கிஷோரியிடம் "கிஷோரி கண்ணு! என்ன, இன்றைக்கு உன் உபாத்தியாயர் வரவில்லையா?" என்று கேட்டார்.

"வராட்டா நல்லதாச்சு அப்பா! அவர் தினம் இந்த மாம் பழக்காரன். பாடம்தான் சொல்லித் தரார். பூனை, எலிப்பாடம் சொல்லித்தரதில்லை. அப்பா!" என்ருள் கிஷோரி.

"அவர் வரட்டும், நான் சொல்லிக் கொடுக்கச் சொல்லுகிறேன்!"

"அப்பா! இன்னிக்கி நான் படிக்கலை. வாத்யாரிடம்சொல்லிவிடு அப்பா!"

"ஏன்?"

"நான் பாபா கிட்டப் பேசப் போறேன்!"

"யார் அது பாபா?"

"அன்னிக்கி என்னமோ கேட்டுண்டு வர்லே!"

ஜானகி பிரஸாத் சிரித்தார். கிஷோரியின் பேச்சில் ஏற்படும் ஆனந்தம் அவருக்கு வேறெதிலும் ஏற்படுவதில்லை. அவர், "கிஷோரி கண்ணு! பாபா கிட்ட போனு அவன புடிசிண்டு போயிடுவான், தெரியுமோல்லியோ?" என்ருர்.

"இல்லை, இல்லை. அவன் புடிச்சிண்டு போகமாட்டான். நான் தான் அவனுக்குச் சாதம்கூட போட்டேனே!"

வாசலில் அனந்தன் குரல் கேட்டது. அந்தச் சத்தம் கிஷோரியைத் தூக்கத்திலிருந்து எழுப்பியதைப்போல் இருந்தது. "பாபா, வந்திருக்கான்!, பாபா, வந்திருக்கான்" என்று சொல்லிக்கொண்டே வாசலுக்கு ஓடினள்.

அனந்தன் பிச்சை வாங்க வரவில்லை. கிஷோரியைப் பார்க்கத்தான் வந்திருந்தான்.

கிஷோரி சிரித்துக்கொண்டே "பாபா! நேத்திக்கி சாதம் நன்னு இருந்துதா?" என்ருள்.

"குழந்தாய்! உன் கையால் கொடுத்தது நன்றாக இல்லாமல் போகுமா? பகவான் உன்னைச் சுகமாக வைப்பார். எஜமானியைச் சௌக்கியமாக வைப்பார்!" என்றான் அனந்தன்.

"இந்தப் பாபாவெல்லாம் கொழந்தையைப் புடிச்சிண்டு போயிடுவான்னு அம்மா சொன்னாளே?"

அனந்தன் முகம் வியர்த்தது. "நான்தான் சொன்னேனே, புடிச்சிண்டுபோகமாட்டேன்னு. ஏன், எஜமானியம்மா உன்னை எங்கிட்ட வரக்கூடாதுன்னு சொன்னாங்களா?" என்றான்.

"அம்மா சாதம போட்டு அனுப்பி விடு என்று சொன்னாள்!"

அனந்தன் கந்தைத் துணியாலான தன் ஜோபியிலிருந்து ஒரு பொம்மையை எடுத்து கிஷோரியிடம் கொடுத்து, "குழந்தாய்! இந்தா இதை எடுத்துக்கொள்!" என்றான்,

கிஷோரி சந்தோஷத்துடன் அதை வாங்கிக்கொண்டு "பாபா! இனிமே நாம் தனியாய் விளையாடலாம்! ராமி சொன்னா நான் அம்மாவை விட சேப்பா இருக்கேன்னு. நான் அப்பாகிட்டச் சொல்லிப்பிடுவேன்னேன். அவ போயிட்டா!" என்றாள்.

குழந்தையின் வார்த்தையைக் கேட்டு அனந்தன் சந்தோஷமடைந்தான். "குழந்தாய் நான் தினம் வரேன். நீ தினம் சாதம் போடுகிறாயா?" என்றான்.

"நீ தினம் பொம்மை கொண்டு வருவாயோன்னோ? எனக்கு இப்ப உங்கிட்டப் பயமே இல்லை. பார், நான் உங்கிட்ட நின்னுண்டிருக்கேன்!"

அனந்தன் கையை நீட்டினான். ஆனால் கிஷோரி துள்ளி அப்புறம் விலகிக்கொண்டாள். "பாபா! என்னைப் புடிச்சுண்டு போகப் போகிறாயா? அப்படியானா நான் அம்மாவைக் கூப்பிடுவேன்!" என்றாள்.

அனந்தன் கை விரித்தபடியே இருந்தது. அவன் மனோபீஷ்டம் ஈடேறவில்லை. அவன் சிரித்துக்கொண்டே "நான்கூட உங்களிடம் பயந்துகொண்டுதான் இருக்கிறேன்!" என்றான்.

இதற்குள் வேலைக்காரி வந்து, "கிஷோரி கண்ணு! பாபாவுக்குச் சாதம் போடலாம், வாத்தியார் வந்திருக்கார்! வா!" என்றாள்.

வாத்தியார் என்ற பெயரைக் கேட்டவுடனேயே கிஷோரியின் முகம் வாடிய பூவைப்போல் ஆகிவிட்டது. அவள் பாபாவிடம் பேச விரும்பினாள். அனந்தனை உள்ளே அழைத்துச் சென்று சாதம் போட்டாள். அனந்தன் தன் ஜோளியை நிரப்பிக்கொண்டான். குழந்தையை ஆசீர்வதித்துக்கொண்டே எழுந்து சென்றான். தெரு முனையில் சென்று திரும்பிப் பார்த்தான். கிஷோரி வாசலில் நின்றுகொண்டு அவன் போவதைப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டான்.

அனந்தன் பிரதி தினமும் கிஷோரியின் வீட்டுக்கு பிச்சைக்கு வர ஆரம்பித்தான். இரவில் அவனுக்குத் தூக்கமே வருவதில்லை. எப்பொழுது விடியும் என்று பார்த்துக்கொண்டிருப்பான். கிஷோரியும் 'பகவான் பெயரால்' என்ற சத்தம் எப்பொழுது கேட்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். குழந்தைகள் எப்படி குரங்காட்டி முதலிய வேடிக்கைகாரர்களின் முன் ஓடுவார்களோ, அதே போல் கிஷோரியும் அனந்தன் சத்தம் கேட்டதும் ஓடுவாள், அனந்தனை பார்ப்பதும் அவனிடம் பேசுவதுமே அவளுக்கு இன்பமாக இருந்தது. அனந்தன் கிஷோரியைப் பார்ப்பதாலேயே தன் துக்கங்கள் யாவற்றையும் மறந்தான்.

கிஷோரின் முகத்தைப் பார்ப்பதினாலேயே அவன் கஷ்டங்களெல்லாம் மறந்து போகும். அவள் முகத்தைக் காணும்போது அவனுக்குக் கடந்து போன தன்னுடைய வாழ்க்கைச் சம்பவங்கள் நினைவுக்கு வரும். இரவு நேரங்களில் அதையே நினைத்துபடுத்திருப்பான். அவன் கண்கள் நீரைப் பெருக்கும். அவன் வாழ்நாள் பூராவும் தரித்திரமாகவே கழிந்தது. இப்பொழுது பிச்சையாவது கிடைக்கிறது, அவன் பிச்சைக்காரனாக காலம் தள்ள முடிகிறது. அப்பொழுது அதுவும் செய்யக் கூடாத நிலைமையில் இருந்தான்.

அவன் மனைவி இறந்து இன்றைக்கு ஏழு வருஷங்கள் ஆகின்றன. ஒருநாள் மாலை கர்ப்பவதியான அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் உடல் நிலை மோசமாகிவிட்டது. அனந்தனிடம் கையில் தம்பிடி கூடக் கிடையாது. இந்த நிலைமையில் எந்த டாக்டரைக் கூப்பிடுவது? அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சொன்ன கைவைத்தியங்களைச் செய்து பார்த்தான். மூன்று நாள் அதே நிலைமையில் இருந்தவள் மறு நாள் குழந்தையையும் அனந்தனையும் தனியாய் விடுத்து இறந்து போனாள். அனந்தனின் மனம் ஒடிந்தது. இந்த உலகமே அவனுக்குச் சூன்யமாகத் தோன்றியது. இரவு பகல் கஷ்டப்பட்டு மனைவிக்கு சிசுருஷை செய்தும் அவள் பிழைக்காததைக் கண்டு அவனுக்குப் பைத்தியம் பிடிக்கும்படியான நிலைமை. ஏற்பட்டு விட்டது. சாப்பாட்டுக்கு வழியில்லை. மறு நாள் சாயங்காலம் தன்னுடைய மூன்று நாளைய குழந்தையை துணியால் சுருட்டி எடுத்துச் சென்று கங்கைக்கரையோரம் வைத்துவிட்டு வந்து விட்டான். இரவெல்லாம் தூங்கவே இல்லை. பொழுதுபுலர்ந்ததும் கங்கைக் கரை சென்று பார்த்தான். குழந்தையை அங்கே காணவில்லை. மனம் உடைந்து கடவுளைத் தூற்றிக்கொண்டே திரும்பிச் சென்றான்.

* * * *

கிஷோரியைக் கண்டது முதல் அவன் மனம் ஒருவிதமான சஞ்சலத்தை அடைந்து வந்தது. அவனையும் அறியாமல் ஏதோ ஒரு வேதனை அவனை வாட்டியது. கிஷோரியைப் பார்க்காவிட்டால் அவனுக்கு நிம்மதியே ஏற்படுவதில்லை. பிரதி தினம் அவன் அவளுக்கு ஏதாவது விளையாட்டுச் சாமான் கொண்டுவருவான். அவன் பிச்சையெடுப்பதில் தனக்குக் கிடைப்பதையெல்லாம் கிஷோரிக்காகவே செலவு செய்து வந்தான். தன் வயிற்றுக்குச் சாப்பிடுகிறானோ இல்லையோ, கிஷோரிக்கு விளையாட்டுச் சாமான்கொண்டு வரத்தவறுவதில்லை. கிஷோரியும் அவன் அருகில் உட்கார்ந்து கொஞ்சிக் கொஞ்சிப்பேசுவாள். உபாத்தியாயர் நேரம் கழித்து வரும் தினங்களில் பாடத்தை அனந்தனிடம் படித்துக்காட்டுவாள். அவன் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருப்பான். சில சமயம் அவன் கனவு உலகில் இருப்பான். அப்பொழுது கிஷோரி அவன் கையைப் பிடித்து இழுத்து, "பாபா! தூங்கறயா? இதைக் கேள்!" என்பாள். அனந்தனும் சுய நினைவு வந்து அவள் விரல்களைப் பிடித்து விளையாடுவான்! அவனால் முடியுமானால் நாள் பூராவும் அங்கேயே இருந்து அவளுடன் பேசி விளையாடிக்கொண்டிருப்பான். சிலருக்குத் தாங்கள் இழந்த தனம் திரும்பி வந்தால் கூட அதன் பேரில் அதிகாரம் இருப்பதில்லை. அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே திருப்தியடைய வேண்டியிருக்கிறது. கந்தைத் துணியை உடுத்திப் பிச்சையெடுக்கும் ஒருவன் விலைமதிப்பற்ற ரத்தினத்தைத் தன்னுடையதென்று சொல்லிக்கொள்ள முடியுமா! அனந்தன் கிஷோரியைப் பார்க்கலாம்; பூஜை செய்யலாம்; ஆனால் அதிகாரம் செலுத்த முடியுமா? அனந்தனுக்குகிஷோரியிடம் பேசிக்கொண்டிருப்பதில் நேரம் போவதே தெரிவதில்லை: பசி எடுப்பதில்லை: ஆனால் மனோவேதனை மட்டும் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனால் கிஷோரியின் இன் சொல் அதை மறைத்து வந்தது. கிஷோரி அவனிடம் ரொம்பவும் சரஸமாகப் பழக ஆரம்பித்து விட்டாள். சில சமயம் அனந்தன் மடியில் உட்கார்ந்திருப்பாள், முதலில் அனந்தன் கந்தைத்துணிகளைப் பார்த்துப் பயந்தவள், இப்பொழுது அவன் மடியில் உட்கார்ந்து கேள்விகள் கேட்க ஆரம்பித்து விட்டாள். அனந்தனுக்கு அவள் தன் மடியில் உட்காருவதும் பேசுவதும் எல்லையற்றஇன்பமாகஇருந்தன.

ஒருநாள் கிஷோர் அனந்தன் மடியில் உட்கார்ந்து கொண்டு கேள்வி மேல் கேள்வியாய் என்னென்னமோ கேட்டுக்கொண்டிருந்தாள். அனந்தன் அதற்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டே வந்தான்,

"பாபா! நீ தரையிலா தூங்குவாய்?"

"ஆமாம்! கண்ணு!"

"ஏன் உன்னிடம் கட்டில் இல்லையா? எங்கப்பா கிட்ட இருக்கே. அவா அதிலேதான் தூங்கரா!"

"நாங்கள் கீழேதான் தூங்குவோம்!"

"ஏன் உன்னிடம் கொசுவலை இல்லையா?"

"நாங்கள் ஏழைகள்தானே!"

"உன்னிடம் எவ்வளவு காசு இருக்கிறது?"

"ஒரு காசுகூடக் கிடையாது! கண்ணு!"

"நிஜம்மாவா? நீ பொய் சொல்ரே! எங்கப்பா கிட்ட நிறைய பணம் இருக்கே!"

அனந்தனின் கண்கள் விரிந்தன. அவன் "கிஷோரி கண்ணு! உங்கப்பா, பணக்காரர்!" என்றான்.

"நீ உன் பெண்ணை இங்கே எப்போ அழைச்சிண்டு வருவே? நான் அவளுடன் விளையாடுவேன். என் பொம்மையைக் கூடக் கொடுப்பேன்"

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சவூர்.

"குழந்தாய்! நான் விளையாட்டுக்குச் சொன்னேன். என்னிடம் பெண்......" அனந்தன் பேச்சுத் தடைபட்டது.

கிஷோரி பிணங்கிக் கொண்டு "போ! பாபா! நான் உன்னோடு பேசமாட்டேன்! நீதான் பொய் சொன்னாயே! நான் ராமியுடன் விளையாடமாட்டேன். உன் பெண்ணுடன் தான் விளையாடுவேன்!" என்றாள்.

அனந்தன் கிஷோரியைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு "ஏன், நீ என் குழந்தையல்லவா கண்ணு?" என்றான்.

"நான் உன்னோடு பேசமாட்டேன்!" என்றாள் குழந்தை.

"ஆனால் நீ என் குழந்தையல்லவா?"

கிஷோரி கலகல வென்று நகைத்தாள். அதே சமயத்தில் ஜானகி பிரஸாத் அங்கே வந்தார். கிஷோரியின் கையைப் பிடித்துத்தூக்கி, "போ! உள்ளே அங்கே உபாத்தியாயர் வந்து காத்துக்கொண்டிருக்கிறார், இங்கே பிச்சைக்காரனோடா பேசிக்கொண்டிருக்கிறாய்? ரொம்ப நன்றாக இருக்கிறது. போ உள்ளே!" என்றார்.

கிஷோரி பயந்து கொண்டே உள்ளே சென்றாள். ஜானகி பிரஸாதுக்குக் கோபம் தன்னை மீறி வந்தது. "என்னடா, உன் லக்ஷணத்திற்கு குழந்தையை வேறு தூக்கி மடியில் வைத்துக் கொள்ளுகிறாயா? யார் உத்தரவின் மேல் குழந்தையைத் தொட்டாய்?" என்று கடிந்தார்.

அனந்தன் மௌனமாக இருந்தான். அவன் மௌனமாக இருந்தது அவர் கோபத்தை இன்னும் தூண்டியது.

"பிச்சை வாங்க வந்த கழுதை பிச்சை வாங்கிக் கொண்டு ஓடாமல் இங்கே என்னடா விளையாட்டு? நீங்கள் எல்லாம் குழந்தைகளை ஏமாற்றிக் கொண்டு போகிறவர்கள் அல்லவா? பிச்சை வாங்க வந்தால் வாங்கிக் கொண்டு ஓடு. உட்காராதே இங்கே! உங்களை வீட்டுக்குள் விடுவதே பிசகு, இனி ஒரு முறை குழந்தையைத் தொடு. பிறகு பார் உன் கதியை!" என்று இறைந்தார்.

"எஜமான், மன்னிக்க வேண்டும்; நான் குழந்தைகளை ஏமாற்றுவதில்லை. அவர்களுடன் விளையா...?"

"சீ! மூடு வாயை. எனக்கும் உங்களிடம் அனுதாபம் உண்டு, ஆனால் அது எதுவரையில்? நீங்கள் தலைக்குமேல் ஏறுகிறீர்கள். உங்கள் விஷயமெல்லாம் வெளியிலேயே இருக்க வேண்டும். என்ன என் மகள் பிச்சைக்காரனுடன் விளையாட வேண்டுமா?" என்றார்.

"எஜமான், நான் ஏழை. எனக்குக் குழந்தைகள் இல்லை. இந்தக் குழந்தையைப் பார்த்துதான் திருப்தியடைகிறேன்!"

"ஆமாம்! உங்களை நம்புவதே பிசகு. ஜாக்கிரதை, இனி எப்பொழுதாவது குழந்தையைத் தொட்டாயோ பார்த்துக்கொள் உன்னைப் போலீஸிடம் ஒப்புவித்துவிடுவேன்!"

"ஆனால் இனி நான் குழந்தையைப் பார்க்கக்கூடாதா? எனக்கு ஒரே குழந்தைதான் இருந்தது. அதுவும் இன்று முதல் இல்லை. என் மனைவியும் இந்த உலகில் இல்லை. நான் தன்னந்தனியன்!"

"ஆனால் நீ கிஷோரியைப் பார்க்கத்தான் வருகிறாயா?" என்று கேட்டார் ஜானகி பிரஸாத்.

அனந்தனுக்கு எங்கிருந்தோ வந்தது தைரியம், "ஆமாம் எஜமான். குழந்தையைப் பார்க்கத்தான் வருகிறேன்!" என்றான்.

ஜானகி பிரஸாதுக்குக் கோபம் தன்னை மீறி எழுந்தது. "துஷ்டா! திருட்டு நாயே! திருடமாட்டாமல்அலையும் நீசா! கிஷோரியைப் பார்க்க வந்தானும்! போ வெளியே. போனால் போகிறதென்று உன்னை விடுகிறேன். வேறொருவரானால் நீ போகவேண்டிய இடம் வேறு! போ வெளியே! பிச்சைக்கார நாயே" என்றார்.

அனந்தன் ஜோளியை எடுத்துக்கொண்டு எழுந்தான். "நல்லது எஜமான் இனிமேல் வரமாட்டேன்" என்று சொல்லித் திரும்பிப் பார்த்தான். கதவின் ஓரம் நின்று கிஷோரி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அனந்தனும் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான். பிறகு அவனை அவ்வூரில் யாரும் பார்க்கவில்லை.

சீவக சிந்தாமணி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரன் ஓடி வந்து, "ஐய! சீவகன் வீரர் நடுவே சிறைப்பட்டு வீதி வழியே செல்கிறான். கந்துக்கடனே சிறைப்படும்படி செய்தனனும்" என்று கூறினான்.

"நண்பர்களே! யான் சொல்லியபடியே ஆயிற்று! இனி, சீவகனை மீட்டு வர என்ன உபாயம் செய்ய வேண்டும்? விரைவில் சொல்லுங்கள்" என்றான் பதுமுகன்.

"நண்ப! ஊரைப் பல இடங்களில் தீ யிட்டு விட்டு, மதனனைக் கொன்று சீவகனை மீட்டு விடலாம்" என்று புத்திசேனன் சொன்னான்,

அவ்விதமே பதுமுகன் முடிவு செய்து போருக்கு ஆயத்தமானான். அவனைச் சுற்றி நபுல விபுலரும், நந்தட்டன் முதலியவரும் குபேர மித்திரன் முதலியவரும் போருக்குப் புறப்பட்டனர்.

சீவகன் சிறைப்பட்டதையும் பதுமுகன் முதலானவர் போருக்குப் புறப்படுவதையும் அறிந்த காந்தருவதத்தை வித்தியாதர மங்கையானமையால், சீவகனை மீட்டு வர எண்ணித் தன் விஞ்சையால் பல பூதங்களை உண்டாக்கினாள்.

சிறைப்பட்டுச் செல்லும் சீவகன் மதனன் ஏவலால் சிறைச்சாலையிருக்கும் இடம் நோக்கிச் செல்கையில், 'யான் சிறைப்பட்டதைக் கேட்ட பதுமுகன் முதலிய தோழரும், விஞ்சையில் வல்ல காந்தருவதத்தையும் என்னை மீட்பதற்கு உபாயம் செய்வராதலால், அவர்களால் விடுதலை பெற்று நான் தப்பி வாழ்தல் மிகவும் இழிவான காரியம். ஆதலால், யான் என் தோழன், சுதஞ்சணனையே நினைப்பேன்' என்று நிச்சயித்தான். உடனே, தன் தோழனை சுதஞ்சணனைச் சீவகன் நினைத்தான்.

சங்க வெண்மலையில், ஓர் அரம்பையுடன் பாடிக்கொண்டிருந்த சுதஞ்சணன் தன் இடக்கண் துடித்தவுடன், சட்டென்று சீவகனை நினைத்துப் பார்த்தான். சீவகன் சிறைப்பட்டுச் செல்லுதலை தன் ஞானத்தாலறிந்தான் சுதஞ்சணன். உடனே தன் உருவத்தை மட்டும் அவ்வரம்பை முன் நிருமித்து வைத்து விட்டு, சீவகன் இருக்குமிடம் தோன்றினான் சுதஞ்சணன். உடனே பெரும் மழை உண்டாக்கினான். காற்று சுழன்று வீசியது. இடியும் மின்னலும் தோன்றின. சீவகனைச் சூழ்ந்து செல்லும் வீரர்கள் ஒருவரை ஒருவர் அறிய முடியாமல் மனங் கலங்கினர்; உடனே சுதஞ்சணன், சீவகனைத் தூக்கி மார்பில் தழுவிக் கொண்டு ஆசாயத்தே சென்றான். மாளிகையின் உப்பரிகையிலிருந்த காந்தருவதத்தை, சீவகன் செல்வதைக் கண்டதும் வாழ்த்தி, அவன் பிரிவுக்கு மனம் வருந்தித் தான் வரவழைத்த பூதங்களைத் திரும்ப அனுப்பி விட்டாள்.

மழை ஓய்ந்த பின், மதனனும் வீரரும் சீவகனைக் காணாமல் அங்கு மிங்கும் தேடினர், கிடைக்கவில்லை. கட்டியங்காரனுக்கு என்ன சொல்வதென்று மதனன் மனங் கலங்கினான். அங்குப் போர்க் கோலத்துடன் சென்ற பதுமுகன் முதலியவர், சீவகன் தப்பி ஓடி விட்டானென்பதை அறிந்து மகிழ்ந்து திரும்பிவிட்டனர்.

மதனன், தன்னுடைய வீரர்களுடன் ஆராய்ந்து, வீதியிற் செல்லும் ஒரு வாலிபனைப் பிடித்துக் கத்தியால் பல கூறாக வெட்டி வேறுபாடறியாமற் செய்து அரசனிடம் எடுத்துச் சென்று, "வேந்தே! சீவகனைக் கொண்டு வருகையில் மழையும் இருளும் உண்டாயின. அப்போது சீவகன் தப்பிப் போகப் பார்த்தான். உடனே, அவனைக் கொன்று பிளந்து கொண்டு வந்தோம்" என்று கூறிப் பிணத்தைக் காட்டினான்.

"மதனா! கொல்லுதற்கரிய வீரனைக் கொன்றாயாதலால், நீ இச்சிறப்புக்களைப் பெற்றுக் கொள்" என்று கூறிக் கட்டியங்காரன் மதனனுக்குப் பல சிறப்புக்களைச் செய்தான்.

அடுத்த வாரம்: சீவகன் யாத்திரை

பண்டைக்காலப் போர் முறை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏதாவதொன்றை முற்றுகையிட்டிருக்கும் கோட்டைக்குள் எறிந்து விடுவார்கள். அவர்கள் கோட்டையைக் கைப்பற்றிய பிறகே அதனைப் பெற்றுக் கொள்வர். கட்டாரி சாளுவன் என்பான் இம்முறையைப் பின்பற்றித் தன் கட்டாரியை உள்ளே எறிந்து கைப்பற்றுவது வழக்கம் என்று கல்வெட்டு கூறுகிறது, அதனாலேயே அவனுக்குக் கட்டாரி சாளுவன் என்ற பெயர் வந்தது.

ஒவ்வோர் அரசனும் தனக்கெனத் தனியாகக் காவல் மரம் ஒன்றை வைத்திருப்பான். சில சமயங்களில் அந்த மரமே அரசர்களுடைய குலப் பெயராகவும் போய் விடும். குந்தள தேசத்தை ஆண்டு வந்த கதம்ப வமிசத்து மன்னர்கள் கதம்ப மரத்தையே தங்கள் காவல் மரமாகக் கொண்டிருந்தனர். இந்தக் காவல் மரம் அரசர்களுடைய குல தெய்வம் போல, இப்போது வழக்கில் உள்ள கொடி மரம் போல, நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வரும். எதிரிகள் கோட்டையைக் கைப்பற்றியவுடன் முதலில் அந்த மரத்தை வெட்டி வீழ்த்தி விடுவார்கள்.

கோட்டை முற்றுகை

கோட்டையின் முற்றுகை பல சமயங்களில் நீண்ட நாள்இழுத்துச் செல்லும். அதனால் உள்ளிருப்பவர்கள் தங்கள் உணவுக்குப் பெரிதும் கஷ்டப்படுவர். வெளியே முற்றுகை போடுபவர்களும் அதற்காகவே சில சமயங்களில் காலஹரணம் செய்வார்கள். உள்ளிருப்பவர்கள் சோற்றுக்கு வழியில்லாமல் சரண் அடைவதாலோ சண்டைக்குப் புறப்பட்டுத் தோல்வியுறுவதாலோ கோட்டையைப் பிடித்து விடலாம் என்ற எண்ணமே அதற்குக் காரணம்.

அக்காலங்களில் கோட்டைக்குள் இருப்பவர்கள் தங்கள் ஆகாரத்தை அவசியமான அளவு குறைத்துச் சாப்பிட்டு உணவுப் பொருள்களை மீதப்படுத்துவர், சில சமயங்களில் புறு முதலிய பறவைகளை வெளியே அனுப்பித் தானியங்களைச் சேகரிப்பர். அந்தப் பறவைகள் நன்றாகப் பழக்கப்பட்டிருக்கும். அவை கோட்டைக்கு வெளியே பறந்து சென்று வயல்களில் இறங்கி தானியக் கதிர்களை மூக்கினால் கிள்ளித் தூக்கி வரும். அவ்விதம் சேகரிக்கும் உணவு அதிக நாள் தாங்காது.

பழைய தமிழ் இலக்கிய இலக்கணங்களில் இவைஅழகாக வருணிக்கப்பட்டுள்ளன. ஏதோ ஒரு வகையில் அவமானம் அடைந்த மன்னன் தன் படைகளைத் திரட்டி எதிரியின் மீது போர் தொடுத்து அவன் நாட்டைச் சூறையாடுவான். அவனை சேர்ந்தவர்கள் வஞ்சிப் பூமாலையை அணிந்து செல்வது வழக்கம். இது வஞ்சித் திணை என்று சொல்லப்படும். அதே போலப் படையெடுப்பைத் தடுப்போர் காஞ்சிப் பூமாலையைத் தரித்துப் போர் புரிவது மரபு ஆதலால் அதற்குக் காஞ்சி என்று பெயர். கோட்டையைத் தாக்குபவர்கள் உழிஞைப்பூமாலை அணிந்து செல்வர். அதே போலக் கோட்டையைக் காப்பவர் நொச்சி மாலை அணிந்திருப்பர். அந்தந்தத் திணைகள் அந்தப் பூக்களின் பெயராலே வழங்கும்.

பொதுவாகப் போரையே தும்பைத்திணை என்று குறிப்பர்

குட்டிக் கதை

ஏமாற்றம்

★

“ரேவதி” எழுதியது

பத்மினி பெருமூச்சு விட்டாள். கண்களில் மல்கின கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

“என்ன அகம்பாவம்! இவர்கள் மட்டும் ஆகாயத்திலிருந்து குதித்தார்களோ? சுவாமி இவர்கள் கொட்டம் அடங்கும்படிச் செய்யக்கூடாதா? வரும் கஷ்டங்கள் எல்லாம் எங்காத்துக்கு மட்டும் வருவானேன்? ஈசுவரா உனக்கு இரக்கமில்லையா?” என்று மனதில் பல எண்ணங்கள் தோன்ற விம்மினாள்.

“பத்மினி! பத்மினி!” என்று தன் மாமியார் கூப்பிடுவதைக் கேட்டு சட்டென்று உள்ளே சென்றாள்.

“இப்படி ஜலத்தைக்கொதிக்க விட்டு எங்கே போயிட்டாய்? காபி போட வேண்டாமா?” தண்ணீர் மருகலாகவே ஆகாது! வீட்டுக்குனு. கெடுதல்! இது கூடவா உங்கம்மா உனக்குச் சொல்லித் தரலே?” என்று அவள் மாமியார் சொன்னது எரிகிற புண்ணில் கோலை விட்டது போல் அவளுக்குத் தோன்றிற்று.

“ஏன் ஆகாது?” என்று பத்மினியின் குட்டி மைத்துனன் மணி தன் தாயாரைக் கேட்டான்.

“இந்தத் தண்ணீர் எப்படி மருகுகிறதோ, அப்படி அந்த வீட்டார் மனமும் கொதிக்குமாம்!” என்றாள் பத்மினியின் மாமியார்.

“என்ன மூடநம்பிக்கை! இருந்தாலும் இவர்கள் மனம் கொதித்தால்தான் எனக்கு சந்தோஷமாக இருக்கும். அன்றுதான் என் மனம் திருப்தி அடையும்!” என்று பத்மினி தனக்குள் சொல்லிக்கொண்டாள். தன் மனதில் இவ்வித கொடிய எண்ணம் தோன்றிற்றே என்று ஒரு நிமிஷம் பிரமித்தாள். “ஆமாம், அன்றுதான் எனக்குச் சந்தோஷமாக இருக்கும்!” என்று மறுபடியும் தீர்மானமாகச் சொல்லிக் கொண்டாள்.

பத்மினி புக்ககம் வந்து நாலு வருஷங்களே ஆயிருந்தன. அவள் இரண்டு சகோதரர்களுக்கு நடுவில் மிகவும் செல்லமாகப் பிறந்தகத்தில் வளர்க்கப்பட்டவள். தன் புக்ககத்தைப் பற்றியும் அதில் தனக்கு ஏற்படும் ஸ்தானத்தைப்பற்றியும் பல இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தாள். பிறகு தினசரி வாழ்க்கையில் உண்டான சில்லரைச் சம்பவங்கள், அவளுக்கு முதலில் திகைப்பையும் பிறகு மனக் கசப்பையும் விளைவித்தன.

பத்மினி மாமியார் சுபாவத்தில் நல்லவள்தான். தனக்குப் படித்த பாட்டு, தையல் முதலிய தெரிந்த ஒரு மாட்டுப் பெண் கிடைத்திருப்பதைப்பற்றி உள்ளூர அவளுக்குப் பெருமையாகத்தான் இருந்தது. இருந்தாலும் பழைய காலத்து மனுஷி. வாயும் பொல்லாது. பத்மினியின் பிறந்தகத்தைப் பற்றி ஏதாவது குறை சொல்லுவாள். இது பத்மினி மனதை இவ்வளவு தூரம் புண்படுத்தும் என்பதை அவள் உணரவே இல்லை.

பத்மினி கணவனுக்கு தன் மனைவி மேல் அளவிலாப் பிரேமை இருக்கத்தான் இருந்தது. தன் இள மனைவியின் சௌந்தரியத்தில் ஈடுபட்டு அவன் மட்டில் காதற் கடலில் திளைத்துக் கொண்டுதான் இருந்தான். ஆனால், அவன் தன் மனைவியின் மனப்போக்கை சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. தனக்கும், தன் தாயாருக்கும் அவள் ஒரு தனிப் பிரபஞ்சம் சிருஷ்டித்து வைத்திருந்ததைப் பற்றியாவது, தான் எண்ணினபடி இவர்கள் தினசரி நடத்தை இல்லாததைக் குறித்து அவள் தயங்குவதைப்பற்றியாவது அவனுக்கு எதுவுமே தெரியாது. அறிந்திருந்தால், தங்கள் மேல் பிசகு இல்லை, தாங்கள் மனித சுபாவத்துக்கு ஏற்கவே நடக்கிறோம், பத்மினி சிருஷ்டித்த மாயப் பிரபஞ்சமே அவள் ஏமாற்றத்துக்குக் காரணம். என்பதை அவளுக்கு விளக்கி இருப்பான். தன் தாயார் சுபாவம் தெரிந்த அவன், பத்மினி இதைத் தவறாக நினைத்துக் கொள்ளக்கூடுமே என்பதைப் பற்றியும் சிந்திக்கவில்லை.

போன வருஷம் பத்மினியின் சகோதரர்களில் ஒருவன் தன்வேலையை இழக்கும்படி நேரிட்டது. அவன் மேல் பிசகென்னமோ இல்லை; ஒரு சிநேகிதனை நம்பி மோசம் போனான் என்பது தான் உண்மை. ஆனால் வெளிப் பிரபஞ்சமும், பத்மினியின் மாமியாரும் இதை நம்பவில்லை.

அன்று நடந்த ஒரு சில்லரைச் சச்சரவே பத்மினியின் மனதில் இந்தப் புயல் ஏழ ஹேதுவாக இருந்தது. மூன்று வயதான அவள் குழந்தை, அலமாரியிலிருந்த அதிரசத்தை யாரும் அறியாமல் எடுத்துத் தின்று விட்டது. பிறகு, இது விஷயம் தனக்கு எதுவுமே தெரியாது என்று சாதனையும் செய்தது. பாவம்! குழந்தை தானே. அதிரசத் தூள்கள் தன்மேல் உதிர்ந்து, தன்னைக் காட்டிக் கொடுக்கும் என்று அது யோசிக்கவே இல்லை.

சாதாரணமாகப் பத்மினி மாமியார் இவ்விதம் தன் பேரன் செய்யும் லீலைகளைக் கண்டு மகிழ்வாள். “என் கண்ணன்; திருட்டுக் கள்வன்!” என்று கொஞ்சுவாள். அன்று அவளுக்கு ஏற்கனவே ஏதோ கோபம். மேலும் முதல் நாள் “இப்படிச் செல்லம் கொடுத்தால் குழந்தை உருப்பட்டால் போல்தான்!” என்று பத்மினி முணுமுணுத்ததைக் கேட்டும் விட்டாள்.

குழந்தையை இரண்டு அறை வைத்து! “ஐஞ்சிலே வளையாது ஐம்பதிலே வளையுமா? இன்னிக்குக் குழந்தைனு செல்லங் கொடுத்தா, நாளைக்கு மாமா மாதிரித் துணிச்சலாய் எதையும் செய்யும்!” என்று சொல்லவும் செய்தாள்.

பத்மினிக்குக், கோபமும், ரோஷமும் பொத்துக் கொண்டு வந்தன. தன் தமையன் நிரபராதி என்பதைவிடுவிடு என்று எடுத்துச் சொன்னாள். பிறகு, காபி போடுவதையும் மறந்து தன் அறைக்குச் சென்றாள்.

இப்போது கொஞ்ச நாளாகவே பத்மினி மனதில் ஒரு எண்ணம் வேரூன்றி விட்டது சாதாரணப் பேச்சையும், தன்னைச் சுட்டிச் சிறுமைப் படுத்தச் சொன்னதாக எண்ணினாள். ஒரு பெரிய அவமானத்துக்கும். கஷ்டத்துக்கும் தன் புக்ககத்தார் உள் ஆனால்தான் தனக்கு மன நிம்மதி ஏற்படும் என்று எண்ணினாள். இவ்விதம் நடக்க வேண்டும் என்று தெய்வத்தைப் பிரார்த்தித்தாள்!

பத்மினியின் வேண்டுகோளுக்குத் தெய்வம் இணங்கினது போலும்! அவள் குட்டி மைத்துனன் மணி, கெட்ட சர்வகாசத்தில் இறங்கினான். பத்மினி புக்ககத்தார் கலவரம் அடைந்தார்கள். ‘நன்றாக வேண்டும்’ என்று பத்மினி எண்ணினாள்.

மணி ஒரு நாள் நன்றாகக் குடித்து விட்டுச் சிநேகிதங்களுடன் உல்லாஸமாகச் சென்றான். ஒரு சில்லரைச் சண்டை! ஒருவனைப் படுகாயப் படுத்தி விட்டான்! போலீஸார் மணியை இழுத்துச் சென்றார்கள்.

பத்மினி தன் அறையில் சூன்யமான உள்ளத்துடன் நின்று கொண்டிருந்தாள். அவள் மனக் கண் முன், கவலை தோய்ந்த தன் கணவன் முகமும், கலவரமடைந்த தன் மைத்துனன் முகமும் திக்கமே உருவெடுத்த தன் மாமியார் முகமும் மாறி மாறித் தோன்றின! மணியின் வாழ்க்கை பாழடைந்து விட்டதை உணர்ந்தாள்! உலக நிந்தைக்கும், இவர்களுக்கும் நடுவில் ஒரு அரண் போல் நின்று தான் ரக்ஷிக்க வேண்டும் என்ற தாய்-உணர்ச்சி அவள் மனதில் ஓங்கி நின்றது. ‘இவர்களை நினைத்து அன்பு ததும்பும் உள்ளத்துடன், செய்வது அறியாமல் உருகினாள். தான் இவர்களைச் சேர்ந்தவள், இவர்கள் கஷ்டம் தன் கஷ்டம் என்பதை உணர்ந்தாள்.

எதிர் பார்த்த சந்தோஷம் எங்கே? எட்டிக்காயையும் விடக் கசக்கக் கூடிய கனி பழி என்பதை அறிந்தாள். அவள் உணர்ச்சிகளும், எண்ணங்களும் அவளை ஏமாற்றி விட்டன!

கடுமையான குளிர், ஜ்ளிப்பை ஒழியுங்கள்.

தொண்டை கர கரப்பு, கண்ணில் நீர்வடிதல், குளிர், முதலிய் இருந்தால், பெப்ஸ் உடனே நிவர்த்தியளிக்கும். வாயில் போட்டவுடன் பெப்ஸ் கரைந்து, மருந்து பூர்வமான ஆவி, சுவாசப் பைக்குள் செல்லுகின்றது. ஜளிப்பு கிருமிகளை பெப்ஸ் ஒழித்துவிடும். எரிச்சலேற் பட்டசுவாசக் குழாய் களுக்குச் சமனமூட்டி, வியாதியை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்கச் செய்கின்றது. எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 வீதம் விற்கின்றனா. ஏஜண்டுகள். மேஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி., மதாாஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா-சரிதம் — 11 பாட்டு

I

பல்லவி

எவரு மனகு ஸமான மிலலோ
னிந்துலார நேடு

அனு பல்லவி

அவனி ஹரிஹர ப்ரஹ்மாதி ஸுர
லாஸசே மோஸ போயிரி கனு கனு

சரணம்

நலுவதனயபை மோஹமு ஜெந்தி
நாடே தகிலிபோயி
முத்து லொலுகு ஸ்ரீ ஹரி வலசுசு
ப்ருந்தா லோலுடை போயே
சில வபூஷணுடு தாரு காவனபு
செலுல பாலாயே கோ-
குலமுன த்யாகராஜ னுதுடு மன
வல்ல-திகிலி போயே கனு கனு

II

இந்துலார!—சகோதரிகளே!
நேடு—இன்று
இலலோ—இவ்வுலகில்
மனகு எவரு ஸமானமு—நமக்கு ஸமானமுள்ளவர் யாரிருக்
அவனி—பூவுலகில் [கிறார்கள்
ஹரிஹரப்ரஹ்மாதிஸுரலு—மஹாவிஷ்ணு, பரமசிவன்
ப்ரஹ்ம தேவன், தேவர்கள் முதலானவர்களும்
ஆஸசே—ஆசை மிகுதியால் (பெண்கள் ஆசையால்)
மோபோயிரி—மோசம் போனார்கள்
கனு கனு—ஆகையால்
மனகு எவரு ஸமானமு—நமக்கு ஸமானமுள்ளவர் யார்
நலுவ தனயபை—ப்ரஹ்மதேவன் தான் ச்ருஷ்டித்த பெண்
மோஹமு ஜெந்தி—மோகம் கொண்டு [மேல்
நாடே—அந்நாளிலேயே
தகிலி போயி—அப்பெண்ணை இழுத்துச் சென்றார்.
முத்து லொலுகு ஸ்ரீஹரி—அழகு கொண்டு விளங்கும் ஸ்ரீ
வலசுசு—விருப்பம் கொண்டு [மஹாவிஷ்ணு
ப்ருந்தா லோலுடை போயே—ப்ருந்தையின் மேல் மோகம் கொண்டவரானார்
சிலுவ்பூஷணுடு—ஸர்ப்பங்களை ஆபரணங்களாகக் கொண்ட
தாருகா வனபு—தாருகா வனத்தில் வஸித்த [பரமசிவன்
செலுல பாலாயே—பெண்களிடம் மோகம் கொண்டு அவர்கள் வசப்பட்டார்
கோகுலமுன—நாம் வஸிக்கும் கோகுலத்தில்
த்யாகராஜ நுதுடு—த்யாகராஜனால் துதிக்கப்பட்ட ஸ்ரீ கண்
மனவலலோ—நமது வலையில் [ணன்
தகிலி போயே—சிக்கிக் கொண்டான்
கனு கனு—ஆகையால்
மனகு ஸமானமு எவரு—பெண்மணிகளாகிய நமக்கு ஸமானம் யார்.

III

முன்கதைச்சுருக்கம்:—

கண்ணன் வேணுகானத்தைக் கேட்டு பரவசமடைந்த கோபியர்கள் அவனுடன் யமுனா நதி சென்று அங்குள்ள ஓடத்தில் ஏறிக்கொண்டு தங்கள் பாக்யங்களை எண்ணி மகிழ்ந்து பாடிக் கொண்டு ஓடத்தை நடத்தலானார்கள். இந்திராதி தேவர்களும் ஆகாய வீதியில் நின்று இக்காட்சியைக் கண்டு களித்தனர்,

அத்தருணம் கோபிகைகள் க்ருஷ்ண பரமாத்மா தங்கள் சொற்படி கேட்டு, தங்களுக்கு அடங்கி நடப்பதைக்கண்டு கர்வங்கொண்டு தங்களுக்குச் சமானம் எவருமில்லை என்று

ஹரிஹர கமல புவாதுலு—
நரஸுர கிம்புருஷுலெல்ல னம்—ருலுகா கெவ்
வருமன குசகச வதனு—
தரமுலகனி தப்புவாரு தரலோ னனுசுன்,

என்ற கந்த பத்யத்தில், மும் மூர்த்திகளும், தேவர், கிம்புருஷர், மானிடர் முதலான அனைவரும் தங்கள் அழகில் மயக்கம் கொள்ளாது தப்ப முடியாது என்று சொல்லிக்கொண்டனர்.

எவருமனகு:—இது நௌகா சரித்திரத்தில் 11-வது கீர்த்தனம். பகவான் தங்கள் அழகில் மயங்கி, தங்கள் வசப்பட்டதாக எண்ணி கர்வங்கொண்டு மும் மூர்த்திகளும் அவ்விதவே பெண்கள் வசப்பட்டவர்கள் என்ற வரலாற்றைத் தெரிவித்து தங்களுக்கு சமானமானவர்கள் எவரும் இல்லை என்று கோபியர்கள் கூறும் விஷயத்தைக் கூறிப்பிட்டுள்ளார்.

நலுவ:—ப்ரஹ்மதேவன் தானே சிருஷ்டித்த சரஸ்வதி தேவியை மணந்தார் என்று விஷமமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

முத்து லோலுகு:—ஜலந்தராசுரன் மனைவியான ப்ருந்தை மீது பகவான் மோகங்கொண்ட சந்தர்ப்பத்தை இங்கு குறிப்பிட்டு நிந்தை செய்கிறார்கள்.

சிலுவ பூஷணுடு:—தாருகாவனத்தில் சிவபெருமான் பிக்ஷாடனர் கோலத்தோடு பிரவேசித்து அங்கு புரிந்த திருவிளையாடல்களை கோபியர்கள் குறிப்பிட்டு நிந்தாஸ்துதி செய்கின்றனர்.

இவ் விவரத்தை ஸ்காந்த புராணத்தில் விவரமாகக் காணலாகும்.

IV

ராகம் தேவகாந்தாரி — ஆதி தாளம்

(29-வது மேள ஜன்யம். ஆ. ஸரிமபதஸ அவ. ஸ்நிதபமகமகரிஸ.)

பல்லவி

;	தரீ ஸ்ஸாஸ்நி	தாதா நிதபா	பம பா	தஸ் தப	மப மக	ரிஸ ரீ
	எவரும .	னகுஸ . .	மா . . ,	. . ன .	மி . ல .	லோ . .
;	ஸ்நிதாநிஸ	ரீரிஸ ரீரீ	க மாக	ரீ ;	ஸா ;	; ;
	இந் . துலா . .	. ர . நே .	டு . .	.	.	

அனுபல்லவி

;	பம பாதா	ஸ்நிஸ்ா ரீரீ	ரீக்ம்	க்ரிரீ	ஸ்ாரிக்	ரிஸ் ஸ்ா
	அவனி ஹ	ரி . . ஹர	ப்ரும்மா .	. . தி	ஸுரு.	லு . .
;	தரீஸ்ஸ்ா	ஸ்நி தநி தபபா	; மபா	த பா	தப மக	ரிஸ ரிம
	ஆ . ஸஸே	மோ . . . . ஸ	போ .	யி ரி	க. னு.	க . னு .

பத
. . (எவரு)

சரணம்

;	ஸத பா பா	பாபா பமபா	மப தஸ்	தப பா	பதநித மபதப	மக ரிஸ
	நலு வத	னய பை . .	மோ . . .	ஹ. மு	ஜெங்	. . . . .
	ரீ ரீகமகரி	ஸாரீ ஸா ;	நித ரிஸ	ரீ ;	ஸா ;	ஸா ஸா
	தி . நாடே . .	. த கி லி	போ . , .	யி	.	முத்து
;	ரி மாரி மா	பாபம தாதா	நிஸ் நித	நித பா	பம தப மக	ரி ஸ ரீ
	லொலுகு ஸ்ரீ	. . . ஹரி	வ . ல ,	சு . சு	ப்ருந் , . . , .	. . தா
;	ஸநி தா நிஸ	ரீஸா ரீ	ரீ ;	க மாக	ரீ ;	ஸா ;
	லோ . . லு .	டை . . .	போ	யே . .	.	.
;	தஸ் தப மபதப	மாமக ரிஸரீ	ரீ ஸ ரீ	மா பா	; தஸ்	தப பா
	சிலுவ . பூ . . .	. ஷ . ணு . டு .	தா . .	ரு கா	வ .	ன . பு
;	மபதப பப	மாமக ரிஸரீ	ரீ மா	பத ஸ்நி	த நீத	பா ;
	செலுல . பா .	. . . லா . . .	யே .	. . . .	. . .	கோ

(இதற்கு மேல் அனுபல்லவி போன்றது.)



சில ஆயுதங்கள்

அதிக்ரமம் புரியும் ஹுர் ஜாதியார் உபயோகித்து வரும் சில ஆயுதங்களைப் படத்தில் பார்க்கலாம்.

சென்றவார நிகழ்ச்சிகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வித ஆட்சேபமுமிராது. ஆனால் முதல் முதலாகப் பிரிட்டிஷ் சர்க்கார் அதிகாரத்தை இந்தியர் வசம் மாற்றவேண்டும். அது நடந்தாலன்றி அரசியல் மாறுதல்களுக்கு அர்த்தமேயில்லை.

* * * *

'தலைவர்களை விடுதலை செய்க'

சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரி இந்தியா சட்டசபையின் அடுத்த கூட்டத்தில் தாம் ஒரு தீர்மானம் கொண்டுவரப் போவதாக தேசியக் கட்சித் தலைவர் டாக்டர் பி. என். பானர்ஜி அறிவித்திருக்கிறார்.

அத் தீர்மானத்தின் விவரமாவது:—நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியை தளர்த்தவும் நேசநாடுகளின் யுத்த முயற்சிக்கு இன்னும் உருவாக உதவவும் வேண்டி 1942 ஆகஸ்ட் 7-ந்தேதி முதல் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது சிறைப்படுத்தப்பட்டிருக்கும் எல்லாக் காங்கிரஸ்காரர்களையும் விடுவிக்கும்படி இச்சபை ராஜப்பிரதிநிதிக்குச் சிபார்சு செய்கிறது; மத்திய சட்டசபையிலுள்ள எல்லாக் கட்சிகளின் பிரதிநிதித்துவத்துடன் கூடியதும், சபைக்கு ஜவாப்தாரியான துமானதேசிய ஸர்க்கார் ஒன்றை மத்தியில் ஏற்படுத்தவும், அதே மாதிரி அமைந்த பொறுப்பு வாய்ந்தஸர்க்கார்களைக் கவர்னர் ஆட்சி நடக்கும் மாகாணங்களில் ஏற்படுத்தவும் உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் சிபார்சு செய்கிறது.

* * * *

ஆறு கிராமங்களுக்கு அபராதம்

பாட்னா ஜில்லாவில் மோகாமா போலீஸ் ஸ்டேஷன் எல்லையில் உள்ள ஆறு கிராமங்களுக்கு ஒரு லக்ஷ ரூபாய் கூட்டு அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. என பீஹார் சர்க்கார் விசேஷ கெஜட்டு பிரசுரம் ஒன்று கூறுகிறது; அந்தக் கிராமங்களிலுள்ளவர்கள் பொது ஜனப் பாதுகாப்புக்கு விரோதமான காரியங்களைச் செய்து வருவதாகவும் அக்காரியங்களுக்கு உடந்தையாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

* * * *

கனம் ஆனே வீட்டு வாயிலில் மறியல்

வைஸ்ராய் நிருவாக சபையில் அங்கம்வகிக்கும் கனம் ஸ்ரீ ஆனே வீட்டு வாயிலிலும் கனம் சர்க்கார் வீட்டு வாயிலிலும் இம்மாதம் 5-ந் தேதி காலை முதல் மறியல் நடந்தது. சுமார் ஒரு டஜன் மாணவிகள் கொட்டும் மழையையும் பார்க்காமல் அங்கு நின்று அங்கத்தினர்களின் வீட்டுக்குள் ஒருவரையும் போகவிடவில்லை. உள்ளே யிருப்பவரையும் வெளியே விடவில்லை.

கனம் ஸ்ரீ ஆனே வீட்டில் அன்று ஒரு விருந்து நடக்க விருந்ததால் அதற்காக சாமான்கள் ஒரு லாரியில் வந்தன. அந்த லாரியையும் மறியல்காரர்கள் தடுத்துவிட்டனர். மாலை நெடுநேரம் வரையில் மறியல் நடந்தது. கடைசியாக விருந்துக்கு வந்தவர்களை மட்டும் மறியல்காரர்கள் உள்ளே அனுமதித்தனர். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு வயதான ஸ்திரீகள் பலர் அங்கு வந்து ஸ்ரீ ஆனே வீட்டுக்குள் நுழைந்தனர். விருந்தினர்கள் அங்கிருந்து போய்விட்டார்கள். மறியல்காரர்கள் ஸ்ரீ ஆனேயுடன் நீண்ட நேரம் பேசினார்கள்.

காவலில் உள்ள தலைவர்கள் விடுதலையடைவதற்கு வழிதேடுங்கள். இல்லையேல் நீங்கள் ராஜிநாமாச் செய்து விடுங்கள் என அவரிடம் சொன்னார்கள். மாணவிகள் வெளியே நின்றுகொண்டு தலைவர்களை விடுவிக்கும்படியும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களை விலகிவிடும்படியும் ஆரவாரம் செய்துகொண்டிருந்தார்கள். அதன் பிறகு யாவரும் அங்கிருந்து போய்விட்டார்கள். ஸ்ரீ சர்க்கார் வீட்டு வாயிலில் மறியல் செய்தவர்கள் ஆடம்பரமின்றி சீக்கிரம் கலைந்துவிட்டார்கள்.

சென்னை டெட்லெட்டர் ஆபீஸ், உதவி மானேஜர் மிஸ்டர் பி. டி. அரசு முதலியார் குமாரத்தி மிஸ். பி. கிருபாம்பிகைக்கும், மிலிடரி அக்கவுண்ட்ஸ் டெபுடி அஸிஸ்டெண்ட் கண்டிரோலர் (ரிடயர்ட்) மிஸ்டர் பி. சிங்காரவேலு முதலியார் குமாரர் மிஸ்டர் பி. சுந்தரம் பி. ஏக்கும், 28-8-1942உ சென்னை, தண்டையார்பேட்டை "பூன்மல்லி ஹவுஸில்" பிராமணரல்லாத புரோகிதரைக்கொண்டு விவாகம் நடைபெற்றது. ஏராள நண்பர்கள் விஜயம் செய்திருந்தனர். தம்பதிகளுக்கு ஏராள வெகுமதிகளும் ஆசிச் செய்திகளும் வந்திருந்தன. மாலையில் தேயிலைப் பானமும் இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகர் தக்க பக்க வாத்தியங்களுடன் கூடிய சங்கீத கச்சேரியும் நடைபெற்றது.

நாங்கள் இதைத் தயாரிக்க உதவுகிறோம் — இது எவ்வளவு சிறந்தது என்பது எங்களுக்குத் தெரியும்

"நான் ஒரு கெமிஸ்ட், ஸண்லைட் தொழிற்சாலை 'லேபாரடரி'யில் வேலை செய்கிறேன். ஸண்லைட் தொழிற்சாலையிலிருந்து வெளி வரும் ஒவ்வொரு ஸோப்புக்கட்டியும், ஸண்லைட்டிற் குண்டான உயர்ந்த வகையில் வருகிறதா என்று பார்க்கிறேன். ஸோப் தயாரிக்க உபயோகிக்கும் தாவர எண்ணையையும், ஸோப் உற்பத்தியில் உள்ள ஒவ்வொரு மாறுதலையும், நுட்பமாக நாள் முழுதும் பரிசீலனை செய்கிறேன். ஸண்லைட் ஸோப் பரிசுத்தமானது, சுத்தமாகச் சலவை செய்ய வல்லது என்று இந்திய மக்களுக்குச் சொல்ல என்னை விட சிறந்த அத்தாட்சி வேறுஒன்றுமில்லை."



ஸண்லைட் ஸோப்

S. 47-460 TM.

LEVER BROTHERS (INDIA) LIMITED

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

எகிப்துப் போர்

ரோமல் திட்டம் குலைந்ததற்கும் அவர் வாபீஸானதற்கும் காரணம் பிரிட்டிஷ், அமெரிக் விமான சக்தியென்றே நம்பப்படுகிறது. எகிப்திய யுத்த அரங்கங்களில் நேசநாடுகளுக்கு எண்ணிக்கையிலும், தன்மையிலும் விமானபலம் சமீபத்தில் பெருகியிருக்கிறதென்று விஷயமறிந்தவர்கள் கருதுகிறார்கள். ரோமல் எதிர் பார்த்திருந்த விமான படைபலம் ரஷ்யாவுக்கு ஸ்டாலின் கிராட் போரில் உபயோகப்படுத்த அனுப்பப்பட்டு விட்டதென்று கூறப்படுகிறது: பிரிட்டிஷார் ரோமலை இன்னும் பின்வாங்கும்படி செய்துவருகின்றனரென்று இதுவரை கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. ஆனால் தற்போது பிரிட்டிஷார் பெருவாரியாக முன்னேறித் தாக்குவார்களென்று ஊகிக்ககூடாதென நிபுணர்கள் கூறுகின்றனர். ஜெனரல் மாங்கொமரிக்கு சிறிதளவாயிருந்தாலும் இப்பொழுது தீர்மானமான வெற்றி கிடைத்திருக்கிறதென்று ராணுவநிபுணர்களும் எகிப்திலுள்ள லண்டன் பத்திரிகைகளின் நிபுணர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர்; ஆனால் ஜெர்மன் ஜெனரல் கஷ்டங்களுக்கிடையிலும் திடீரெனத் தாக்க ஆரம்பிக்கலாமென்றும் அவர்கள் எச்சரிக்கை செய்கின்றனர்.

* * * *

ஸ்டாலின்கிராடுக்கு ஆபத்து

ரஷ்யாவில் டாங்கி உற்பத்தி அதிகமாக நடைபெற்று வந்த ஸ்டாலின்கிராடு என்ற பெரிய நகருக்குப் பேராபத்து ஏற்பட்டிருப்பதாக ரஷ்யாவிலிருந்து உத்தியோக முறையிலும் உத்தியோகப் பற்றற்ற முறையிலும் கிடைக்கும் தகவல்கள் காட்டுகின்றன, ஸோவியத் மத்தியான அறிக்கை ஸ்டாலின்கிராடுக்கு வடமேற்கிலும் தென்மேற்கிலும் இரவெல்லாம் போர் நடந்ததாகக் கூறுகிறது. தென்மேற்கிலிருந்து விரோதிகள் ஸ்டாலின்கிராடை நோக்கி கோடெலினிகோவோ ரயில்பாதையோரமாக நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் முன்னேறி வருவதாக ஸோவியத் உப அறிக்கை கூறுகிறது. வடமேற்கே நிலைமை அதிக நெருக்கடியாக இருப்பதாகத் தோன்றுகிறது. டான் நதிக்கு அப்பாலுள்ள கிளட்ஸ்காயா பிரதேசத்தில் தங்களது படைகளை பலப்படுத்துவதற்காக ஜெர்மனியர் விடாமல் ரிசர்வ் படைகளைக் கொண்டு வருவதாக ஒரு நிருபர் எழுதுகிறார்.

காகஸஸில் நிலைமை கேவலப்படுவதாகத் தோன்றுகிறது. கிராஸ்னோடாருக்குத் தெற்கிலுள்ள பிரதேசத்தின் மேற்குப் பகுதிக்கு ரஷ்யர் பின்வாங்குவதாக ஸோவியத் ரிப்போர்ட்டுகள் கூறுகின்றன.

மாஸ்கோ போர்முனையில் ரஷ்யர்கள் அதிகமான ஸ்தல வெற்றிகளை அடைந்திருக்கின்றனர். பெயர் சொல்லாத பல விடங்களை திரும்பப் பிடித்திருக்கின்றனர்.

ஜெர்மன் ராணுவ நிர்வாகியான கர்காவ் ஆல்பிரெட் பிட்டோர்ப்பிற்கு வலக்கரம் போன்றவராகக் கருதப்படும் பான்ஸர் ஜெனரல் குடிரியான்சை மாஸ்கோ போர் முனையில் பிரியான்ஸ்க் காடுகளில் ரஷ்யக் கொரில்லாக்கள் கொன்று விட்டனர்.

கோடெலினிகோவோ-ஸ்டாலின் கிராடு ரயில் பாதைக்குத் தெற்கேயுள்ள ஸோவியத் படை வரிசையை ஓரிடத்தில் ஜெர்மனியர் பிளந்து விட்டனர், இங்குக் கடும் போர் நடப்பதாக பர்லின் தெரிவிக்கிறது. ஜெர்மனியர் கடற்கரை யோரமாகச் சென்றும் கிராஸ்னோடாரிலிருந்து போகும் மலை ரயில்பாதையோரமாகச் சென்றும் கருங்கடல் கடற்படை தளமான நோவோரோஸிஸ்கை அடைய முயலுகிறார்கள். ஆனால், அவர்களுக்குப் பெருங்கஷ்டங்களேற்படுகின்றன. ஆனால், ஜெர்மனியர் விடாமல் ரிஸர்வ் படைகளைக் கொண்டு வருகிறார்கள்.

* * * *

ஜப்பானிய மந்திரி ராஜிநாமா

ஜப்பானிய அந்நிய மந்திரியான ஷிஜினோரி டோகோ சொந்தக் காரணங்களை முன்னிட்டுத் தமது அந்நிய மந்திரி பதவியை இம்மாதம் முதல் தேதி ராஜிநாமாச் செய்துவிட்டார்.

ஜப்பானிய மந்திரி சபையின் விளம்பர போர்டு கூறுவதாவது:—மிஸ்டர் டோகோவின் முடிவைச் சக்கரவர்த்திக்கு இம்மாதம் முதல் தேதி மாலை பிரதம மந்திரியான மிஸ்டர் ஹடைகி டோஜோ தெரிவித்தார்.

சக்கரவர்த்தி ராஜிநாமாவுக்கு அங்கீகாரமளித்து அந்நிய இலாகா மந்திரி பதவியை ஏற்கும்படிப் பிரதம மந்திரி டோஜோவுக்கு உத்தரவிட்டார். தற்போது டோஜா (1) பிரதம மந்திரி பதவியையும் (2) அந்நிய மந்திரி பதவியையும் (3) யுத்த மந்திரி பதவியையும் வகித்து வருகிறார்.

அந்நிய மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்த டோகோ 1936ம் வருஷத்தில் ஏற்பட்ட ஜெர்மன் ஜப்பானிய பொதுவுடமை எதிர்ப்பு ஒப்பந்தமேற்படுவதற்குப் பெரிதும் காரண பூதராக இருந்தார். 1937-ல் அவர் பர்லினில் ஜப்பானிய தூதராய் இருந்தார். அவர் ஜெர்மனியரிடம் மிக்க அனுதாபங் கொண்டவராதலால், 1941-ம் வருஷம் செப்டம்பரில் ஜெனரல் டோஜோ யுத்த மந்திரி சபையை அமைத்தபோது அவரை அந்நிய மந்திரியாக நியமித்தார்.

* * * *

ஸுனர் ராஜிநாமா

ஜெர்மன் நியூஸ் ஏஜன்ஸி செப் 3-ந் தேதி தெரிவிப்பதாவது:—ஸினர் ஸுனர் ஸ்பெயின் அந்நிய நாட்டு மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். அவருக்கு பதில் ஜெனரல் ஜோர்டானா ஸ்பெயின் அந்நிய நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஒவ்வொருவருக்கும் இடமிருக்கிறது.

பணம் சேமிப்பதற்காக நீங்கள் இதுவரை ஜாக்கிரதையுடன் போட்டிருந்த திட்டங்களெல்லாம் தவறிப்போயிருப்பினும் பாதகமில்லை.

இன்னும் பத்து அல்லது பதினைந்து வருஷ காலம் சம்பாதிக்கும் சக்தியுள்ள ஒவ்வொருவரும் தள்ளாத காலத்தில் ஆதரவற்றிருக்க நேரிடுமோ என்னும் பயத்தை உதறித் தள்ளிவிடலாம். இதற்கு அவருடைய வருமானம் அதிகமாக இருக்க வேண்டுமென்பதில்லை. வருவாய் சொல்பமாய் இருந்தால் கூட வாழ்க்கையில் பணக் கஷ்டமின்றி இருக்கலாம். எங்கள் பாலிஸிகள் இந்த உண்மையை உங்களுக்கு நிருபிக்கும்.

இந்தியாவில் ராணுவ உத்தியோகங்களில் இல்லாதவர்களுக்கு வழங்கப்படும் எங்கள் பாலிஸிகள் வழங்கப்பட்ட நிமிஷத்திலிருந்தே யுத்தத்தினால் எற்படும் விபத்துகளுக்கும் இதர விபத்துகளுக்கும் நஷ்ட ஈடு அளிக்கின்றன. இதற்காக அதிகப்படி செலவு கிடையாது.

யுனைடெட் இந்தியா
பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்.

'யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்'
எஸ்ப்ளனேட் : : : மதராஸ்.

உங்கள் துணிகளுக்கும்
மெல்லிய ஆடைகளுக்கும்
ஓர் விசேஷமான ஸோப்பு

உங்கள் ஆடைகளும் வீட்டிலுள்ள நல்ல துணிமணிகளுமெல்லாம் பிரத்தியேகமாக கவனிக்க வேண்டுபவை தானே. 501 ஸ்பெஷல் ஸோப்பு ஆடைகளை அதிக வெண்மையாக வெளுப்பதுமல்லாமல் அது கலப்பற்றதாகையால் விலையுயர்ந்த ஆடைகளுக்கும் கேடிழைக்காது. 501 ஸ்பெஷல் முற்றிலும் சுதேசிமிருகக்கொழுப்பற்றது

டாம்கோ விற்பனை இலாகா
A TATA PRODUCT
1, வாரன் ரோட், பீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி., டாடாபுரம் & பம்பாய்.

விதியின் சதி

சிறு கதை
★
எம். எஸ். கமலா
எழுதியது

மாலினி!.........

"? ? ?

மாலினி! மாலினி! மா...லி...னி!......

"ஏன்?"

"நான் சொல்வதை இன்று நீ கேட்டுத்தானுக வேண்டும். என் விருப்பத்தை எத்தனை முறை சொன்னுலும் ஏன் கேட்கமாட்டாய்? நான் சொல்வதை நிதானமாய் கேள். பிறகு அதன் உயர்வு தெரியும். சொல்வதற்கு முன்பே பிணங்குகிருயே!"

'உங்கள் ஆலோசனை நிறைவேறக் கூடியதல்ல, வேண்டாம். அதிகமாய் வற்புறுத்தாதீர்கள்'

"இனி சாந்தமாய் சொன்னல் ஏருது. பீபத்ஸத்தை கையாண்டு ரௌத்திரத்தை உபயோகித்து, தண்டப்பிரமேயத்தை கொடுத்து தண்டிக்க வேண்டியது தான்" என்று கன்னத்தில் சிறு தட்டு தட்டினன்.

"உங்கள் நடிப்பை ஏன் என்னிடமே காட்டி வீணுக்குகிறீர்கள். தயவு செய்து உங்கள் சபையில் சென்று ஆடுங்கள்."

"நீ இதற்குடன் பாடாவிடில் என் கோபம் எத்தகைய விதத்தில் பரிணமிக்குமோ நானே அறியேன். மாலினி! சொல்வதைக் கேள் இவ்வொரு முறை எனக்காக, என்னை ஆனந்தப்படுத்துவதற்காக நீ எங்கள் சபையில் வந்து நடிக்கத் தான் வேண்டும். நானுக ஸ்தாபித்து என் கஷ்டத்திலை நிலை நிறுத்திய இச்சபையின் ஆருவது ஆண்டு விழாவை அதியத்புதமாய்க் கொண்டாட முடிவு கட்டியுள்ளேன். என் நண்பர்களிடமும் சொல்லிவிட்டேன். கதாநாயகி வேஷம் தவிர மற்றெல்லா பாகங்களையும் அவரவர்களுக்குக் கொடுத்து கற்றுக் கொண்டுவிட்டார்கள். கதாநாயகியாகிய நீ தான், உன் பகுதியை கற்க வேண்டும். அதை நானே கற்றுக் கொடுக்கிறேன். கற்றுக்கொண்டு விடு. அன்றைக்கு மாத்திரம் கொட்டகைக்கு வந்து நடித்து விடு. போதும்! என் மேல் உனக்கு உண்மையாய் அன்பிருக்கும் பக்ஷத்தில்..." என்று இன்னும் ஏதோ சொல்லப் போகும் போது இருபது வயது மங்கை, ஆடவன் வாயைத் தன் அழகிய கரங்களால் மூடினுள்.

"உங்கள் முன் எவ்வளவு வேண்டுமானுலும் ஆடுகிறேன். உங்கள் சபையில் வந்து ஆடுவதென்பது நன்றுயில்லை. இதனுல் ஏற்படும் சங்கடம் அனுபவித்தே தீர வேண்டும். இது நல்லதற்கல்ல. விதியின் சதி நம் அன்யோன்யத்தையும் பிறகு..." என்று கண்ணீர் வடித்தாள்.

"மாலினி! ஒன்றும் வராது. நான் தானே உன்னை ஆடச் சொல்கிறேன். அந்த லாப நஷ்டம் எனக்குத்தானே? என் திருப்தி எதுவோ அதை நிறைவேற்றத்தானே நீ கடமைப்பட்டிருக்கிருய், அதை விட்டு ஏன் ஏதேதோ சொல்லித் தடுக்கிருய்? இன்றைக்கு எட்டாவது நாள் நீ என்னுடன் எங்கள் சபைக்கு வந்து உன் பாகத்தைத் திறம்பட நடித்து வந்து விட வேண்டும்." என்று கண்டிப்பாய் சொல்லி அவ்விடம் விட்டகன்றுன்.

* * * *

சுந்தரேசன் ஓர் முன்னேற்றக்காரன்: சீர்திருத்தவாதி. நாகரீகப்படியின் உச்சியில் நின்று இருபத்தோரும் நூற்ருண்டை பின்பற்ற ஆவலுள்ளவன். அவன் மனைவி மாலினி வெகு அழகுள்ளவள். அதியத்புதமாய் பாடுவாள். பள்ளியில் படிக்கும்போது அநேக நாடகங்கள் ஆடி, பரிசுகள் பெற்றிருக்கிருள். அவள் ஆடிய நாடகத்தைப் பார்த்து, அவள் பாவபூரிதமான நடிப்பில் திருப்தியடைந்த சுந்தரேசன் மாலினியை மணந்தான்.

சுந்தரேசன் ஓர் லாயர். மாதம் ரூ 500-க்கு குறையாமல் வருமானமுண்டு; "நவீன நாடக மண்டலி" என்ரெரு சபையை அமைத்து அதில் நாடகக் கலையை அபிவிருத்தி செய்து வந்தான். தன் வருமானத்தில் முக்கால பாகம் இந்நாடக மண்டலிக்கு செலவு செய்தான். எத்தனையோ கனதனவான்கள் அதில் சேர்ந்து நடித்துவந்தனர். ஏழையானுலும் பணக்காரனுனுலும், நடிக்குந்தன்மையும், உள்ளம் கவரும் பார்வையும் உடைத்தவனுயிருந்தால் தான் அச்சபையில் ஸ்தானம் கிடைக்கும். நடிகர்களை தேர்தெடுப்பது, நாடகங்களை ரஸிப்பது, நடிப்பைக் கற்றுக் கொடுப்பது, எல்லாம் சுந்தரேசனின் வேலை தான். சரீரசிரமத்தைப் பாராமல் சங்க உத்தாரணத்தை செய்வதில் திறமை பெற்றவன்.

ஹைகோர்ட்டை அலறி அடிக்கும்படி பேசவேண்டுமா? சுந்தரேசன்! ஸ்திரீ புனர் விவாஹம், அதில் கஷ்டப்பட்டுழைக்க வேண்டுமா? சுந்தரேசன்! அழகிய நாடகங்கள் எழுதவேண்டுமா? சுந்தரேசன்! இப்படி சுந்தரேசன்! "அங்கும் இங்கும் பங்கிருப்பேன். அனைவற்றிலும் நானிருப்பேன்" என்று எல்லாவற்றிலும் பங்கெடுத்துக் கொண்டு பிரக்யாதி யடைந்தான்,

அப்பேர்ப்பட்ட சுந்தரேசனின் மனைவி அழகுள்ள நடிகை. அதியத்புதமாய் பாடக் கூடியவள். அவள் அழகும், பாட்டும், நடிப்பும் எல்லோரும் தான் பார்த்து சந்தோஷப்படட்டுமே, என்று அவளைத் தன் நாடக மண்டலியில் வந்து கதாநாயகியாய் நடிக்கும்படிச் சொன்னுன்.

"மாலினி துக்கத்துடன் விதி வந்து விளையாடுகிறது. அன்யோன்ய தாம்பத்தியத்தை கலைக்க ஆசைப் பிசாசு பிடித்து ஆட்டுகிறது. வியோகம் ஏற்படுவதற்காகவே இவ்விபரீதம் நேர்ந்திருக்கிறது" என்று சொல்லிக்கொண்டாள். அச்சமயம் தொட்டிலில் குழந்தை 'அம்மா!' என்று அழுவதைக் கேட்டு அதை எடுத்து அணைத்துக்கொண்டாள்.

* * * *

எங்கு கண்டாலும் சுவரொட்டிகள். "நவீன நாடக மண்டலி" ஆருவது ஆண்டு விழா. அன்று இரவு ஒன்பது மணிக்கு "மனமில்லா மணம்" என்னும் நாடகம், மிஸஸ் சுந்தரேசன், மிஸ்டர் மஹேசகுமார், இவர்கள் இருவரால சாந்தி மஹாலில் நடிக்கப்படும் என்றும், 'நவீன நாடக மண்டலி' அங்கத்தினர்கள் நடிப்பது என்றும் ஒட்டப்பட்டிருந்தது.

அன்று வெள்ளிக்கிழமை. மாலினி தன்னறையில் வீற்று ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் முன்புறம் கட்டிலில் குழந்தை அமரநாதன் ஆடிக்கொண்டிருந்தான். அமரன் நிர்விசாரமாய் ஆனந்தமாய் விளையாடிக்கொண்டிருந்தான். சுந்தரேசன் அதியழகாய் உடுத்து சப்தமில்லாமல் அவள் பின்புறம் வந்து நின்று அவள் கண்களை மூடினுன். அவன் கைகளில் சுரீரென்று அவள் கண்ணீர் படவே "மாலினி என் அழுகிருய்? ஞாயிறன்றிரவு நடிக்க வேண்டும். உன் பாகத்தை படித்து முடித்துவிட்டாயா? எங்கே எழுந்திரு. எப்படி நடிக்கிறதென்று சொல்லிக் கொடுக்கிறேன்" என்று ஆர்வத்துடன் கட்டியணைத்தான். அவள் ஹிருதயத்தினுள் ஒலிக்கும் பாஷை அவனுக்கு அர்த்தமாயிருந்தால் அவன் வாழ்க்கையில் கஷ்டமே ஏற்பட்டிராது.

"விதி யாரை விட்டது! 'விதியின் சதி' அமோஹம். கண்களுக்ககப்படாமல் கண்ணீர் விட்டு கதறும்படி செய்யும். விதியின் விளையாட்டு எவ்விதத்தில் தொடங்கி எவ்விதத்தில் முடிகிறதென்று கற்றறிந்தவராலும் கடவுளாலும் நிர்ணயிக்கக் கூடாத விதமாய் இருக்கும். விதியும் காலத்தை யனுசரித்து காலதேவனுக்குக் கட்டுப்பட்டுத் தான் வரும். அதன் வருகையும் ரூப குணமும் தெரிந்தால் விதிக்காளாகாமல் விலகி நிற்கலாம். அதுதான் ஓர்மாயை ஆயிற்றே? அருபனன விதி அசேதன பொருள்களையும் ஆட்டுவித்து அலைக்கடிக்கும்போது நாம் எம் மாத்திரம்?"

'சாந்திமஹால், வாயிலில் பச்சிலை தோரணங்கள் அதற்கிடையில் வரிசை வரிசையாய் மனதைக் கவரும் மின்சார விளக்குகள். வாயிற்புறம் நாயனக்காரர்கள் 'சாயாதரங்கிணி' ராகத்தில் 'மாயே' என்ற கீர்த்தனத்தை மனதை மயக்கும் விதம் வாசித்துக்கொண்டிருக்கிருர்கள். இரவு நிர்மலமான ஆகாயத்தில் அங்கங்கே திட்டுத் திட்டாய் மேகங்கள் அசையாமல் நிற்கின்றன. அதையே பார்த்துக்கொண்டு நின்றிருந்த மாலினியின் மனதில் "கண்ணை மூடி மூடி திறக்கும் நக்ஷத்திரக் கூட்டங்களும் தன்னைப்பார்த்து கண்களை கொட்டுவதைப்போல தோன்றிற்று. நிர்மலாகாசத்தில் மேகத்திடல் நிற்பதைப்போல நிர்மலமான தன் மனதில் தோன்றி கத்திடல் வந்து அழுத்தமாய் நின்று விட்டதென்று அவள் மனதில் ஏதோ எடுத்து சொல்லிற்று.

மிஸஸ் சுந்தரேசனின் அழகை மாத்திரம் கண்டு வியந்த காமுகர்கள் இன்று அவள் நடிப்பைக் காணவும், அவள் சங்கீதத்தை கேட்கவும், ஆசை கொண்டு எல்லோரும் முதல் வகுப்பு டிக்கட்டே பெற்றுர்கள். டிக்கட் விற்பனையிலேயே அதிக லாபம் வந்தது. அளவற்றக் கூட்டம். சுந்தரேசன் பெருமையுடன் பெருமிதம் கொண்டான். தன் மனைவி அவளுக்கு அறவே விருப்பமில்லாவிடினும் தன் சொல்லிற்கிணங்கி நடிக்க [illegible]தது. பிரேக்ஷகர்கள் தன் [illegible]யின் நடிப்பைக் காண [illegible]தையும் பாராது பெருந[illegible]களுக்கு டிக்கட் பெறறு [illegible] அமைதியாய் வீற்றிருப்ப[illegible] முதலியவைகளைக் கண்டு மிக[illegible] ஆனந்தித்தான் "மனமில்லா மணம்"தின் மாண்பு எ[illegible] முடிவு பெறுமோ?

* * * *

நாடகமேடை திரை [illegible]கப்பட்டது. ஒரே[illegible]யாய் ஜனங்கள் கைதட்டி ஆர்ப்பரித்தனர், "மனமில்லா மணமும்" நடிக்கத் தொடங்கினுர்கள். கதைச் சுருக்கம் கீழ் வருமாறு:—

ஓர் தந்தை தன் மகளிற்கா[illegible] நிச்சயித்த ஓர் யுவனை ஏதோ மனத்தாங்கலால் விலக்கி வி[illegible] வேரெருவ வாலிபனுக்குத் [illegible] மகளைக் கொடுத்து விவா[illegible] செய்கிருர். மகளோ மு[illegible] தனக்காக நிச்சயிக்கப் ப[illegible] வாலிபனிடம் பிரேமை கொண்டுவிட்டாள். பிறகு தந்தையால் வேரொருவனுக்கு மணம் முடிக்கப்பட்டதும் தன் மனோ நிலையை மாற்ற பிரயத்தினப் படினும், தன்னுல் இயலாமற் போயிற்று. கணவனிடம் அணுகி அவனிடம், பேசச் செல்லும் போது அவள் முன் வந்து நிற்கும் நினைவு சித்திரம் பிரதம பிரேமரூபியே. அப்பால் இவனை கூப்பிடவோ அல்லது பேசவோ நடுங்குவாள். கணவன் என்று நினைத்து அருகில் சென்றுலும் கண்ணீர் அவளை மறைத்த அடியுடன் ஆ[illegible] விலகி நிற்கும்படிச் செய்யும். இதே "மனமில்லா மணம்."

மஹேசகுமார் டிப்டி சூப்ரெண்டெண்டு ஆப் போலீஸ் கதா நாயகன். உண்மையில் நாடக மேடையில் பல பேர் முன்னிலையில் தன் அன்பான காதலன். தன் உள்ளத்தை கொள்ளைகொண்ட சுந்தரேசன்

(13-ம் பக்கம் பார்க்க)

ரத்த பாசம்

ஹிந்திக்கதை
★
வெங்கடேசன்
மொழிபெயர்ப்பு

★

விநோத சங்கர்
எழுதியது

"இந்த புத்தியை விட்டு விடுங்கள்; உங்களுடைய காரியம் கைகூடாது"

"பேசாமலிரு- உனக்கு என்ன தெரியும்?"

"இது ஒரு வீரன் செய்யும் செய்கையல்ல, அநியாயம்"

"ரொம்ப நாளாகப் புகைந்து கொண்டிருந்த நெருப்பு இன்று சுடர் விட்டு எரிய ஆரம்பித்து விடும்" என்று சொல்லியவண்ணம் சக்தி ஸிங் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டே தன் மனைவியின் முகத்தைப் பார்த்தான்.

"குலத்திற்கே களங்கமாகி விடும்! இதனல் கடவுளின் தண்டனை உங்களுக்கு வரும்"

"பழிக்குப்பழி வாங்குவேன். ராணுபிரதாபின் கர்வத்தை மண்[illegible]டு மண்ணுக்கி இன்று [illegible]வற்றியடைவேன்" [illegible] கம்பீரமாகப் பேசிய[illegible]ணம் கூடாரத்தின் பக்கம் [illegible]தான்-மொகலாய சேனை [illegible] தலைமை அதிகாரி குதிரை[illegible]ப் பரீக்ஷை செய்து கொண்[illegible]ந்தான்: மற்ற வீரர்கள் வெகு [illegible]ாகத்துடனிருந்தார்கள்.

[illegible]ச்சயம். இன்று ராணு[illegible]று விடுவான். இருபத்[illegible]ாயிரம் க்ஷத்திர வீரர்களை [illegible]மொகலாய சேனை துவம்சம் [illegible]விடும்" என்று சக்தி ஸிங் மிகுந்த கர்வத்துடன் சொன்னுன்.

"அண்ணனுடன் சண்டை போட்டுக்கொண்டு தேசத் துரோகியாகப்போகிறீரா!......" என்று சொல்லும்போதே அவள் [illegible]ண்களில் நீர் துளித்தது.

சக்தி ஸிங் குற்றவாளியைப் [illegible] தலை குனிந்திருந்தான். [illegible]ருமை அவன் மனதில் காட்[illegible]தீ போல் எரிந்துகொண்[illegible]ந்தது, ராணு பிரதாப் சிங்கின் உயிரை வாங்கித்தான் தீருவேன் என்று அவன் சபதம் செய்துகொண்டிருந்தான் மனம் எந்த வழிக்கும் அவனைப் போக விடவில்லை. அதை யார் சமாதானப்படுத்துவது?

பேரிகை முழங்கிற்று. சப்தம் [illegible]திகமாகியது. மொகலாயசேனை [illegible]த்தகளத்தில் சக்தி ஸிங் சேனையுடன் ஒன்று கலந்தது. மின்னலைப்போல் கத்திகள் மின்னின. அன்று எல்லோரும் குதூகலமாகவே இருந்தார்கள். யுத்தத்திற்காக அவர்களுடைய தோள்கள் துடித்துக்கொண்டிருந்தன.

சக்தி ஸிங் குதிரை மீதேறி [illegible]கானைப் பிடித்துக் கொண்டு "இன்று கடைசித் தீர்மானம்— இருப்பதும் இறப்பதும்!" என்றுன்.

கூடாரத்தின் வாசலில் நின்று கொண்டிருந்த மோஹினி, தன் எதிர்கால வாழ்க்கையைப்பற்றி கற்பனை செய்துகொண்டிருந்தாள். அவள் மிகுந்த கம்பீரத்துடன் "என் கணவருக்குக் கட[வு]ள் நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டும்-இதுதான் என் வேண்டுதல்" என்றுள்.

2

நாசம் செய்யும் கொள்கையை நிறைவேற்ற ஏற்பாடுகளாகியிருந்தன. யானை குதிரைகளின் கோஷம் வானைப் பிளந்தது. காற்றின் வேகத்தால் மரங்கள் தலை விரித்தாடின. ஜீவ ஜந்துக்கள் பயத்தால் அடைக்கலத்திற்கு இடம்தேடிக்கொண்டிருந்தன.

மைதானத்தில் ராணுவின் சேனை அணி வகுத்து நின்றிருந்தது. ரதத்தின் மீது வீரர்கள் வில் அம்புடன் நின்றுகொண்டிருந்தார்கள்.

'மஹா ராணுவுக்கு ஜே! ஜே!! என்ற கோஷம் வானளாவியது. சேனைகள் கைகலந்து விட்டன. பைரவி சண்டிகா தேவி பிரளயத்தின் பிரவாகத்தை வெளிக்கிளப்பினுள். வீரர்கள் தங்கள் தங்கள் சபதத்தின்படி வேலையில் ஈடுபட்டார்கள். குதிரை வீரர்கள் காற்றைப் போல் கடிந்து எதிரியைத் தாக்கச் சென்றுகொண்டிருந்தார்கள். கத்திகள் உராய்ந்தன. மலையுச்சியிலிருந்து மொகலாய சேனையின் மேல் மழை போல் அம்பைவர்ஷித்தார்கள். காய்ந்த மணல் ரத்தப்பிரவாகம் ஈரமாக்கியது.

பெரும் புயல் கிளம்பிற்று. ஸலீமின் சேனைகள் தப்பி ஓடச் சமயம் கிடைத்தது. மொகலாய சேனைகளுக்கு ஒரு புது உற்சாகமுண்டாயிற்று. துப்பாக்கிக் குண்டுகள் நாலா பக்கங்களிலும் சிதரலாயின. அப்பா! உயிர் எவ்வளவு அல்பமாகி விட்டது!

ராணு பிரதாப் ஸிங் சிம்மத்தைப்போல் எதிரியின் சேனையில் புகுந்து கர்ஜிக்கலானுன். உயிரைப் பணயமாக வைத்தான். நான்கு பக்கங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கில் வெருண்டு வீழ்ந்தார்கள். சண்டை மும்முரமாகி மிகவும் கஷ்டத்தில் கொண்டுபோய் விடலாயிற்று. தப்புவது கடினமாகியது. பலமுறை கத்தி அடிபட்டும் ராணு காலைப் பின்னுக்கு எடுத்து வைக்கவில்லை; க்ஷத்திரியர்களின் வீரம் ஒன்றும் குறையவில்லை.

மான்சிங்கின் படைகள் வெற்றியடையும் தருணம் வந்தது. அந்தக் கஷ்டமான நிலைமையில் படைத்தலைவன் வீரமன்னு எப்படி வந்தான் என்று ராணு அவனைக் கவனித்தான். வீரமன்னு மேவாரின் ராஜச் சின்னங்களை அணிந்துகொண்டு அவனே படைக்குத் தலைமை வகிக்க முன் வந்தான்.

ராணு பிரதாப் சிங் ஆச்சரியத்துடனும் கோபத்துடனும் "இது என்ன?" என்று கேட்டான்.

"இன்று சாவதற்கு முன் ராஜ சின்னங்களை அணிந்து கொள்ள இஷ்டப்பட்டேன்" என்று சிரித்த வண்ணம் மன்னு சொன்னுன். அந்த மதம் பிடித்த சிரிப்பில் தைரியம் கலந்திருப்பதை ராணு கண்டு கொண்டான்.

மொகலாய சேனையுடன் கலந்திருந்த சக்தி ஸிங் அந்த நாடகத்தைக்கண்டான். ராணு பிரதாப் ஸிங் வெற்றியுடன் யுத்தகளத்திலிருந்து திரும்புவதையும், வீரமன்னுவை ராணு பிரதாப் ஸிங் என்று எண்ணி மொகலாய சேனை அவனைப் பின் தொடர்வதையும் கண்டான்.

அதே சமயம் மொகலாய சர்தார்களை அழைத்துக்கொண்டு சக்தி ஸிங் ராணுவைப் பின் தொடர்ந்தான்.

3

ஆட்டம் முடிந்துவிட்டது. சுதந்திரதேவியின் முன் கருப்புத்திரையிடப்பட்டது. ஜன்மபூமிக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்த வீரர்கள் ஸ்வர்க்கத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். இருபத்தோராயிரம் க்ஷத்திரியர்களில் எட்டாயிரம் பேரே எஞ்சினர்.

தேசத்துரோகி சக்தி ஸிங் மௌனமாக எதையோ யோசித்த வண்ணம் குதிரை மீது சவாரி செய்துகொண்டிருந்தான். வழியில் அநேக சவங்கள் கிடந்தன. தலை வேறு, கால் வேருகவும், சில துடித்துக்கொண்டும், சில ரத்தத்தில் புறண்டுகொண்டும் இருந்தன. எவ்வளவு ஆச்சரியமான சம்பவம்! இரண்டு மணி நேரத்திற்கு முன் சிரித்து விளையாடி, யுத்தத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் இப்போது எங்கே போய்விட்டார்கள்! இந்த அற்பமான வாழ்க்கையில் 'தான்' என்ற கர்வம்!

சக்தி ஸிங் கண்கள் வருத்தத்தால் கலங்கின. 'இவர்களும் க்ஷத்திரியர்கள் என் ஜாதியின் ரத்தம்! அடே யப்பா நான்! என் சபதம் பூர்த்தி யாகியதா- உண்மையில்! இல்லை, இது பழிக்குப்பழியில்லை. துரோக சிந்தனை! இது என்னைக் களங்கப்படுத்து வதற்கு உற்பத்தியாகிய பேய்! நான் பைத்தியக்காரன்! ராணு பிரதாபிடமா பழிவாங்குவது!- யார் தன் தாய் நாட்டைக் காப்பாற்ற உயிரைத் தியாகம் செய்தது!—அந்த தாய் நாட்டில் தானே நான் பிறந்து வளர்ந்தது! கடைசியாக இந்த சமயத்திலாவது, என் தாயை ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும்!' என்று பலவாருக எண்ணினுன். அதே சமயம் துப்பாக்கியிலிருந்து குண்டுகள் 'படபட'வென்று வெளிப்படும் சப்தம் கேட்டது. திடுக்கிட்டு சக்தி ஸிங் பூர்த்தபொழுது இரண்டு மொகலாய சர்தார்கள் ராணு பிரதாபைப் பின்புறமாகக் குறி வைத்துச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். ராணுவின் குதிரை புயலில் அகப்பட்ட மரம்போல் நின்ற நிலையிலிருந்து தடுமாறிக் கீழே விழுந்து துடித்துக்கொண்டிருந்தது. சக்தி ஸிங் மனதில் ரத்த பாசம் உற்பத்தியாயிற்று.

"நிறுத்துங்கள்!" என்று ஒரு குரல் கிளம்பிற்று. மறு வினடி சக்தி ஸிங்கின் துப்பாக்கி சீடலாயிற்று. மொகலாய சர்தார்கள் அவ்விடத்திலேயே சாய்ந்தார்கள். ராணு பிரதாப் ஸிங் கோபத்தால் சக்தி ஸிங்கைப்பார்த்தான். அந்தக் கண்களிலிருந்து 'என் உயிரை வாங்கி உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்துகொள்வாயா? இவ்வளவு க்ஷத்திரியர்களின் ரத்தத்தால் நீ திருப்தி அடையவில்லையா?' என்று சொல்வது [illegible]லிருந்தது.

சிறிது நேரத்திற்குப்பின் சக்தி ஸிங் ராணுவின் பக்கம் தலை குனிந்து நின்றிருந்தான். அவன் குழந்தைபோல விக்கி விக்கி அழலானுன். மிகவும் மெலிந்த குரலில் "அண்ணு நான் என் கர்வத்தினுல் உங்களை அலட்சியம் செய்தேன். உத்திரவிட்டால் என் ரத்தத்திலேயே என்னைச் சுத்தம் செய்து கொள்ளுகிறேன்— பிராயச்சித்தம் செய்துகொள்ளுகிறேன்!" என்றுன்.

ராணு அவனை மார்புடன் தழுவிக்கொண்டான். இருவர் கண்களும் அன்பின் மிகுதியால் கண்ணீரைப் பெருக்கின; இருவர் மனதும் ஒன்றுபட்டது,

அந்த நல்ல வேளையில் மரங்கள், மலைகள், பக்ஷியினங்கள் புஷ்பத்தை வாரி இரைத்தன. நதியின 'ஹோ' சப்தம் தேவகானம் போலிருந்தது.

பிரதாப் முன் போலவே அவனைப் பார்த்துக்கொண்டிருந்தான். பாலிய நினைவுகள் அவன் ஹிருதயத்தைப் பிளந்தன.

"அண்ணு, இனிமேல் தாமதம் செய்யாதீர்கள். குதிரை தயாராக இருக்கிறது" என்றுன் சக்தி ஸிங்.

ராணு, சக்தி ஸிங்கின் குதிரை மீது ஏறி ரணகளத்தைக் கடந்தான்.

4

பகல் பூராவும் வெட்டும் குத்துமாக இருந்த இடம். இரவு வந்தது. ஜன நடமாட்டமில்லாமல் நிசப்தமாக இருந்தது. கூடாரத்தினுள்ளிருந்த சீமாட்டிகளின் அழுகைக் குரல் ஹிருதயத்தைப் பிளக்கும்படியாயிருந்தது. ஆயிரக்கணக்கான பெண்கள் தங்கள் சௌபாக்கியத்தை இழந்தார்கள். அவர்

(13-ம் பக்கம் பார்க்க)

[illegible]மானப் படையைச் சேர்ந்த ஆறு அதிகாரிகள் சமீபத்தில் இந்தியாவில் க்ளஸ்டர் கோம[illegible] ஒரு விமான நிலயத்திற்கு விஜயம் செய்தபோது அவருக்கு அறிமுகமாக்கப்பட்டனர்.

[illegible] அழகாக சமையல் [illegible]ப்பட்டிருந்தது! விஜயன் [illegible]டுக் கொண்டே, "குமார் [illegible]பிட்டான்?" என்று [illegible] குடித்து விட்டுத் [illegible]ட்டான்!" [illegible] போடவில்லையா [illegible]

[illegible]னுராதா சிரித்[illegible] [illegible]ன்னுடன் தூங்க[illegible] [illegible]ன். ஆகையால் இன்று [illegible] [illegible]ாகவே இருக்கிருன். சண்டையே போட[illegible]!" என்ருள்.

"அவன் கா[illegible] தங்களுக்குத் தொல்லை அதிகரித்திருக்[illegible]றது. ஆயினும் அது எ[illegible] [illegible]காஷமல்ல. அவன் தானகவே [illegible]ப்படி உங்கள் [illegible]டும்பத்துடன் [illegible]சேர்ந்து விட்டான், இதைத் தான் நான [illegible] [illegible]க்கிறேன்" என்ருன் விஜயன்.

"நானும் இதைத் தான் யோசிக்[illegible]றேன்!"

"அவன் வீட்டுக்குச் சென்ற பின தங்களுக்குக் கஷ்டமாக இருக்குமென்று தோ[illegible]றது!"

அனுராதா முதலில் பேசாமல் இருந்தாள். பிறகு "அவனை விட [illegible]க்கழைத்துக் கொண்டுபோகும்போது தாங்கள் ஒரு [illegible]க்குக் கொடுத்து விட்டுப் போக வேண்டி ஏற்படும். அவனுக்கு எந்த விஷயத்திலும் கஷ்டம் ஏற்படக்கூடாது. இந்த விஷயம் தங்களுக்கு எப்பொழுதும் கவனத்தில் இருக்கவேண்டும்!" என்ருள்.

"நான் ஏதோ வேலைத் தொந்தரவின் காரணமாக வெளியே இருப்பேன். தங்களுக்கு கொடுத்த வாக்கைக் காபபாறற முடியும் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை" என்ருன் விஜயன்.

"ஆனல் பின்னே [illegible] அவனை [illegible]ளையே [illegible]ட்டுப் [illegible]ரீர் [illegible]

கூடாத விஷயம்" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே [illegible] சாப்பாட்டில் கவனம் செலுத்தலானுன். சாப்பிட்டுக் கொண்டே, நடுவில் "மன்னி முதலியவர்கள் வருவதாக இருந்தது. ஆனல் அவர்கள் இப்பொழுது வரவில்லை" என்ருன்.

"ஏன்?" என்ருள் அனுராதா.

"எந்த நோக்கத்தில் சொன்[illegible]ர்களோ அது ஒருக்கால்மாறிப் போயிருக்கும. நகரத்து ஜனங்கள், பட்டிக்காட்டுப் பக்கம் [illegible]லெடுத்து வைக்க அவ்வளவு சீக்கிரம் விரும்புவதில்லை. ஒரு விஷயத்தில் நல்லதாயிற்று. நான் ஒருவனே தனியாக உங்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறேன். அவர்களும் வந்துவிட்டால் இன்னும் தொல்லை ஜாஸ்தி தானே!" என்ருன் விஜயன்.

அனுராதா இதை எதிர்த்து "தாங்கள் சொல்வது அனுசிதம். வீடு என்னுடையதல்ல. தங்களுடையது! ஆயினும் வீடு பூராவையும நான் அடைத்துக்கொண்டு அவர்கள் வந்தபின் கோபிப்பேன் எ[illegible] இதைவிட அநியாயம் [illegible]ன்றும் இருக்க முடியாது என்னைபபற்றி இம மாதிரி நினைத்துக்கொண்டு. உண்மையாகவே எனக்கு நீங்கள் அநீதி இழைக்கிறீர்கள். தாங்கள் என் மீது எவ்வளவு தயை புரிந்திருக்கிறீர்கள். அதற்கு என் சார்பாக இதுதான பிரதிபலன்?" எனருள்.

இவ்வளவு [illegible]தைகள் இந்த விதமாக [illegible] இதுவரை சொன்ன[illegible] அவளுடைய பதிலைக் கேட்[illegible]ஜயன் செயலற்றுப் போனுன் கிராமத்துப் பெண்களை அவன் எவ்வளவு 'படிப்பற்ற[illegible]கள்' என்றுஎண்ணி இருந்தானே, அவ்வளவு படிப்பற்றவள் அல்ல அவள். சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டுப் பிறகு தன பிழையை ஒப்புக்கொண்டு "உண்மையில் நான் [illegible] உசிதமலலதான்.

இந்த வார்த்தைகள் யாருக்குப் பொருந்துமோ, அவர்களைவிடத் தாங்கள் பெரியவர்கள். ஆனல் இரண்டு மூன்று தினங்களுக்குப் பறகு நான் ஊருக்குச் செல்கிறேன். இங்கே வந்து, ஆரம்பத்தில் தங்களிடம் நான் தவறுதலாக நடந்துகொண்டேன். ஆனல் அது தெரியாமல் நடந்துவிட்டது. உண்மையாகவே உலகில் இப்படித்தான் அனேகமாக நடந்துவிடுகிறது. அடிக்கடி இதேதான் நடக்கிறது. இருந்தாலும்கூட ஊருக்குச் செல்லுமுன், ஆழ்ந்த வெட்கத்துடன் தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்" என்ருன் விஜயன்.

அனுராதா மிருதுவான குரலில் "தங்களுக்கு மன்னிப்புக் கிடைக்காது!" என்ருள். "கிடைக்காதா? ஏன்?"

"இதுவரை எவ்வளவு கொடுமைகள் செய்திர்கள் தாங்கள்! அதற்கு மன்னிப்புகிடையாது" என்று சொல்லி அவள சிரித்தாள் விளக்கின் மங்கிய ஒளியில், சிரிப்பு நிறைந்த அவளுடைய முகம் விஜயனின் பார்வையில் விழுந்தது. கனத்திற்குள் சொல்லமுடியாத ஒரு ஆச்சர்யம் அவன் ஹ்ருதயம முழுவதையும் ஒரு குலுக்குக் குலுக்கி சட்டென்று நின்றது. ஒருகணம் மௌனமாக இருந்துவிட்டு "இதுவே சரி! என்னை மன்னிக்க வேண்டிய அவசியமில்லை அபராதி என்ற உருவத்திலேயே நான் எப்பொழுதும் நினைவுக்கு வருகிறேன்" என்ருன்.

இருவரும் மௌனமானுர்கள். இரண்டு மூன்று நிமிஷங்கள் வரை அறையில நிசப்தம் நிலவியது. நிசபதத்தை அனுராதா குலைத்தாள்.

"தாங்கள் மறுபடி எப்பொழுது வருவீர்கள்?" என்று கேட்டாள்.

"அடிக்கடி வரவேண்டியதுதான். ஆனல் தங்களைச் சந்திக்க முடியாது" என்ருன் விஜயன்.

எதிர் தரப்பிலிருந்து இதற்கு யாதொரு பதிலும் வரவில்லை. விஷயம் உண்மைதான் என்று தெரிந்தது.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு விஜயன் வெளியே செல்லும்போது "கூடையில் நிறையக் கறிகாய்கள் இருக்கின்றன. ஆனல் அதை இப்பொழுது வெளியே அனுப்பவில்லை. நாளைக் காலையில் கூட தாங்கள் இங்கேயே சாப்பிடலாம்" என்ருள்.

"அப்படியே ஆகட்டும்! ஆனல் மற்றவர்கள் பசியை விட என் பசி பெரிதென்பதைத் தெரிந்துகொண்டிருப்பீர்கள்; இல்லாவிட்டால் நாளைக் காலையில் மாத்திரம் என்று சொல்லி இருக்க மாட்டீர்கள்! நிமந்தரண அளவைக் கொஞ்சம் விஸ்தரியுங்கள். எத்தனை நாள் இங்கே இருக்கிறேனே. அத்தனை நாளும தங்கள் கையினுல் சாப்பிட்டுவிட்டு ஊருக்குச் செல்ல முடியும்" என்ருன் விஜயன்.

"இது என்னுடைய பாக்யம்" என்று பதில் கிடைத்தது.

மறுநாள் காலையிலேயே பல விதமான கறிகாய் வகைகள் சமையலறையின் தாழ்வாரத் வந்து சேர்ந்தன. அனுராதா யாதொரு தடையும் செய்யாமல் யாவற்றையும் உள்ளே எடுத்து வைததுக் கொண்டாள்.

இதன் பின் மூன்று நாட்களுக்குப் பதில் ஐந்து நாட்கள் கழிந்தன. குமார் நன்ருக சுகமடைந்துவிட்டான். இந்தச் சில தினங்களில் விஜயன கூர்மையாகக் கவனித்து வந்தான். ஆனல் தன்னுடைய உபசரணையில் யாதொரு குறைவும் தென்படவில்லை. ஆனல் பரிச்சயத்தின் தூரம், அப்படியே, அசையாமல் தான் இருந்தது. எந்தக் காரணத்தைக் கொண்டும் சற்றும் அவள் நெருங்கி வருவதில்லை. தாழ்வாரத்தில் அவனுக்கு சாப்பிட இடம் ஏற்பாடு செய்து, அவள் உள்ளே இருந்து கொண்டே யாவற்றையும் அனுப்பி வைப்பாள். சந்தோஷன தான் பரிமாறுவான். குமார் வருவான். "அப்பா, மீன் கரிகாய் வகைகளை இம்மாதிரி எரிந்து விட்டுப் போனல் ஒன்றும் நடவாது. இன்னும் கொஞ்சம் சாப்பிட வேண்டுமென்று அததை சொல்கிருள்" என்பான்.

அதற்கு விஜயன் "உன் அத்தையிடம் அப்பா ராக்ஷஸன் இல்லை என்று சொல்" என்பான் குமார் இதைச்சொல்லிவிட்டுத் திரும்பிவந்து "மீன் கறிகாய்வகைகள் இருக்கட்டும்! ஒருககால பிடிக்காமலிருக்கலாம். ஆனல் நேற்று போல் இன்றும் லோட்டாவில் பாலை மிச்சம் வைத்துவிட்டுப் போனல் அத்தைக்கு வருத்தமாக இருககும்" என்பான்.

"நேற்றைய தினத்தைப்போல பால் ஒரு தவலையில் வைக்காமல், ஒரு லோட்டாவில் வைக்கச் சொல், அப்பொழுது மிச்சமாகாது" என்பான் விஜயன். இதுதான் அவனுக்குக் கிடைக்கும உபசாரங்கள்

(தொடரும்)

"சர்மா" மொழி பெயர்த்தது.

பூட்டு நோய்

வைத்ய ரத்ன
எம். துரைசாமி அய்யங்கார்
எழுதியது

மனித உடலில் வாததோஷம் அதிகரிப்பதால் உண்டாகும் வியாதிகள் அநேகம். சிலேஷ்ம குணம் குறைந்து வாதம் அமிதமாய் அதிகரிப்பதால் தேஹத்தில் விறைப்பும் விருபமும் வலியும் ஏற்படுவது ஸஹஜம். இக்கோளாறுகள் வாத விருத்தியால் அஸ்திகளென்கிற எலும்புகளில் விசேஷமாகவும் விரைவாகவும் காண்பது வழக்கம். வாத வ்ருத்தியாலும், சிலேஷ்மதாது க்ஷீணிப்பதாலும் தோன்றுகிற "ஸந்திஸம் ஸ்லேஷம்" அல்லது "ஸந்தி வாதம்" என்னும் நோயின் விவரம்அடங்கியது இக்கட்டுரை.

நமது தேஹத்தில் கை கால் முதலிய அவயவங்கள் ஒரே கொம்பு மாதிரியாயில்லாமல் தோன்றியவாறு ஸௌகர்யப்படி மடக்கவும், நீட்டவும், வேறு பல வகைகளில் அசைக்கவும், தகுந்த வகையில் ஸந்திகள் என்கிற பூட்டுகளோடு அமைந்திருக்கின்றன. ஒரு ஸந்தி அல்லது பூட்டு அசைக்க முடியாமல் விறைத்துக்கொள்ளும் விகாரமடைந்த நிலைமையைக் குறிப்பிடுவது "ஸந்திஸம் ஸ்லேஷம்" என்னும் பெயர். விறைப்பென்னும் விகாரத்தையும் வேதனையையும் விளைவிக்கும் இந்நோய் உடலில் எந்த ஸந்தி பாகமேன்னும் பூட்டைப்பற்றியாவது உண்டாகலாம். சரீரத்திலுள்ள எல்லாப்பூட்டுகளும் உழன்றசைய வகையின்றி முற்றிலும் அசைவற்றுப் போகும்படியான கஷ்ட நிலைமைக்கு ஆளான பேர்வழிகளையும் பார்த்திருக்கிறோம். அத்தகைய பிணியாளி படும் அவஸ்தையைக் காண நேரிட்டால், அவன் உயிர்பிழைத்திருப்பதை விட விரைவில் உயிர் துறப்பது மேலென எவரும் நினைக்க வேண்டி இருக்கும்.

வியாதியின் சின்னங்கள்

ஸந்தி ஸம் ஸ்லேஷம் அல்லது ஸந்திக்கிரஹம் எனப்படும் இந்த வியாதி ஆங்கிலத்தில் ஆங்கிலோஸிஸ் என்று வழங்கப்படும். இது ஏற்படுவதற்கு முன்பு குறிப்பிட்ட எலும்புப் பூட்டுகளுக்கு மேற்பக்கத்தில் சிலருக்கு வீக்கமும் வலியும் தோன்றுவதுண்டு அந்த பாகத்தில் சூடு அதிகமாயிருப்பதுடன் உடலிலும் உஷ்ணம் அதிகரித்து ஒரு சிறிது ஜ்வரக்குறியும் காணும். இப்பிணி முற்றிலும் எல்லாக்குறிகளோடு தோன்றுவதற்கு முன்பும், உண்டாயிருக்கையிலும் குடல் கடினமாவதால் மலச்சிக்கலும் அடிக்கடி தொந்தரவளிக்கும்.

ஸர்வ லக்ஷணங்களோடும் உண்டான் அல்லது உண்மையான ஸந்தி ஸம் ஸ்லேஷத்தில் அது எந்த ஸந்தியைத் (எலும்புப் பூட்டைத்) தாக்கியதோ அந்த ஸந்தி அல்லது பூட்டு முற்றிலும் அசைவற்றுப்போம்; ஒன்றோடொன்று கூடுகிற இரண்டு எலும்புகளின் முனைகளும் அஸ்தி தாது எனும் பொருளால் ஒன்று சேர்க்கப்பட்டு, உழலுக்குவதற்கு இயலாதபடி ஒருமிக்க இணைந்து விடுகின்றன. இதில் போலியான அல்லது அஸம்பூர்ணமான ஸந்திஸம்ஸ்லேஷம் ஒன்றுண்டு; இது பூட்டுகளில் இரண்டு எலும்புகளுக்கு இடையில் அவற்றை வழவழப்பாக வைத்திருக்கவும், உழலக்கூடியவாறு சேர்த்து வைக்கவும் உபயோகமாயுள்ள சிலேஷ்மகலையென்கிற ஈரப்பசையுடன் கூடிய சவ்வு ஒட்டிக்கொள்வதாலும், ஸந்தியிலுள்ள பாகங்கள் பருத்துக் கெட்டியாகப் போய்விடுவதாலும் உண்டாகிறது: இக்கோளாறு நேர்ந்தால் ஸந்தி வீக்கமும் வலியும் ஏற்பட்டிருந்த போதிலும் அப்பாகம் முழுதும் அசைவற்றுப் போகாமல் ஒரு சிறிது அசைந்தாட அனுகூலம் இருந்து வரும். ஆகவே இதில் ஸம்பூர்ண ஸந்தி ஸம்ஸ்லேஷம் என்றும், ஆபாத ஸந்திஸம் சிலேஷம் என்றும் (உண்மைப் பூட்டுச் சேர்க்கை, போலிப் பூட்டுச் சேர்க்கை என்று) இரண்டு வகை உண்டென்று அறியவும்.

எப்படி ஏற்படுகிறது?

எலும்புப் பூட்டுகள் எக்காரணங்களினுலேனும் தாக்கப்பட்டு கழன்று போனலும், அவ்விடங்களில் வேறு ஏதேனும் சிதைவு ஏற்பட்டாலும் பலமான சுளுக்குகள் சம்பவித்தாலும், அஸ்தி பங்கமென்னும் எலும்பு முறிவு நேரிட்டாலும், அக்கோளாறுகள் அப்போதைக்கப்போது ஏற்றவாறு சிகித்ஸைகளால் பரிஹரிக்கப்படாமற் போனலும் "ஸந்தி ஸம்ஸ்லேஷம்" என்னும் இக்கோளாறு பலருக்கு உண்டாவது வழக்கம். எககாரணத்தைக் கொண்டாவது கை கால் முதலிய அவயவங்களை அசைக்கக் கூடாதவாறு நீட்டிக் கட்டிப் போட்டதுபோல் நிர்ப்பந்த நிலைமையில் வைத்து வந்தால், அதனுலும் இக்கோளாறு காண்பதுண்டு. தேஹத்தில் சிலேஷ்ம தாதுவும், முக்கியமாய் ஓஜோதாதுவென்கிற ஜீவதாதுவும், மிகக் குறைந்து வந்தால், அதைக் காரணமாகக் கொண்டும் ஸந்தியம் ஸ்லேஷம் என்னும் இக்கடுமையான வியாதி யுண்டாகும். மூத்திர க்ருச்சிரம் என்கிற நீர்ச் சுருக்கும், மூத்திராச்மரீ என்னும் மூத்திர மார்க்கத்திற் கல்லடைப்பு ஏற்படுவதும் சிலருக்கு இவ்வியாதிக்குக் காரணமாகின்றன.

ஸந்திஸம்ஸ்லேஷத்தைத் தடுப்பதற்கு சில உபாயங்களை அனுசரிக்கலாம். ஸந்திகளில் (எலும்புப் பூட்டுகளில் ஆகந்துக) விகாரங்கள் என்கிற சிதைவு அல்லது பூட்டு கழன்று போதல் போன்ற கோளாறுகள் தவிர வேறு வகையான வாத தோஷ ஸம்பந்தமான கோளாறுகள் ஏற்பட்டிருக்குமானல் அப்பொழுது அந்தப் பூட்டுபாகம் இடங்கொடுக்குமளவும் அவ்வயவத்திற்கு வியாயாமம் கொடுப்பது நலம். அதாவது அப்பூட்டு எந்த அவயத்தைப், பற்றியுளதோ அவ்வவயவத்தைக் கூடுமான வரையில் சிறிதேனும் உழன்று அசையச் செய்து தினந்தோறும் குறிப்பிட்ட நேரங்களில் லகுவாக வேலை செய்வது உசிதம். சிறிதும் அசைக்க வியலாமற் போனல் அவ்வவயவத்தை எந்த நிலைமையில் அமர்த்தி வைத்தால் அது அதிக வேதனை யளிக்காமல் ஸௌகர்யமாயிருந்துவரக் கூடுமோ அவ்விதமாய் அதை ஏற்ற பலகை முதலியவற்றின் மீது அமர்த்தி வைக்க வேண்டும், மலச்சிக்கல் இருந்து வந்தால் அது இவ்வேதனையை அதிகரிக்கச் செய்யுமாகையால். உடனுக்குடனே நிலாவிரை கஷாயத்தையாவது ஸைந்தவாதிக்வாதம் என்னும் கஷாயத்தையாவது உட்கொண்டு, தாராளமாக விரேசநம் (பேதி) ஆகச் செய்தால் இது அதிகம் தொந்தரவளிக்குமாறு விருத்தியாவதில்லை, ஆமவாதம் என்கிற கடுமையான கீல்வாயு கிருத்ரஸீ முதலிய இதர வாயு ரோகங்கள் இருந்தால் வாதவித்வம்ஸநீ மஹாயோகராஜகுக்குலு காஞ்சநாரகுக்குலு ஆகிய ஔஷதங்களில் எதையேனும்உபயோகித்து அவ்வித வாதக்கோளாறைப் பரிஹரித்துக் கொள்வதாலும் ஸந்திஸம் ஸ்லேஷ நோய் ஏற்படாது தடுக்கலாம். எலும்புப் பூட்டுகளில் சிறிது வேதனையாவது பிடிபபாவது ஏற்பட்டிருக்கும்போது உடனே அதில் கவனம் செலுத்தி அவ்வவயவத்தைச் சாத்தியமான வரையில் அசைத்து உபயோகித்துக் கொண்டும் மலச்சிக்கலை நிவ்ருத்தித்துக்கொண்டும் விவேகத்துடன் நடந்து வந்தால் ஸந்திஸம் ஸ்லேஷக் கொடுமையைப் பெரிதும் தடுத்துக் கொள்ளலாம்.

முன்ஜாக்ரதை அவசியம்

சிகித்ஸை செய்யும் விஷயத்தில் இவ்வியாதியால் வருந்த நேரிட்டவருக்கு முன் ஜாக்கிரதை வேண்டும். ஸந்திபாகத்திலுள்ள ஸ்லேஷ்மத் திரவம் முதலிய பசைகள் வறண்டு போய் எலும்புகளின் முனைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு முழுதும் அசைவற்றுப் போனபிறகு எச் சிகித்ஸையும் பெரும்பாலும் பயன்படுவதில்லை. இதை யோசித்து வியாதியின் ஆரம்பநிலைமையிலேயே பூர்வரூபம் என்னும் முற்[illegible] முதலியவை தோன்றியவுட[illegible] கற்றறிந்த வைத்தியருடைய உ[illegible]வியை நாடி ஏற்ற பரிஹார[illegible] செய்து கொள்ள முயலுவ[illegible] புத்தி சாலித்தனமாகும்.

தேஹத்தில் ஏதேனும் ஒரு பூட்டிலோ, பல பூட்டுகளிலே[illegible] சிறிது வலியும் வேதனையு[illegible] அசைக்க முடியாத கஷ்ட[illegible] தோன்றியவுடனே தேஹத்தி[illegible] ஓஜோதாது விருத்தியா[illegible] கூடிய ஸத்துள்ள மௌக்[illegible] பஸ்பம் அல்லது ஸ்வர்ண பஸ்பம் அல்லது அச்சரக்குகள் சேர்ந்த வேறு ஔஷதங்கள் உட்கொள்வதற்கு வெகு உபயோகமுள்ளவையாகக் கருதப்படுகின்றன. அம்ருதப் பிராசக்ருதமும். ஆயுஷ்ய ரஸாயனமும் கூட அவ்வித குணமுள்ளவையே. இதில் வாதஹரமான மருந்துகளும் கூடவே உபயோகிக்க வேண்டியிருப்பதால் லக்ஷ்மீவிலாஸ ரஸம் என்னும் மாத்திரையும் உபயோகிப்பது நலம், மஹாராஸ்நாதி தைலத்தை அவ்விதப் பூட்டுகளின்மேல் தினந்தோறும் பல தடவை தேய்த்து, வாதநாராயணக் கீரையை வதக்கி வைத்துச் சூடாயிருக்கும்போதே அவ்விடத்தில் அழுத்திக் கட்டி வைக்கலாம். பாலில் பூனைக்காஞ்சோறி விதைகளை உடைத்துப் போட்டுக் காய்ச்சி, இரவிலும் காலையிலும் பருகலாம். ஸந்திஸம் ஸ்லேஷம் என்னும் இப் பூட்டுப் பிடிப்பு வியாதியால், பால், வெண்ணெய் (ஆக்ஷேபமில்லையேல்) முட்டைகள், வாற்கோதுமைக் கஞ்சி, வெண்டை, புதிதான இரையினங்கள் முதலியவற்றைப் பிணியாளி தாராளமாய் உபயோகிப்பது நலம்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

தனயந்தே ப்ரேம யனுச விரிபோனுலு
தலதெலியக ஞடேரு

அனு பல்லவி

அனயமு மோஹமுமீரக க்ருஷ்ணுடு
அந்தரி கன்னி.ரூபமுலெத்தி யாடக

சரணம்

1. கொந்தரி பங்காரு கொங்குலு பட்ட
கொந்தரி பதமுல பாகுக நெட்ட
கொந்தரி ஸொகஸுனு கனுலார ஜூட
கொந்தரி மனஸு தெலஸி மாடலாட
2. கொந்தரி யங்கமுன்னு பவ்வளிம்ப
கொந்தரி பெதவுல பலு கெம்புலுஞ்ச
கொந்தரி தனவுல கரலீல ஸேய
கொந்தரி வெனக நிலிசி ஜடவேய
3. கொந்தரி நுதுட கஸ்தூரி பொட்டுபெட்ட
கொந்தரி தளுகு செக்குல முத்து பெட்ட
கொந்தரி பாலிண்ட்ல பன்னீரு ஜில்க
கொந்தரிதோ த்யாகராஜனு துடு பல்க

II

க்ருஷ்ணுடு—ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா
அனயமு மோஹமு மீரக—கோபியர்களுக்கு தன்னிடம் அதிகமாக மோஹம் ஏற்படும்வண்ணம்
அந்தரிகி அன்னி ரூபமுலு எத்தி—ஒவ்வொரு கோபிகைக்கு ஒவ்வொரு க்ருஷ்ணனாக ரூபமெடுத்துக்கொண்டு
கொந்தரி—சில கோபியரின்
பங்காரு கொங்குலு பட்ட—பொன் மயமான வஸ்திரங்களை பிடித்து இழுத்தும்
கொந்தரி—சிலரின்
பதமுல பாகுக நெட்ட—கால்களை நன்றாக பிடித்துத் தள்ளியும்
கொந்தரி—சிலரின்
ஸொகஸுனு—அழகை
கனுலாரஜூட—கண்களால் பார்த்துக்கொண்டும்
கொந்தரி—சிலரின்
மனஸு தெலஸி மாடலாட—மனமறிந்து தகுந்தபடி அவர்களுடன் பேசிக்கொண்டும்
கொந்தரி—சிலரின்
அங்கமுன்னு பவ்வளிம்ப—மடி மீது படுத்துக்கொண்டும்
கொந்தரி—சிலரின்
பெதவுல பலு கெம்புலுஞ்ச—உதடுகளில் அதிகமான சிவப்பு வர்ணங்களைப் பூசி பரிகாசம் செய்துகொண்டும்
கொந்தரி தனுவுல கரலீல ஸேயு—சிலகோபியரின் சரீரத்தை கைகளால் தொட்டு அவர்களுடன் விளையாடிக்கொண்டும்
கொந்தரி வெனக நிலிசி ஜட வேய—சில கோபியரின் பின்புறம் நின்றுகொண்டு அவர்களுக்கு தலைவாரி பின்னிக்கொண்டும்
கொந்தரி நுதுட—சில கோபியரின் நெற்றியில்
கஸ்தூரி பொட்டு பெட்ட—அழகாக கஸ்தூரி திலகம் இட்டு விளையாடிக்கொண்டும்
கொந்தரி தளுகு செக்குல—சில கோபியரின் அழகான கன்னங்களில்
முத்து பெட்ட—முத்தமிட்டு விளையாடிக்கொண்டும்
கொந்தரி பாலிண்ட்ல—சில கோபியரின் மேனியில்
பன்னீரு ஜில்க—பரிமளம் மிகுந்த பன்னீரைத் தெளித்து விளையாடிக்கொண்டும்
கொந்தரிதோ—சில கோபியர்களுடன்
த்யாகராஜநுதுடு—த்யாகராஜனால் துதிக்கப்பட்ட கண்ணன்
பல்க—ஆனந்தமாக பேசிக்கொண்டு
ஆட—இவ்விதம் கண்ணன் லீலாவினோதங்களைச் செய்ய
விரிபோனுலு—கோபிகா ஸ்திரீகள்
தனயந்தே—தன்னிடத்திலே தான்
ப்ரேமயனுத்ஸு—கண்ணன் அதிகப்ரேமை வைத்துள்ளான் என்று ஒவ்வொருவரும் எண்ணம் கொண்டு
தலதெலியகன் ஆடெரு—தங்களை மறந்தவர்களாய் தலை தெரியாமல் ஆடினார்கள்.

III

முன் கதைச் சுருக்கம்:—கண்ணன் வேணுகானத்தைக் கேட்டுப் பரவசமடைந்த கோபியர்கள் அவனுடன் யமுனா தீரம் சென்றனர். அங்கு யமுனையில் காணப்பட்ட ஓர் ஓடத்திலேறி குதூஹலமாகப் பொழுது போக்க எண்ணங் கொண்ட கோபியர்கள், கண்ணனைத் தங்களுடன் அழைத்துச் சென்றால் ஏது நேருமோ என கவலை மிகுந்தவர்களானார்கள். அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணன் தனது உண்மை ஸ்வரூபத்தை விளக்கி அவர்களுக்கு சமாதானம் கூறினார். அதனால் தைரியமடைந்த கோபியர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் கண்ணனுடன் ஓடத்திலேறினார்கள்.

தனயந்தே:—இது நௌகா சரித்திரம் 7-வது கீர்த்தனம் பக்தைகளான கோபிகைகளுக்கு இன்பமூட்ட எண்ணி பகவான் ஒவ்வொரு கோபிகைக்கும் ஒவ்வொரு கண்ணனாகக் காக்ஷி யளித்து அருள்புரிந்தபோது கோபியர்கள் பரவசமடைந்தவர்களாய் நடந்து கொண்ட விவரத்தை இக்கீர்த்தனத்தால் குறிப்பிடுகிறார்.

அனயமு:—பகவான் கோபியர்களுடன் ராஸக்ரீடை செய்த சந்தர்ப்பத்தை விவரிக்கும்.

அங்க நாமங்கனா மந்தரே மாதவோ
மாதவம் மாதவம் சாந்தரேணாங்கனா!
இத்தமா கல்பிதே மண்டலே மத்யக:
ஸஞ்ஜகௌ வேணுனா தேவகீ நந்தன:॥

என்ற ச்லோகத்திலும் ஸ்ரீ க்ருஷ்ணன் இவ்வித லீலா விநோதத்தைச் செய்த விஷயம் விவரிக்கப்பட்டுள்ளது.

கொந்தரி:—பகவானாகிய கண்ணன் ஒவ்வொரு கோபிகையிடத்திலும் தோன்றி அவர்களுடன் விளையாடி மகிழ்ந்ததை இந்தக் கீர்த்தனத்தின் சரணங்களால் விவரிக்கிறார்.

IV

ராகம் பைரவி — மிச்ர சாபு தாளம்

20-வது மேள ஜன்யம்—ஸம்பூர்ணம்.

பல்லவி

; தா நீ	ஸ்ா ; ரீ ;	ஸ்ா ; நீ	தா ; பா ;
த . ன	யந் . தே	ப்ரே .	ம ய்
பா ஸ்ா நீ	தா ; பா ;	மக மாபா	மாகா ரீ ;
னு சு .	வி ரி	போ	னு . லு
ஸா காரீ	ஸாநீ ஸா ;	ரீ ரீ ஸா	ரீகா மகபம
. தல	தெ . லி	ய க	ன டே . . .
மக ரீ ;	; ; ரிஸநீ	ஸா ; ;	; ; ; ;
ரு . .	. .	. . .	

அனுபல்லவி

; பா மா	பா ; தா .	தா . நீ ;	ஸ்ா ; ஸ்ா ;
அ ன	ய மு	மோ .	ஹ மு
; நித நீ	ஸ்ாரிஸ் ரிம்க்ரி	ஸ்நிரி ஸ்க்ரி	ஸ்நிதா பா ;
மீ .	ர . . க . .	க்ரு	ஷ்ணு . . டு
; ; தநி	ஸ்ா ; ஸ்ா ;	ஸ்நி ரிஸ்நி	நீதா பா ;
அந் .	த ரி	கன் . .	னி . ரூ
மபத நிஸ்ரி	ஸ்நிதா பா ;	பநித பதம	பா ; தா நீ
ப . . மு . . .	லெத் . . தி	யா	. ட .

சரணம்

; நீ ;	தா ; பா ;	பா பதாம	பா ; தா நீ
கொந் .	த ரி	பங் . .	கா ரு .
; நித நீ	ஸ்ா ; ஸ்ா ;	ஸ்நி ரிஸ்ாநி	நீதா பா ;
கொந் . .	கு . லு	பட் . . .	. . ட
; பா மா	பாநீ தாபா	மக மபதப	பம்கா ரீகம
கொந் . .	த . ரி .	ப . த . . .	மு . . லு .
ரிகஸா . ரிக	மா ; மா ;	பபமா . நீ	தா ; பா ;
. . . பா .	கு க	நெட் . . .	. ட

(இதற்கு மேல் அனுபல்லவி போன்றது.)

முன் கதைச் சுருக்கம்

★

விஜயன் ஜமீன்தார் ஹரிஹர கோஷாலின் புத்திரன்: சீமை சென்று திரும்பியவன்: மனைவி இறந்துவிட்டாள்: ஒரே பிள்ளை தான் அவனுக்கு. கனேசபுரத்தில் இருந்த வீட்டைத் தானே நேரில் போய் காலி செய்வதற்காக அவன் வந்தான்: தன் சிறு பிள்ளையையும் தன்னுடன் அழைத்துக்கொண்டே போனான். வீட்டில் அவன் எதிர்பார்த்த ஆஸாமி இல்லை. அனுராதா மட்டும் இருந்தாள். விஜயன் அவ்விடத்தில் தங்கியிருக்க நேரிடுகிறது. ஆகவே விஜயனின் புத்ரனை அனுராதா மிகுந்த பரிவுடன் கவனித்து வருகிறாள்: வித்தியாசமின்றி நடத்திவருகிறாள்: இது விஜயனுக்குத் தெரியும். ஆகவே அவனுக்கும் அனுராதாவுக்கும் இது காரணமாக அடிக்கடி பேச்சு நேரிடுவதுண்டு. இந்த நிலைமையில் ஒரு நாள் விஜயனிடம் ஒரு கிழவர் வந்து தாம் அனுராதாவை அவள் இஷ்டத்திற்கிணங்கி மணக்க முடிவு செய்திருப்பதாகக் கூறினார்: இந்தச்செய்தி விஜயனைத் திடுக்கிடப்பண்ணுகிறது. அவன் உடனே அனுராதாவை அண்டி இதைப்பற்றி விசாரிக்கிறான். இருவரும் சம்பாஷிக்கின்றனர். மேலே என்ன பண்ணுவதென்று கூற விஜயனுக்குத் துணியவில்லை. இது நிற்க, அனுராதா குமாரிடம் காட்டும் ப்ரீதியும் அன்பும் விஜயனுக்கு மிகுந்த த்ருப்தியைத் தருகின்றன.

* * * * * *

நமது தொடர் கதை

விஜயனின் காதலி

★

—டாக்டர் சாட்டர்ஜி எழுதியது—

6

இந்த விதமாகக் கழிந்தன இந்த ஐந்தாறு தினங்களும். ஸ்திரீகளின் மரியாதை, உபசாரங்களெல்லாம் எப்பொழுதுமே விஜயனுக்கு விளங்கியதில்லை, அவன் சிறு வயதிலிருந்தே தன் தாயைப் படிப்பற்றவளாகவும், அறியாதவளாகவுமே எண்ணி வந்திருந்தான். குடும்ப ஸ்திரீ செய்ய வேண்டிய ஒரு கடமையையாகிலும் அவள் பூர்த்தி செய்ததில்லை. அவனுடைய மனைவியும் இரண்டு மூன்று வருஷம் தான் ஜீவித்திருந்தாள். தவிர அப்பொழுது அவன் படித்துக்கொண்டிருந்தான், இதன் பின் அவனுடைய நாட்கள் அநேகமாகப் பிரயாணத்திலேயே கழிந்து வந்தன. அந்த தசையில் அவனுடைய அனுபவங்களின் நல்லது கெட்டது போன்ற பல நினைவுகள் அவனுக்கு எப்பொழுதாவது வரும். ஆனால் அவையெல்லாம் புஸ்தகங்களில் படிக்கும் கற்பனைக் கதைகள்போல் உண்மையற்றவையாகத் தோன்றும். வாழ்க்கையின் உண்மை ஆவசியகங்களுடன் அதற்கு யாதொரு சம்பந்தமுமே கிடையாது.

மதனி பிரபாமயி! எந்தக் குடும்பத்தில் மதனிக்குப் பிராதான்யம் வாய்ந்து அவனுடைய நன்மை தீமைகளை ஆலோசனை செயது வந்ததோ அது அவனுடையதாகத் தோன்றவில்லை. தனது தாய் பல தடவை அழுது கொண்டிருந்ததை அவன் கண்டிருக்கிறான். தனது தந்தை வருத்தமாயும், கோபமாயும் இருந்ததைப் பார்ததிருக்கிறான். ஆனால் இந்த விஷயங்களை எல்லாம் அனுசிதமாகவும், தன்மையற்றதாகவுமே எண்ணினான்,

மதனி தன் மைத்துனன் மகனைப்பற்றி சிரத்தை எடுக்காமல் இருக்கட்டும். நாட்டுப் பெண் மாமன் மாமிக்கு சேவை செய்யாமல் இருக்கட்டும்—இது ஒரு பெரிய குற்றம் என்று அவன் எடுத்துக்கொள்வதில்லை. தன் மனைவி இம்மாதிரி முறையில் நடந்தால் கூட அவனுக்கு வருத்தம் உண்டாகி இருக்குமோ என்னவோ—அது இல்லை. ஆனால் இன்று அவனுக்கு இவ்வளவு தினங்களின் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இந்த ஐந்து தினங்களில் அவனிடையே ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது. இன்று மாலை வண்டிக்கு அவன் கல்கத்தா செல்வதாக இருந்தான். வேலைக்காரன் சாமான்களை மூட்டை கட்டி, பிரயாணத்திற்காக வேண்டியதைத் தயார் செய்துகொண்டிருந்தான். சில மணி நேரம் தான் பாக்கி இருந்தது. இதற்குள் சந்தோஷன் மறைவிலிருந்து கொண்டே "அத்தை சாப்பிடக் கூப்பிடுகிறாள்!" என்றான்.

"இப்பொழுதா?" என்றான் விஜயன்.

"ஆமாம்" என்று அங்கிருந்து நழுவினான் சந்தோஷ்.

விஜயன் உள்ளே சென்று பார்த்தான். தாழ்வாரத்தில் ஆசனம்போட்டு சாப்பிட ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது அத்தையின் தலைப்பைப் பிடித்து குமார் இழுத்துக் கொண்டிருந்தான். அவன் கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அனுராதா சமையலறைக்குள் நுழைந்தாள்.

விஜயன் ஆசனத்திலமர்ந்து கொண்டே "இப்பொழுது இந்த வேளையில் இதென்ன?" என்றான்.

உள்ளே இருந்து கொண்டே அனுராதா, "கொஞ்சம் கிச்சடி செய்திருக்கிறேன்! சாப்பிட்டு விட்டுச் செல்லுங்கள்!" என்றாள்.

இன்று பதில் சொல்லும் போது விஜயன் தனது தொண்டையைச் சிறிது சரி செய்து கொள்ள வேண்டி இருந்தது. "வேளையற்ற வேளையில் தாங்கள் ஏன் சிரமம் எடுத்துக் கொண்டீர்கள்? நாலைந்து பூரியை போட்டிருந்தால் ஆகி இருக்குமே" என்றான்.

"தாங்கள் தான் பூரி சாப்பிடுவதில்லை. வீடு போய்ச் சேர ராத்திரி மூன்று மணியாவது ஆகும். தாங்கள் சாப்பிடாமல் போனால் மாத்திரம் எனக்குக் கஷ்டமாக இருக்காதா? குழந்தை சாப்பிடாமல் வண்டியில் செல்கிறதென்ற நினைவே வந்து கொண்டிருக்கும்!" என்றாள் அனுராதா.

விஜயன் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பிறகு "விநோதனிடம் சொல்லி விட்டேன். அவன் தங்களைப் பார்த்துக்கொள்வான் தாங்கள் எவ்வளவு நாட்கள் இந்த வீட்டில் இருக்கிறீர்களோ தங்களுக்கு யாதொரு கஷ்டமும் ஏற்படாது: என்று சொல்லி விட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு மீண்டும் "இன்னொரு விஷயம் தங்களிடம் சொல்லி விட்டுப் போகிறேன். எப்பொழுதாவது சந்திப்பீர்களானால் ககனை மன்னித்துவிட்டதாகச் சொல்லி விடுங்கள். ஆனால் இனி இந்தக் கிராமத்திற்கு அவன் வரக்கூடாது. வந்தால மன்னிக்க மாட்டேன்" என்றான்.

"எப்பொழுதாவது சந்தித்தால் சொல்லி விடுகிறேன்" என்று சொல்லி அனுராதா சிறிது மௌனமானாள். பிறகு சில நிமிஷங்கள் பொறுத்து "குமாரைப் பற்றிய வரையில் கஷ்டம் தான். இன்று ஊருக்குச் செல்ல அவன் விரும்பவே இல்லை. ஏன் போகவிரும்பவில்லை இதையும் சொல்ல வில்லை" என்றாள்.

"அவனுக்கே தெரியாது, அதனால் தான் சொல்லவில்லை. தவிர, அங்கே சென்றால் கஷ்டமாக இருக்குமென்பதைக் கூட மனதிற்குள் நினைக்கிறான்" என்றான் விஜயன்.

"கஷ்டம் என்ன?"

"அந்த வீட்டின் வாடிக்கை அப்படி கஷ்டமாகவே இருக்கட்டும். அவன் இவ்வளவு பெரியவனானது அந்த வீட்டில் தானே.

"ஆனால் அவனை அழைத்துச் செலல வேண்டிய அவசியமில்லை. இங்கே என்னுடனேயே விட்டு விட்டுச் செல்லுங்கள்!"

விஜயன் சிரித்துக் கொண்டே, "எனக்கொன்றும் தடையில்லை. ஆனால் மிஞ்சி மிஞ்சிப் போனாலும் ஒரு மாதம் இருக்க முடியும், அதை விட அதிகம் இருக்க முடியாது! இதிலென்ன லாபம்?" என்றான்.

இருவரும் மௌனமாக இருந்தார்கள் பிறகு அனுராதா "இவனுக்கு வரப்போகும் மாற்றாந்தாய் படித்தவள் என்று கேள்வி!" என்றாள்.

"ஆமாம! அவள் பீ. ஏ. பாஸ் செய்திருக்கிறாள்."

"பீ. ஏ. தான் இவனுடைய பெரியம்மா கூட பாஸ் செய்திருக்கிறாளோ!"

"செய்திருக்கிறாள்! ஆனால் பீ. ஏ. பாஸ் செய்த புஸ்தகத்தில் ஓர்ப்படியின் பிள்ளையிடம் அன்பாய் இருக்க வேண்டுமென்று எழுதி இருக்கவில்லை. இந்த விஷயத்தில் அவள் பரிக்ஷை கொடுக்கவும் இல்லை."

"இன்னும் நோய் வாய்ப்பட்ட மாமன் மாமியைபற்றிக் கூட அந்தப் புத்தகத்தில் எழுதி இருக்க வில்லையா?"

"இல்லை. இந்த விஷயம் இன்னும் வேடிக்கையானது!"

"வேடிக்கையல்லாமல்! இந்த மாதிரிக் கூட ஒன்று உண்டா?"

"இருக்கிறது! எந்த விஷயத்தைப்பற்றியும் சிறிதுகூட குறை கூறாமல் இருப்பதுதான் எங்கள் சமூகத்திற்குக் கௌரவமான நியமம்!"

அனுராதா கண நேரம் மௌனமாக இருந்து விட்டு "இந்த நியமம் தங்களுக்கே இருக்கட்டும். ஆனால் மற்றவர்களுடைய நியமம் என்ன தெரியுமா? பிள்ளையைவிட பி. ஏ. பாஸ் பெரிதல்ல! அம்மாதிரி நாட்டுப் பெண்ணை இட்டுக் கொண்டு வருவது அனுசிதம் தான்!" என்றாள்.

"ஆனால் யாராவது ஒருவரைக் கொண்டுத்தான் வர வேண்டி இருக்கிறது. பி. ஏ. பாஸ் செய்திராவிட்டால் எங்களுக்குக்கௌரவப்படுவதும் இல்லை, மனமும் ஒப்புவதில்லை. குடும்பம் கூட சரியாக நடக்காதென்றே சொல்லி விடலாம்!" என்றான் விஜயன்.

அனுராதாவின் குரல் கணத்தில் வேகமாக மாறியது, "அம்மாதிரி நடக்க முடியாது! தாங்கள் குமாரை தயையற்ற மாற்றாந் தாயின் கையில் ஒப்புவிக்க முடியாது" என்றாள்,

"ஆனாலும் பயமொன்றுமில்லை, காரணம் ஒப்புவித்துவிட்டால் கூட குமார் அவள் கையிலிருந்து நழுவி வந்துவிடுவான்! இதனால் அவள் தயையற்றவள் தான் என்பதல்ல!—என் எதிர்கால மனைவியின் சார்பாக நான் தங்களிடம் பிரதிவாதம் செய்கிறேன். அசட்டை சுயநலம், கர்வம் இவை பெயருக்குக்கூட அவளிடம் இருக்காது! தாங்கள் இந்த தோஷத்தை அவள் மேல் கூறுதீர்கள்!" என்றான் விஜயன்.

அனுராதா சிரித்துக்கொண்டே, "தாங்கள் எதிர் வாதம் எவ்வளவு வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் இதன் தாத்பரியம்?"

"அது எங்கள் குடும்பக் கட்டுப்பாடு, அதன் கூடே வேறு அதன் முகமும் வேறு அதன் வேறு ரஸத்தை உறிஞ்சுவதில்லை. அதன் இலைகள் பசுமையாகக்கூட விடுவதில்லை. பழுத்து விடுகிறது. தாங்கள் பட்டிக்காட்டு கிருஹஸ்தர் வீட்டுப் பெண்! ஸ்கூல், காலேஜ் முதலியவைகளில் படித்து பாஸ் செய்தவர்களல்ல. பார்ட்டிகளில் கலந்து கொண்டவர்களல்ல. இதைத் தவிர இதன் கூடார்த்தங்களை நான் தங்களுககு விளகக முடியாது. ஆனால் இவ்வளவு சொல்ல முடியும். குமாருக்கு மாற்றாந்தாய் வந்து அவனை விஷத்தைக் குடிக்குமபடி செய்து விடமாட்டாள். சாட்டையை எடுத்துக் கொண்டு அவனைத் துரத்தவும் மாட்டாள். ஏனென்றால் வழக்கமானருசிக்கு அது புறம்பானது ஆகையால் இந்த விஷயத்தில் தாங்கள் கவலையற்று இருங்கள்!", என்றான் விஜயன்.

"நான் அவள் பேச்சை விட்டு விடுகிறேன். ஆனால் நீங்களே அவனைப் பார்த்துக் கொள்வதாக வாக்களியுங்கள்! இதுதான் என் பிரார்த்தனை!" என்றாள் அனுராதா.

"வாக்களிக்க வேண்டுமென்று மனம் என்னவோ விரும்புகிறது.

ஆனல் ஸ்வபாவம் வேருக இருக்கிறது. வடிக்கமும உலகத்திலின்றும மாறுபட்டிருக்கிறது. தங்களுடைய வற்புறுத்தலை ஞாபகப்படுத்திக் கொண்டு நடுநடுவே அவனைப் பார்த்துக் கொள்ள முயற்சி செய்கிறேன். ஆனல் நீங்கள் எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு நடக்குமென்று தெரியவில்லை சரி! நான் சாப்பிட்டாயிற்று! செல்கிறேன்! புறப்படத் தயாராக வேண்டும்'' என்று சொல்லி, அவன் எழுந்திருந்து ''குமார், தங்களிடமே இருப்பான்! பிரிய வேண்டிய நாள் வந்தால் அவனை விநோதனுடன் சேர்த்து கல்கத்தா அனுப்பி வையுங்கள். அவசியத்தை உணர்ந்தால் சந்தோஷனையும் சங்கோசமின்றி அவனுடன் அனுப்பி வையுங்கள். முதன் முதல் ஆரம்பத்தில் நான் தங்களிடம் எப்படி நடந்து கொண்டேனே என் இயற்கை அதே மாதிரியல்ல. போகும்போது மீண்டும் தங்களுக்கு நம்பிக்கை அளித்துச் செல்கிறேன்! என் வீட்டில் குமாரை விட சந்தோஷனுக்கு அதிக அனுதரவு ஏற்படாது'' என்றான.

* * * * *

வாசலில் குதிரை வண்டி நின்றிருந்தது. சாமான்கள் யாவும் ஏற்றியாகி விட்டது. விஜயன் வண்டியில் ஏறப் போகும் சமயம் ''பாபுஜீ, அத்தை உன்னைக் கூப்பிடுகிறாள்'' என்றான்

அனுராதா கதவருகில் தான் நின்றுகொண்டிருந்தாள். ''நமஸ்காரம் செய்வதற்காகக் கூப்பிட்டேன்! பிறகு எப்பொழுது செய்யமுடியுமோ தெரியாது'' என்று சொல்லி, தூரத்திலிருந்து நமஸ்காரம் செய்தாள். பிறகு எழுந்து குமாரைத் தன்னருகில் இழுத்து அணைத்துக்கொண்டு ''பாட்டியிடம் சொல்லுங்கள்! எத்தனை நாள் என்னிடம் இருக்கிறானே இவனுக்கு யாதொரு அனுதரவும நேராது'' என்றாள்.

விஜயன் சிரித்துக்கொண்டே ''நம்பிக்கை ஏற்படுவது கடினம தான்!'' என்றான்.

''கடினம் என்ன? தங்களுக்குக் கூடவா?'' என்று சொல்லிச் சிரித்துவிட்டாள். இருவர் கண்களும சந்தித்தன. அவளுடைய விழிகள் நனைந்திருப்பதை விஜயன் கண்டுவிட்டான்.

''ஆனல் குமாரை அழைத்துச் சென்று கஷ்டத்திற்குள்ளாக்க வேண்டாம்: பிறகு சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்காதாகையால் இப்பொழுதே சொல்லி விடுகிறேன் தங்கள் வீட்டின் விஷயங்களைப்பற்றி எண்ணும் போது அவனை அனுப்ப மனம் ஒப்பவில்லை'' என்றாள் அனுராதா.

''ஆனல் அனுப்பவேண்டாம்!''

பதிலுக்கு அவள் ஒரு பெருமூச்சு விட்டு மௌனமானாள்.

''செல்வதற்குமுன் தங்கள் வாயிதா விஷயத்தை ஒரு முறை ஞாபகப்படுத்துகிறேன. எப்பொழுதாவது ஏதாவது அவசியம் ஏற்பட்டால் தாங்கள் கடிதம் எழுதுவதாக வாக்களித்திருக்கிறீர்கள் அல்லவா?'' என்றான் விஜயன.

''எனக்கு ஞாபகம் இருக்கிறது. எனக்குத் தெரியும்! கங்கோலி மஹாசயரிடம் நான் பிச்சைக்காரியைப்போல் கேட்க வேண்டும. மனதின் வெட்கத்தை விட்டுக் கேட்க வேண்டும். ஆனல் தங்களிடம் அப்படியல்ல. எது வேண்டுமோ அதை சங்கோஜமின்றி சுலபமாக கேட்டுக் கொள்வேன்'' என்றாள் அனுராதா.

''ஆனல் ஞாபகம் இருக்கட்டும்'' என்று சொல்லி விஜயன் புறப்படுமுன் அனுராதா. ''தாங்களும் ஒரு வாக்களித்து விட்டுச் செல்லுங்கள்! அவசியம ஏற்பட்டால் என்னைக்கூட ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்'' என்றாள்.

''அனுராதா! ஞாபகப்படுத்திக்கொள்ளக் கூடிய அவசியம் எனக்கென்ன ஏற்படப் போகிறது?''

''அதை எப்படிச் சொல்வேன்! என்னிடம் வேறொன்றும் இல்லை! ஆனல் அவசியம நேர்ந்து விட்டால் என் ஹ்ருதய பூர்வமான சேவை செய்ய முடியும்!''

''உன்னை அவர் செய்ய விடுவாரா?''

''என்னை யாரும் தடை செய்ய முடியாது!''

7

'**கு**மார் வரவில்லை' என்ற விஷயத்தைக் கேட்டு விஜயனின் தாயார் ஆதங்கத்தால் உருகி ''இதென்னடா இது? யாருடன் சண்டையோ அவர்களிடமா பையனை விட்டு விட்டு வருவது?'' என்று கேட்டாள்.

''யாருடன் சண்டையோ அவன் பாதாளத்தில் சென்று ஒளிந்து விட்டான் அம்மா! அவனைத் தேட யாரால் முடியும்? உன் பேரன் அவனுடைய அத்தையுடன் இருக்கிறான்! சிறிது நாட்கள் பொறுத்து வருவான்'' என்றான் விஜயன்.

''திடீரென்று அவனுக்கு அத்தை எங்கிருந்து வந்து சேர்ந்தாள்?''

''அம்மா! கடவுளால உண்டாக்கப்பட்ட இந்த உலகத்தில், திடீரென்று, யார் எங்கிருந்து வருகிறார்கள் என்பதை யாரும் சொல்ல முடியாது. உன் பணம் காசை எடுத்துச் சுருட்டிக் கொண்டு போன அந்த ககன சட்டர்ஜியின் தங்கை தான் அவள். வீட்டிலிருந்து அவனை வெளியேற்ற, தடி, கம்பு, தர்வான், இவைகளுடன் யுத்தம் செய்யப் புறப்பட்டேன். ஆனல் உன் பேரன் யாவற்றையும் நாசம் செய்து விட்டான். இருவரையும் சேர்த்து வெளியே அனுப்பினலொழிய 'அவனை அனுப்ப முடியாதவாறு அவன் ஒட்டிக் கொண்டு விட்டான்'' என்றான் விஜயன்.

தாய் ஒரு உத்தேசமாய் விஷயத்தை அறிந்து கொண்டு ''குமார் அவள் வசமாய் விட்டானென்று தெரிகிறது! ஒருக்கால் அந்தக் குட்டி அவனிடம கொஞ்சிக் குலவி அவனைப் போஷித்திருப்பாள்? பாவம், அதற்குத் தான், அன்பு ஆதரவே ஒரு பொழுதும் கிடைத்ததில்லையே'' என்று சொல்லி தன்னுடைய ஆரோக்கிய மின்மையை ஞாபகப்படுத்திக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டாள்.

''நான் என்னவோ வெளியே இருந்தேன்! வீட்டிற்குள் யார் அன்பு ஆதரவு செய்து கொண்டிருந்தார்கள். இதை நான் கண்ணால் பார்க்கவில்லை. ஆனல் புறப்படும் பொழுது தன் அத்தையை விட்டு வரவே மாட்டேன் என்று குமார் சொல்லி விட்டான்.'' என்றான்.

தாயின் சந்தேகம் இவ்வளவோடு தீரவில்லை. ''பட்டிக்காட்டுப் பெண்கள் வெகு விஷயங்கள் தெரிந்தவர்கள்! நீ பையனைக் கூட அழைத்து வராதது சரியல்ல!'' என்றாள்.

''நீ பட்டிக்காட்டுப் பெண்ணாக இருந்தும் பட்டிக் காட்டின் மேல் புகார் சொல்லிக் கிளம்பி விட்டாயா அம்மா? கடைசியில் உன் நம்பிக்கை பட்டணத்துப் பெண்களிடம தான் இருக்கிறதா என்ன?'' என்றான் விஜயன்.

''பட்டணத்துப் பெண்களா? அவர்கள் பாதங்களுக்கு ஆயிரம் நமஸ்காரம்!'' என்று சொல்லி தாய் இரண்டு கைகளையும் சிரமேற் குவித்தாள்.

விஜயன் சிரித்தான்.

''ஏண்டா சிரிக்கிறாய்? என் துக்கத்தை நான்தான் அறிவேன் இன்னும் அவர் அறிவார்!'' என்று சொல்லும் போது அவள கண்களில் கண்ணீர் வந்து விட்டது. ''நாம் எவ்விடத்தியவர்கள்? அந்தக் கிராமம் இப்பொழுது இருக்கிறதப்பா? காலம முற்றிலும் மாறிவிட்டது.'' என்றாள் தாய்.

''ரொம்ப மாறிவிட்டது. ஆனல் எதுவரை நீங்கள் இருக்கிறீர்களோ, அதுவரை தங்கள் புண்ணியத்தால் அவை ஜீவித்திருக்கும். முற்றிலும் மறைந்து விடாது. அதில் கொஞ்சம்தான் இப்பொழுது பார்த்து வந்தேன் ஆனல் அந்த வஸ்துவை உன்னிடம் காட்ட முடியாது! அதுதான் மனதிற்கு வருத்தமாக இருக்கிறது.'' என்று சொல்லி விட்டு ஆபீஸுக்குச் செல்லலானான். ஆபீஸ் வேலையின் களைப்பினல் தான் அவன் இங்கே வரவேண்டியிருந்தது.

* * * *

மாலை ஆபீஸிலிருந்து திரும்பியதும், தன் அண்ணனையும் மதனியையும் சந்திக்கப் புறப்பட்டான் விஜயன். சென்று பார்த்த அங்கே குருக்ஷேத்ரத்தின் யுத்த காண்டம் நடந்துகொண்டிருந்தது சிங்கார வஸ்துக்களெல்லாம் இங்குமங்கும் சிதறிக் கிடந்தன அண்ணா ஒரு ஈஸிசேரில் உட்கார்ந்துகொண்டு உரக்க சத்தமிட்டுக்கொண்டிருந்தார்.

''அனுவசியம்! போக வேண்டுமானல் நீ தனியாகப் போ! இந்த மாதிரி உறவல்......'' இன்னும் இதயாதி.

விஜயனைக் கண்டதே பிரபாமயி ஒரேயடியாய் அழுதுவிட்டாள் ''சரி லாலாஜீ! நீயே சொல்லு! அவர்கள் அனிதாவை ஸிதாமசுவுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தால் இதில் என் மீது என்ன தோஷம்? இன்றுதான் அவர்களுக்கு நிச்சய தாம்பூலம் நடக்கப போகிறது. இவர் சொல்கிறார்! நான் போகமாட்டேன்! இதன் அர்த்தம் என்ன? என்னையும் போக விடக்கூடாதென்பதுதான்'' என்றாள்.

''நீ என்ன சொல்ல விரும்புகிறாய்? உனக்கே தெரியாதா? எங்களிடம் இவ்வளவு நாள் இம்மாதிரி பித்தலாட்டங்கள் செய்ய வேண்டிய அவசியமென்ன?'' என்று கத்தினார் அண்ணா.

விஷயம் என்ன என்பதைச் சட்டென்று அறியமுடியாமல் விஜயன் தவிக்கலானான் ஆனல் யோசிக்க அதிக நேரமில்லை. ஆகையால் அவன் ''பொறுங்கள்! பொறுங்கள்! என்ன நடந்தது சொல்லுங்கள்! அனுராதாவை ஸிதாம் சுகோஷுக்குக் கலியாணம் செய்து கொடுப்பதாக நிச்சயம் ஆகிவிட்டது, இது தானே? இன்று நிச்சயத் தாமபூலம்? நான் முற்றிலும் ஏமாற்றத்தால் மூழ்கடிக்கப்பட்டேன்'' என்றான் விஜயன்.

அண்ணா ஹுங்காரம் செய்து கொண்டு ''ஹும். இவளுக்கு ஒன்றும் தெரியாதென்று வேறு சொல்ல வந்துவிட்டாள்'' என்றார்.

பிரபா அழுதுகொண்டே ''ஐயோ! நான் என்ன செய்வேன் லாலாஜீ? அண்ணா இருக்கிறான். அம்மாவும் இருக்கிறாள்; பெண்ணும் வயதானவள்; அவர்கள் தங்கள் வாக்கைத் தவறி விட்டால் இதில் என் தவறு என்ன இருக்கிறது?'' என்றாள்.

''குற்றம் இதுதான்: அவர்கள் பித்தலாட்டக்காரர்கள்; பொய்யர்கள்: துஷ்டர்கள். ஒரு இடத்தில் வாக்குக் கொடுத்து விட்டு மற்றோர் இடத்தில் ஒளிந்து ஒளிந்து வலை வீசிக் கொண்டிருந்தார்கள்! இப்பொழுது பார்ப்பவர்கள் சிரிப்பார்கள்; கேலி செய்வார்கள்: வெட்கத்தால் நான் கிளப்பில் தலை காட்டக்கூட முடியாது'' என்றார் அண்ணா.

பிரபாமயி முன் போலவே அழுது கொண்டு ''ஏன் இம்மாதிரி எங்கும் நடப்பதில்லையா? இதில் தங்களுக்கு வெட்கப்பட என்ன இருக்கிறது?'' என்றாள்.

''நான் வெட்கப்பட வேண்டியதின் காரணம் உன் சகோதரி தான். இரண்டாவது மாமனார் வீட்டார் யாவரும் மோசக்காரர்கள் அதில் உனக்கும் நிறைய பங்கு இருக்கிறது அதனாலும் தான்'' என்று சொன்னார் அண்ணா.

விஜயன் தன் அண்ணாவின் முகத்தைப் பார்த்துச் சிரித்து விட்டான். ஆனல் அதே சமயம் குனிந்து பிரபாமயியின் பாத தூளியை எடுத்துத தன் சிரம மேல் தரித்துக் கொண்டு ''மன்னி! அண்ணா எவ்வளவு வேண்டுமானாலும கோபிக்கட்டும்! நான் கோபமோ வருத்தமோ அடையவே மாட்டேன். ஆனல் உண்மையில் இதில் உனக்குப் பங்கிருந்தால் உனக்கு என்றென்றும் கடமைப் பட்டவனவேன்'' என்று சொல்லிப்

(13-ம் பக்கம் பார்க்க)

இனம்
வைத்திய வித்தை
பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, நல்லசந்ததிக்கும் வழி.
மதன மஞ்ஜரி பார்மஸி, 184, சைன பஜார், மதராஸ்.

புதையல் வேட்டை

'நியாயவாதி' எழுதியது

★

1

சாமான்கள் ஏற்றிச் செல்லும் இரண்டு வண்டிகள் போலந்தின் தலைநகரான வார்ஸாவைவிட்டு ரஷியாவுக்குப் பிரயாணமாயின. அவற்றின் முன்னும் பின்னும் சுமார் இருபது படை வீரர்கள் அணிவகுப்பாய்ச் சென்று கொண்டிருந்தனர்.

அச்சமயம் —1915-ம் ஆண்டு— கிழக்குப் போர்முனையில் யுத்தம் மும்முரமாய் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஜெர்மன் படைகள் ரஷ்ய சாம்ராஜ்யத்தின் எல்லைக்குள் பிரவேசித்துவிட்டன, போலந்து நாட்டின் பெரும்பகுதி அந்தசாம்ராஜ்யத்தின் ஒரு பாகமாய் இருந்தது. அதன் தலைநகரான வார்ஸாவை நோக்கி ஜெர்மன் சேனை விரைந்துவந்து கொண்டிருந்தது. அதன் கோட்டை கொத்தளத்தின்மீது ஜெர்மன் கொடியை நாட்டி, தனது பெயரையும் புகழையும் நிலை நிறுத்த வேண்டுமென்று அப்படையின் தலைவன் ஆவல கொண்டிருந்தான்.

அச்சந்தர்ப்பத்தில் வார்ஸாவிலுள்ள போலந்து பாங்கியில் 60 லக்ஷம் பவுன மதிப்புள்ள தங்கம் இருந்தது. நகரம் எதிரிகளது வசம் விழுந்துவிட்டால் அப்பெருநிதியை அவர்கள் கைப்பற்றி விடுவார்கள் என்று அதிகாரிகள் அஞ்சினர். தங்கத்தை வார்ஸாவிலிருந்து ரஷ்யாவின் தலைநகரத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர்.

சாமான்கள் வண்டிகள் இரண்டில், இரும்புப் பெட்டிகளில் பத்திரப்படுத்தப்பட்ட தங்கநிதி ஏற்றப்பட்டது, பிரயாணத்தின் பொழுது அதைக் காக்கும் பொறுப்பு நான்கு உத்தியோகஸ்தர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. அவர்களில் ஒருவன் ராணுவ உத்தியோகஸ்தன்; இரண்டாமவன் பாங்கி உத்யோகஸ்தன். மற்ற இருவரில் ஒருவன் ரஷ்யப்போலீஸையும் இரண்டாமவன் ரஷ்ய வேவு இலாகாவையும் சேர்ந்தவர்கள். அவர்களுடன். பந்தோபஸ்துக்காக இருபது படை வீரர்கள் அனுப்பப்பட்டனர்.

வார்ஸாவை விட்டுக்கிளம்பிய அச்சிறு கூட்டம் வெகு தூரம் செல்லவில்லை. ஜிடர்ஸிகோ என்ற ஊரைக் கடந்து காட்டுமார்க்கமாய்ச் சென்று கொண்டிருந்தனர். சற்று தூரத்திலுள்ள மொட்டைமலை என்ற சிறு மலைத தொடர் அவர்களுக்குக் காட்சியளித்தது.

அச்சமயம் அவர்களுக்கு ஒரு விபரீதமான செய்தி கிடைத்தது. அது என்னவெனில் ஜெர்மன் படையில் ஒரு பகுதி சற்று தூரத்திற்கப்பால் அவர்களது வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது என்பதே.

வார்ஸாவிலிருந்து தங்க நிதி அப்புறப்படுத்தப்படுவதை ஜெர்மன் படையின் தலைவன் எப்படியோ அறிந்துகொண்டான் என்பதில் சந்தேகமில்லை. அதைத் தடுப்பதற்காக அவன் சில படைவீரர்களை குறுக்கு வழியே அனுப்பிவிட்டான். வழிமறித்து வழிபறிப்பதற்காக ஜெர்மானியர் காத்துக்கொண்டே இருந்தனர்.

அந்த நிலையில் நிதியுடன் சென்றவர்கள் எப்படி மேற்கொண்டு பிரயாணத்தை நடத்துவது? வந்த வழியே திரும்புவதும் ஆபத்தான காரியம். பிரயாணிகளை ஒரு புறமும் செல்லவிட்டால் அபாயம் சூழ்ந்து கொண்டது.

காட்டின் நடுவே பிரயாணத்தை நிறுத்திவிட்டு நிதியின் மீது கண்காணிப்பாயிருந்த நான்கு உத்தியோகஸ்தர்களும் அவசரம் அவசரமாய் ஆலோசனைகள் புரிந்தனர். எதிரிகளிடம் தங்கத்தை கொடுக்கக் கூடாது என்று தீர்மானித்த அவர்கள் அதை எப்படி பத்திரப்படுத்துவது என்பதைப் பற்றி யோசனை செய்தனர். முடிவில் ஒரு திருப்திகரமான உபாயம் அவர்களுக்குப் புலப்பட்டது.

நிர்மானுஷ்யமான அக்காட்டு ப்ரதேசத்தில் மலையடிவாரத்துக்கு சமீபத்திலுள்ள ஒரு இடத்தில் தங்கநிதியைப் புதைத்து வைப்பதை விட அந்த ஆபத்தான வேளையில் அவர்களுக்கு வேறு யாதொரு வழியும் இல்லை. அப்படியே செய்துவிட்டு, வந்த வழி திரும்புவது என்று அவர்கள் தீர்மானித்தனர்.

உடனே பிரயாணிகள் எல்லாரும் வண்டிகளில் உட்கார்ந்துகொண்டனர். காவலாளர்களில் இருவர், வண்டிகளை ஓட்டுவதற்கு தயாராய் இருந்தனர். அவர்களைத் தவிர மற்றவரது கண்கள் கட்டப்பட்டன, வண்டிகளும் புறப்பட்டன.

வண்டிகள் நேர் வழியாய் ஓட்டப்படவில்லை, வேண்டுமென்றே சுற்றுப்பாதை வழியாக ஸாரதிகள் வண்டிகளை ஓட்டினர். சற்று நேரத்துக்குப் பின் அவர்கள் தங்களது ஸ்தானத்தை மற்ற இரு காவலாளிகளுக்கும் கொடுத்துவிட்டு தங்களது கண்களை கட்டிக்கொண்டனர். இப்படி அந்நால்வரும் இருவர் இருவராய் தங்கள் ஸ்தானங்களை மாற்றி மாற்றிக் கொண்டே ஸாரத்தியம் செய்தனர்.

கடைசியாய் வண்டிகள் மலையின் அடிவாரத்துக்கு சற்று தூரத்தில் நின்றன. அவற்றிலிருந்த எல்லாரும் கீழே இறக்கப்பட்டனர். எல்லாருடைய கண்மூடிகளும் நீக்கப்பட்டன. ஒரு அடையாளமான இடத்தில் ஆழமான குழி தோண்டப்பட்டது. தங்க நிதி அதில் பத்திரப்படுத்தப்பட்டது. குழி நன்ருக மூடப்பட்டது.

பின்னர் அச்சிறு கூட்டம் வார்ஸாவை நோக்கித் திரும்பியது. முன்போலவே பந்தோபஸ்துகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. வண்டிகளில் ஏறிய பிரயாணிகள் எல்லாருடைய கண்களும் கட்டப்பட்டன. வண்டிகளை நான்கு உத்தியோகஸ்தர்களும் இருவர் இருவராக மாற்றி மாற்றி ஓட்டினர்.

இவ்விதம் போலந்து பாங்கியின் தங்கநிதி பத்திரமாய் புதைக்கப்பட்டது. புதையல் இருந்த இடத்தை நாலவரே அறிவர். அவர்களுக்கும் அதன் நேர் வழி சரிபாகத் தெரியாது என்று கூற வேண்டும்.

2

கால சக்கரம் வேகமாய்ச் சுழல்கிறது. பழமை அழிந்து புதுமை தோன்றுகிறது. ராஜ்யங்கள் அழிகின்றன. சக்கரவர்த்திகள் முடி துறக்கிறார்கள். புதிய நாடுகளும் அரசியல்களும் தோன்றுகின்றன. அதிசயமான மாறுதல்களும் புரட்சிகளும் நடைபெறுகின்றன.

ரஷ்ய சாம்ராஜ்யம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. ஜெர்மன் சக்ரவர்த்தி ஹாலந்தில் அக்ஞாத வாசம் செய்யலானார். பழைய ஜெர்மானிய—ஆஸ்டிரிய—ரஷ்யா சாம்ராஜ்யங்களுக்குச் சொந்தமான இடங்கள் பலவற்றில் புதிய ஜன நாயக சுதந்திர அரசியல்கள் ஏற்பட்டு விட்

பதினேரு மணிக்கு

இப்பொழுது மணி பதினென்று. காலை வேலைக்குப் பிறகுண்டான சோர்வைப் போக்க டீ அருந்தும் சமயம் இதுவே. புருஷர்களும் ஆபீஸுக்குப் போய், குழந்தைகளும் பள்ளிக் கூடம் சென்றபின், நீங்கள் தனியாயிருக்கும் சமயம் இதுவே. ''இனிது இனிது ஏகாந்த மினிது'' என்றார் ஒரு கவி, ஆனல் ஒரு கெட்டில் டீயும் பக்கத்திலிருக்க வேண்டும் இவ்வேகாந்தம் இனிமையாயிருக்க.

★

எங்கள் புதிய பிரசுரமாகிய ''டீ அருந்துவதற்கான சமயங்கள்'' என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினல், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.



இந்தியன் டீ
அருந்துங்கள்
புத்துயிரளிக்கும் உயரிய பானம்
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு வெளியிட்டது
IK 157

டன. போலந்து செகோஸ்லோகியா, பின்லந்து இவற்றை முக்கியமாய்க் குறிப்பிட வேண்டும்.

நிதியின் கதி என்ன? அது மொட்டை மலை அடிவாரத்திற்கு சமீபத்தில் புதைக்கப்பட்ட இடத்திலேயே இருந்தது போலும். அதன் ரகசியத்தை உணர்ந்த நால்வரில் மூவர் இறந்து விட்டனர். ராணுவ உத்தியோகஸ்தன் யுத்தத்தில் மடிந்தான். போலீஸ் உத்தியோகஸ்தன் ஸோவியத் ஸர்க்காருக்கு விரோதமாய் சதி செய்ததற்காக கொல்லப்பட்டான். பாங்கி உத்யோகஸ்தன் விரோதிகளால் கொலை செய்யப்பட்டான். எஞ்சியவன் வேவு இலாகா உத்யோகஸ்தனே. அவன் ஸோவியத் ஸர்க்காருக்கு பயந்து கொண்டு இத்தாலிக்கு ஓடி விட்டான். அங்கே அவன் பல வருஷங்கள் கழித்தான்.

அங்கே அவன் யோக்கியமான பிழைப்பு பிழைக்கவில்லை. சில தப்பிலிகளுடன் சேர்ந்து கொண்டு மோசடிகள் புரியலானான். இத்தாலிய ஸர்க்காரின் திருஷ்டி அவன் மீது விழுந்தது. அதை உணர்ந்த அவன் தனது கூட்டாளியான ஒரு ஜெர்மானியனுடன் ஸ்விட்ஜர்லாண்டுக்கு ஓடி விட்டான்.

மொட்டை மலைக்கு அருகாமையில் புதைக்கப்பட்டிருந்த தங்கப் புதையலை அவன் மறக்கவே இல்லை. சமயம் பார்த்து அங்கே சென்று அதைக் கவர்ந்து விட வேண்டும் என்பது அவனது எண்ணம். அதனது ரகசியத்தைத் தனது கூட்டாளியான ஜெர்மனியனிடம் கூறினான். ஜெர்மானியன் தன்னாலான உதவியை அளிப்பதாக உரைத்தான். இருவரும் போலந்துக்குப் பிரயாணமாயினர்.

ஜிடர்ஸோகோ என்ற ஊரை அவர்கள் அடைந்தனர். மொட்டை மலை இருந்த பக்கத்துக்கு வழி தேடினர்.

என்ன ஆச்சரியம் எல்லாம் புதுமை. முன்னிருந்த ஊராய் அது இல்லை. பாழாய் இருந்த இடங்களெல்லாம் வாழும் மக்கள் உறை விடங்களாக மாறி விட்டன. காடுகள் அழிக்கப்பட்டு வீடுகளாயின. நிர்மானுஷ்யமாய் இருந்த வனங்களுக்குப் பதிலாய் கட்டிடங்களும் வீதிகளும் காட்சியளித்தன.

எதிர்பாராத இம்மாறுதல்களைக் கண்ணுற்ற மாஜி வேவுகாரன் அடைந்த ஏமாற்றத்துக்கும் வியப்புக்கும் தடுமாற்றத்துக்கும் ஒரு எல்லையில்லை. அவன் எங்கு சென்றாலும் புதுமையாகவே இருந்தது. மொட்டை மலை அடிவாரத்திலும் வீடுகளும் கட்டிடங்களும் வீதிகளும் சாலைகளும் இருந்தன.

ஆம், அதில் யாதொரு சந்தேகமும் இல்லை. தங்க நிதி புதைக்கப்பட்டிருந்த இடத்தின் மீது கட்டடங்கள் இருந்தன, அதன் சமீபத்தில் தெருக்கள் இருந்தன. அது ஒளிக்கப்பட்டிருந்த நிலத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான ஜனங்கள் இருந்தனர்.

இரு கூட்டாளிகளும் வெறுங்கையுடன் ஸ்விட்ஜர்லாண்டு திரும்பினர். ஆனால் அவர்கள் நம்பிக்கையை இழக்கவில்லை. எப்பாடு பட்டேனும் புதையலைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்ற தீர்மானம் அவர்கள் உள்ளங்களில் இருந்தது.

சில தினங்களுக்குப் பின் ஸ்விட்ஜர்லாண்டில் ஒரு புதிய கம்பெனி நிறுவப்பட்டது. அதற்கு ஒரு பெருத்த மூலதனமும் சேர்ந்து விட்டது. அதை நடத்தியவர்கள் ஜெர்மானியனும் அவன் நண்பனான மாஜி ரஷ்ய வேவுகாரனுமே.

அவ்விருவரும் போலந்திலுள்ள மொட்டை மலைக்கருகிலுள்ள வீடுகள் சிலவற்றை வாங்கினர். அவற்றை இடிக்கவும் கீழ் நிலத்தைத் தோண்டவும் ஏற்பாடுகள் செய்தனர். ஆனால் புதையல் அவர்களுக்கு புலப்படவில்லை. பல கட்டிடங்கள் இடிக்கப்பட்டன. பல வீடுகள் அழிக்கப்பட்டன. அவற்றை வாங்கினதும் இடித்ததும் தான் மிச்சம். அதனால் லாபகரமான விளைவு ஒன்றும் இல்லை.

ஏதோ தனக்குத் தோன்றிய பழய நினைவுகளைக் கொண்டு மாஜி வேவுகாரன் புதையல் இருந்த இடத்தை நிர்ணயித்தான் அதில் அவன் பிசகிவிட்டான் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. புதிதாய் மாறிய இடத்தில் பழைய நிகா எதுவும் நிச்சயமாய்த் தெரியவில்லை என்பது அவனது தவறல்ல.

எனினும் நஷ்டத்துடன் திரும்பிய அவனை அவனது கூட்டாளிகள்—கம்பெனியின் இதர பாகஸ்தர்கள்— சும்மா விடுவார்களா? மொட்டைமலை அடிவாரத்தில் புதையல் உள்ளது என்று பொய்கூறி தங்களை அவன் ஏமாற்றிவிட்டதாகஅவர் எண்ணி ஆத்திரம்கொண்டனர். அவர்களில் சிலர் அவனை நையப்புடைத்தனர். இப்படி அடியுண்டு படுத்த படுக்கையில் படுத்த அவன் அதைவிட்டு எழுந்திருக்கவில்லை. மனோவியாதி அவனுக்கு மரண நோயாகவும் முடிந்தது. இறப்பதற்கு முன் அவன் புதையலின் ரகசியத்தை தன்னுடன் இருந்த தனது உறவினனை ஒரு ரஷியனிடம் கூறினான். தனக்குக் கிட்டாத பாக்கியம், தனது உறவினனுக்காவது கிட்டட்டும் என்பது அவனது கருத்து

3

வருஷங்கள் சில கழிந்தன. ஹிட்லர் டான்ஸிக்கை ஜெர்மனியுடன் சேர்த்துக் கொண்டார். போலந்தின் மீது தனது படைகளை நடத்தினார், யுத்த தேவதையின் கோர தாண்டவம் ஆரம்பமாயிற்று.

வார்ஸாவைக் கைப்பற்றிய பின் ஜெர்மன் படையில் ஒரு பகுதி ஜிடர்ஸோகோ என்ற ஊரை வசப்படுத்திக் கொண்டது. ஏற்கனவே அது ஆகாய விமானிகளின் வெடி குண்டுகளின் வீச்சுகளுக்கு இலக்காயிருந்தால்அங்கு பலவிடங்களில் இடிந்த வீடுகளும் மடிந்த மக்களும் கிடந்த காட்சி கோரத்திலும் பரிதாபத்திலும் மிக்க காட்சியாய் இருந்தது.

செல்வமும் சாந்தியும் குடிகொண்டிருந்த அந்த இடத்தில் நாசத்தையும் மரணத்தையும் பொழிந்த ஜெர்மனியர்களை நடத்தியவன் 'மாஜி வேவுகாரனது கூட்டாளியே. 60 லக்ஷம் பவுன் மதிப்புள்ள தங்கம் அவ்வூரில் புதையலாய் உள்ளது என்ற ரகசியத்தை அவன் ஜெர்மன் ராணுவ அதிகாரியிடம் ஏற்கனவே தெரிவித்து விட்டான். அவ்வதிகாரியே புதையலைக் கண்டு பிடித்து கைப்பற்றும் வேலையை அவனிடம் ஒப்புவித்தான்.

இப்படி அவன் தனது ஆட்களுடன் புதையல் வேட்டையாடிக்கொண்டிருக்கையில் கிழக்கிலிருந்து போலந்து மீது படையெடுத்து வந்த ரஷ்யப்படைகள் அவ்வூரை சமீபித்தன. அதன் தலைவன், ஜெர்மன் பட்டாளத்தின் தலைவனுக்கு அவ்வூரை தனது வசம் விடவேண்டுமென்று நிருபம் அனுப்பினான்.

அவ்வூரை அந்த ரஷ்யபடைத் தலைவன் கைப்பற்ற விரும்புவதற்குக் காரணம் இருந்தது. அவனுக்கு உதவியாய் வந்தவன் இறந்து போன மாஜி வேவுகாரனது உறவினன். புதையலின் ரகசியத்தை அவனிடமிருந்து தெரிந்து கொண்டவன். 60 லக்ஷம் பவுன்மதிப்புதங்கப் புதையலை ஸோவியத் துரைத்தனம் கைப்பற்ற வேண்டும் என்று அவன் எண்ணினான். அதைக் கண்டு பிடிப்பதற்காகவே அவன் அப்படையுடன் வந்தான்.

ஜிடர்ஸோகோ நகரம் ஜெர்மானியரிடமிருந்து ரஷ்யர் கை மாறியது. மீண்டும் புதையல் வேட்டை நடைபெற்றது. ஊரில் இடிபடாமல் உருவாயிருந்த கட்டிடங்கள் இழக்கப்பட்டன. தரைமட்டத்துக்குக் கீழ் குழிகள் தோண்டப்பட்டன. ஆனால் யாதொரு பயனும் இல்லை. புதையல் எவருக்கும் அகப்படவில்லை.

4

மேலே குறிப்பிடப்பட்ட சம்பவங்களை அறிந்துள்ள ஒரு ஆங்கில வேவு உத்தியோகஸ்தன் லண்டனில் குடியேறிய ஒரு மாஜி போலிஷ் உத்தியோகஸ்தனிடம் அவற்றைப்பற்றி பிரஸ்தாபிக்கும்படி நேர்ந்தது. போலிஷ்காரன் புன்னகை புரிந்தான். பதில் ஒன்றும் கூறவில்லை.

இங்கிலீஷ்காரன் "இவ்வதிசயமான புதையல் வேட்டையின் முடிவு என்ன ஆகுமோ?" என்று கேட்டுக்கொண்டே மற்றவன் முகத்தை நோக்கினான்.

போலிஷ்காரன் "அதற்கு முடிவு இராது! புதையல் ஒருவருக்கும் கிடைக்காது."

இங்கிலீஷ்காரன்:—"ஏன்?"

போலிஷ்காரன்:—புதையல் அந்த இடத்தில் இருந்தால் தானே அது அதைத் தேடுபவர்களுக்கு அகப்படும்?

இங்கிலீஷ்காரன்:—அது என்னயிற்று?

போலிஷ்காரன்:—"நான் சொல்லமாட்டேன்" என்று நகைத்தான்.

மகா யுத்தத்திற்குப் பின் ஜனனமான போலிஷ் அரசாங்கத்தார் அப்புதையலை ஏற்கனவே கைப்பற்றி விட்டனர் என்பதை அம்மாஜி உத்தியோகஸ்தன் நகைத்த நகைப்பிலிருந்து ஊகிக்க இடமுண்டு என்று அவ்வாக்கிலே வேவுகாரன் நினைத்தான்.



தலையில்

தலைமயிர் தெரிகிறதா அல்லது அடித்தலை தெரிகிறதா அடிக்தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேசராசிகளுக்குப் பதில் புதுக்கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத்தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்துவிடும். ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை. அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி இளங்கூந்தலையும், இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது; விருத்திசெய்வது; அழகுபடுத்துவது விலை அணா 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ஓடனு ஜரிபே முச்சடகனரே-வனிதலாரநேடு

அனு பல்லவி

ஆடு வாரு யமுக காடக்ருஷ்ணுனி கூடி
ஆடு சுபாடு சுனந்தரு ஜோடக

சரணம்

1. கொந்தரு ஹரி கீர்த்தனமுலு பாட
கொந்த ரானந்தமுன முந்துலாட
கொந்தரு யமுன தேவினிவேட
கொந்தரு முத்ய புஸருலஸியாட

2. கொந்தரு தடபட பாலிண்ட்லு கதல
கொந்தரி பங்கரு வல்வலு வதல
கொந்தரி குடிலாலகமுலு மெதல
கொந்தரு பல்குசு க்ருஷ்னுனி கதல

3. கொந்தரு த்யாகராஜ ஸகுடேயனக
கொந்தரி கஸ்தூரி பொட்டு கரகக
கொந்தரி கொப்புல விருலு ஜாரக
கொந்தரி கங்கணமுலு கல்லனக

II

வனிதலார!	—தோழிமார்களே!
நேடு	—இன்று
ஓடனு	—இவ்வழகிய ஓடத்திலேறி
ஜரிபே முச்சடகனரே	—நாம் இந்த யமுனா நதியில் ஓடம் செலலும் அழகைக் காணலாம் வாருங்கள்
ஆடவாரு	—பெண்மணிகள் (கோபியர்கள்)
யமுனகாட	—யமுனைக்கரையில்
க்ருஷ்னுனி கூடி	—ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவின் ஸாமீப்யத்தை அடைந்தவர்களாய்
அந்தருஜோடக	—அனைவரும் பார்க்கும் வண்ணம்
ஆடுசுபாடுசுன்	—ஆனந்த பரவசத்தால் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும்
வனிதலார	—மற்ற கோபியர்களை சகோதரிகளே (என்று கூப்பிட்டு)
நேடு	—இன்று
ஓடனு	—இவ்வழகிய ஓடத்திலேறி
ஜரிபேமுச்சட கனரே	—நாம் இந்த யமுனா நதியில் ஓடம் செல்லும் அழகைக் காணலாம் (என்று ஒருவரோடு ஒருவர் கூறிக்கொண்டனர்)
கொந்தரு	—சிலர்
ஹரிகீர்த்தனமுலன் பாடக	—கிருஷ்ண பரமாத்மாவின் அனந்த கல்யாண குணங்களை புகழ்ந்து பாடிக்கொண்டும்
கொந்தரு	—வேறு சிலர்
ஆனந்தமுன முத்துலாட	—மிகுந்த சந்தோஷத்துடன் பகவானுடன் இனிமையாகப் பேசிக்கொண்டும்
கொந்தரு	—மற்றும் சிலர்
யமுனதேவினி வேட	—யமுனாதேவியை ப்ரார்த்தித்து வேண்டிக்கொண்டும்
கொந்தரு	—வேறு சில கோபியர்கள்
முத்யபுஸருலஸியாட	—தங்கள் கழுத்தில் உள்ள முத்து மாலைகள் அசைய பரபரப்புடன் இங்குமங்கும் சென்றுகொண்டும்
கொந்தரி	—சிலர்
தடபடபாலிண்ட்லுகதல	—ஸ்தனங்கள் அசைய வேகமாகச் சென்றுகொண்டும்
கொந்தரு	—மற்றும் சிலரின்
பங்கருவலவலுவதல	—பொன்னிறமுள்ள ஆடையாபரணங்கள் நழுவ அதை சரிப்படுத்திக்கொண்டும்
கொந்தரி	—சிலரது

நீதிக் கதை

துரதிர்ஷ்டம் மறைந்தது

★

எ. எஸ். பி. அய்ய...
ஐ. ஸி. எஸ்.

அங்குமிங்குமாகத் திரட்டி முத்து நூறு ரூபாய்களைச் சேர்த்து அப்புவிடம் கொடுத்தான். "என் மகனே இதுதான் என்னால் கடைசியாக உனக்குக்கொடுக்கமுடியும். இனி மேல் உனக்கு ஒன்றும் கொடுக்க முடியாது. ஆகவே, இதை வைத்துக்கொண்டு, விருத்தி செய்து நீ பணம் சம்பாதித்துக்கொள். கடவுள் உன்னைக் காப்பாற்றுவாராக' என்று முத்து தன் மகனிடம் சொன்னான். அப்பு தனது தாய்தந்தையர்களிடம் விடை பெற்றுக்கொண்டான். தனக்கு வேண்டிய துணி மணிகளை ... ஒரு பெட்டியில் வைத்துக்கொண்டான். கல்கத்தாவிற்குச் சென்று தன்னுடைய அதிர்ஷ்டத்தை பரீட்சை செய்ய அப்பு எண்ணினான். பாலக்காட்டிலிருந்து கல்கத்தாவிற்கு ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டு, அப்பு ரயில் ஏறினான். கல்கத்தா ஸ்டேஷனில் அப்பு இறங்கியதும், அப்பு ...னுடைய பெட்டியை ... ஆத்திரத்துடன் எடுத்து ... கூலியாள் தன் தலை மேல் வை...துக்கொண்டான். தான் ... கார்ந்திருந்த பெஞ்சிக்கு அடி...விருந்த தன்னுடைய கைத்த...யை எடுத்துக்கொண்டு அப்...ழே இறங்குவதற்கு முன்... அந்தக் கூலி பெட்டியை எடுத்துக்கொண்டு எங்கேயோ மறைந்து போய்விட்டா... அப்பு எவ்வளவு தேடிப்பார்த்தும் அவன் அகப்படவில்... ரயில்வே போலீசாரிடம் செ...லுவதில் பிரயோஜனம் இ...யென்று தெரிந்தருந்தும், அ... ரயில்வே போலீசாரிடம் ... பெட்டி களவு போனதை குறித்துச்சொன்னான். அதிர்ஷ்...வசமாக பணமும், அவன் அணி...திருந்த ஆடைகளும் அவனிடமே இருந்தன. ஒரு சாதாரண ஹோட்டலுக்குச் சென்று அவன் ஒரு அறையைத் தன் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டான். பிறகு அவன் வேலை தேட வெளியே சென்றான்.

போகும் வழியில் ஒருவ... தன்னுடைய மோட்டார் வண்டியை ஐந்நூறு ரூபாய்களுக்கு விற்றுவிடத் தயாராயிருந்தான். ஆனால், அந்த மோட்டார் வண்டியை முந்நூறு ரூபாய்களுக்கு கூட வாங்கிக்கொள்ள ஒருவரும் முன் வரவில்லை. இந்த மோட்டார் வண்டியை ஆயிரம் ரூபாய்களுக்கு விற்கும். வழியை காட்டினால், நீ கோரும் ... விட அதிகமாக மிகுந்த தொகையை எனக்குக்...

(அடுத்த பக்கம் பா...)

குடிலஅலகமுலுமெதல்	—அழகான கூந்தல் காற்றில் அசையவும்
கொந்தரு	—வேறு சிலர்
கருஷ்ணுனிகதல பல்குசு	—ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் பாலலீலைகளை வர்ணித்துத் துதித்துக்கொண்டும்
கொந்தரு	—சிலர்
த்யாகராஜ ஸகுடேயனக	—த்யாகராஜனின் நண்பனுன ஸ்ரீக்ருஷ்ணு என்று கூவி அழைத்துக்கொண்டும்
கொந்தரி	—சிலரது
கஸ்தூரிபொட்டு கரகக	—நெற்றியில் இடப்பட்டுள்ள திலகமானது கரைந்து முகத்தில் வழியவும்
கொந்தரி	—வேறு சிலரது
கொப்புலவிருலு ஜாரக	—கொண்டையில் அலங்கரிக்கப்பட்டுள்ள புஷ்பங்கள் சிதறவும்
கொந்தரி	—சிலரின்
கங்கணமுலுகல்லனக	—கைகளில் உள்ள கங்கணங்கள் கல் கல் என சப்திக்குமாறு ஓடி ஆடி விளையாடிக்கொண்டும்
வனிதலார	—சகோதரிகளே (என்று மற்ற கோபியர்களைக் கூப்பிட்டு)
நேடு	—இன்று
ஓடனு	—இவ்வழகிய ஓடத்திலேறி
ஜாரிபெமுச்சுட கனரே	—நாம் இந்த யமுனு நதியில் ஓடம் செல்லும் அழகைக் காணலாம். (என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டனர்.)

III

முன் கதைச் சுருக்கம்.—ஒரு சமயம் கோபிகைகள் க்ருஷ்ணனுடன் யமுனு நதி தீரத்தை அடைந்து, க்ருஷ்ணனை விடுத்துத் தாங்கள் மட்டும் ஓடத்திலேறி யமுனையில் விளையாட எண்ணினார்கள். க்ருஷ்ணன் தன்னையும் கூட அழைத்துச் செல்லும்படி அவர்களை வேண்ட, அதற்கு அவர்கள் அவனுடைய பால்ய லீலைகளை எடுத்துக் காட்டி அவனை நிந்தனை செய்தனர், க்ருஷ்ணன் அதற்கு தான் பக்த பரிபாலனம் செய்த சரித்ரங்களை யெல்லாம் அவர்களுக்கு எடுத்துக் கூறி தன்னையும் அழைத்துச் செல்லுமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டான்.

கண்ணன் வார்த்தைகளைக் கேட்ட கோபிகைகளுக்குத் தைரியம் உண்டாகி

பாவஜ ஜனகுனி பலுகுலு-பாவம்புன ஸத்யமனுசு பயவிரஹிதுலே
பாவமுன நிலிபி க்ருஷ்ணுனி-பாவடலனு பிகிய கட்டி பாமலுசனகன்

மன்மதனுக்குப் பிதாவாக விளங்கும் க்ருஷ்ணனின் வார்த்தைகளை உண்மையானவை என்றறிந்து, பயமொழிந்தவர்களாய் பரமாத்மாவான க்ருஷ்ணனைத் தங்கள் மனதில் நிலைநிறுத்தி பாவனித்துக் கொண்டு, ஓடத்திலேறத் தகுதியான படி தங்கள் பாவாடைகளை இறுக்கிக் கட்டிக் கொண்டு கோபியர்கள் கண்ண[illegible]ங்களுடன் அழைத்துச் செல்லலானுர்கள்.

ஓடனு:—இது நௌகா சரித்திரத்தின் 6-வது கீர்த்தனம். கண்ணனுடைய வார்த்தையால் தைரியமடைந்த கோபிகா ஸ்திரீகள் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் கண்ணனுடன் கூடப்பட்டு ஓடத்திலேறச் செல்லும் வைபவத்தை இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் விளக்குகிறுர்.

கொந்தரு:—கீத கோவிந்தம் 4,5-வது அஷ்டபதிகளில் கண்ணன் ஸமீபத்தில் அடைந்த கோபியர்கள் கொண்ட ஆனந்தத்தை வர்ணித்திருப்பது போன்றே இக்கீர்த்திலும் ஸ்வாமிகளும் வர்ணித்துள்ளார்.

IV

ராகம் ஸாரங்க — ஆதி தாளம்

(65-வது மேள ஜன்யம் ஆ: ஸரிகமபதநிஸ் அவ-ஸ்நிதபம ரிகமரிஸ.)

பல்லவி

ஸரி ஸா ஸா	பாபா பமதப	மாமப	தநிஸ்ா	ஸதபம	ரிகமரி
ஓ . டனு	ஜரி . பே . . .	. முச் .	ச . ட	க . ன .	ரே . . .
பப நிதபம	பமரீ ரீ, க	கமாம	ரீ ;	ஸா ;	; ;
. வனித . லா	ர . . நே .	டு . .	.	.	

அனுடல்லவி

தா பா ஸ்ா ஸ்ா	ஸ்ா . ஸ்ா ஸ்ா	; நிஸ்ா	ரிஸ்ா	ஸ்நிநித	நீ ஸ்ா
ஆட வாரு	ய மு னு	கா .	ட்க்ரு	ஷ் ணுனி .	கூடி
பஸ்ா ஸ் . ஸ்ா	ஸ்நிதா புமபா	தநிஸ்ா	நிதபம	ரிகமா	ரீ ஸா
ஆ . டு சு	பா . . டு . சு	னந் . .	த . ரு .	ஜ ௵ . .	. ட க

சரணம்

ஸ ரி ஸ ஸா	பாபா பமமா	பமபா	தநிஸ்ா	ஸ்நிதா	பமபா
[illegible] ந் த ரு	ஹரி கீர்த் . . .	த ன	மு . ல	பா . .	ட . க
த பா	பமபத பமரீ	காமா	பதபம	ரீகம	ரீ ஸா
ந் தரு	ஆ . . னந் . த	மு ன	முத் . து .	லா . .	ட .

(இதற்கு மேல் அனுபல்லவி போன்றது)

நீதிக்கதை

(முன் பக்கத்தொடர்ச்சி)

விடுகிறுயா?' என்று அப்பு அந்த மனிதனிடம் சொன்னுன். 'அப்படியே ஆகட்டும்' என்று மோட்டார் வண்டியின் சொந்தக்காரன் சொன்னுன். மோட்டார் வண்டிக்காக ஒரு சீட்டு அப்பு ஆரம்பித்தான். அந்த ஊரிலிருந்த பசு பரிபாலன சங்கத்திற்கு இரு நூறு ரூபாய்கள் நன்கொடையாகக் கொடுப்பதாக அப்பு விளம்பரம் செய்தான். சீட்டு ஒன்று பத்து ரூபாய்கள் வீதம் நூற்றிருபது சீட்டுகள் அதி சீக்கிரத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. பத்து ரூபாய்களுக்கு ஒரு மோட்டார் வண்டி கிடைத்தாலும் கிடைக்கும் என்னும் பேராசையினுல் தூண்டப்பட்டவர்களாய் ஜனங்கள் சீட்டுகளை வாங்கிக் கொண்டனர். ஐந்து வயதான குழந்தை யொன்றைக் கூப்பிட்டு, சீட்டுகளைக் குலுக்கிப் போட்டு, அப்பு எடுக்கச் சொன்னுன். பணம் கொடுத்து சீட்டு வாங்கியவர்கள், பசு பரிபாலன சங்கத்தின் கார்யதரிசிகள், முதலியவர்களின் முன்னிலையில் அந்தக் குழந்தை ஒரு சீட்டை எடுத்துக் கொடுத்தது. அலங்கரிக்கப்பட்ட பசு ஒன்றும் அந்த சமயத்தில் அங்கு கட்டப்பட்டிருந்தது. அதிர்ஷ்ட நம்பருடன் கூடிய அந்த சீட்டின் சொந்தக்காரனுக்கு மோட்டார் வண்டி கொடுக்கப்பட்டது. பசு பரிபாலன சங்கத்திற்கு இரு நூறு ரூபாய்கள் வழங்கப்பட்டன. மோட்டார் வண்டியின் சொந்தக்காரன் ஐந்நூறு ரூபாய்களைப் பெற்றுக் கொண்டான். மிகுந்திருந்த ஐந்நூறு ரூபாய்களை அப்பு எடுத்துக் கொண்டான். 'ஆறுமணி நேரம் கஷ்டப்பட்டதற்கு ஐந்நூறு ரூபாய்கள் கிடைத்தது எவ்வளவோ மேல்' என்று சொல்லிக் கொண்டே அப்பு தன் ஓட்டலுக்குத் திரும்பினுன்.

ஸர்பஹத்தி நியாயம் :

'இந்து தேச மக்கள் ஸர்ப்பங்களைக் கொல்லுதல் நியாயமா?' என்று வைதீகப் பற்றுடைய ஒருவன், சீர்திருத்தக்காரனைக் கேட்டான். 'ஸர்ப்பங்கள் இந்து தேசத்தவர்களை மாத்திரம் கடித்துக் கொல்லாமலிருக்கின்றனவா? அவை இந்து தேசத்தவர்களைக் கொல்லாமலிருந்தால் இந்துதேச மக்களும் அவைகளைக் கொல்லக்கூடாது. ஆனுல், நமது தேசத்தில் நல்ல பாம்பு கடித்து இறந்து போகும் இருபதினுயிரம் மனிதர்களுக்குள் பெரும்பாலானவர்கள் இந்து தேசத்தவர்களே என்பதில் சந்தேகமில்லை. அப்படியிருக்க இந்து தேசத்தவர்களாகிய நாம் மாத்திரம் ஏன் ஸர்ப்பங்களைக் கொல்லாமல், அவைகளின் மீது அனுதாபம் காட்ட வேண்டும்?' என்று தலைவன் பதிலளித்தான்.

உமா சங்கரன்

சிறு கதை

★

"கிச்சு" எழுதியது

1

சங்கரன் அந்த வீட்டின் கீழ் பாகத்திற்குக் குடி வந்த பொழுது மேலேஒரு பெண்மணி மட்டும் இருக்கிறுள் என்று அவனுக்குத் தெரியாது. அவன் இரண்டு மாதம் லீவ் எடுத்துக் கொண்டு ஊருக்குப்போயிருந்த பொழுது அவனுக்காக அவன் சிநேகிதன் அந்த வீட்டை அமர்த்தினன். பதினுறு ரூபாய்க்குக் கீழ் பாகம் மலிவுதான். நாளைக்கு அவன் தாயார் ஊரிலிருந்து வந்தால் சமையலுக்கு வேண்டுமென்கிற இடம் இருந்தது. ஆனுல் மேலே ஒரு பெண்மணி மட்டும் இருக்கிறுளே என்று அவனுக்கு கூச்சமாயிருந்தது. ஆனுல் மாடியில் இருந்தாலென்ன! அவள் மட்டிலும் காலை பத்து மணிக்கு பள்ளிக்கூடத்திற்குப் போய்விட்டு சாயுங்காலம் ஐந்து மணிக்கு வரப்போகிறுள் என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டான். மேலும் அனுதை. நாள் முழுக்க சிரமப்பட்டு பாடம் சொல்லிக் கொடுத்து சம்பாதித்துச் சாப்பிடவேண்டியிருக்கிறதே என்று அவள் பேரில் அவனுக்கு இரக்கம் உண்டாயிற்று. அந்த வீட்டிற்கு வந்த ஒரு வாரத்திற்குள்ளேயே சந்திர பிம்பம் போன்ற வதனமும், குயில் போன்ற தொனியுமுள்ள பதினுறும் பிராயத்தை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த உமா என்று நாமதேயம் பூண்ட அந்தப் பெண்மணி அவன் ஹிருதயக் கோட்டையை முற்றுகை போட ஆரம்பித்து விட்டது போல் தோன்றியது.

சங்கரன் அந்த வீட்டிற்கு வந்த ஒரு வாரத்திற்கெல்லாம் ஊரிலிருந்து ஒரு கூடை ஒட்டு மாம்பழம் வந்தது. சாயங்காலம் எழு மணி இருக்கும், மேலேயிருக்கும் பெண்மணிக்கு கொண்டு போய்க்கொடுப்போம் என்று ஒரு டஜன் பழத்தை ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு மாடிக்குப்போனுன். மாடிக்கதவு தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. அவள் ஈஸிசேரில் படுத்துக்கொண்டு ஏதோ புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தாள். மாடிப்படியில் யாரோ வரும் சப்தத்தைக் கேட்டு "யார்?" என்று அதிகார தொனியில் கேட்டாள்.

"ஏன், நான்தான்" என்றுன் சங்கரன். அவள் கதவைத் திறவாமலேயே "என்ன விசேஷம்"? என்று கேட்டாள்.

இதுமாதிரி அவள் வரவேற்பாள் என்று அவன் நினைக்கவில்லை. ஏண்டா இவளுக்கு மாம்பழம் கொண்டு வந்தோம் என்று அவனுக்கு ஆகிவிட்டது.

"ஊரிலிருந்து ஓட்டு மாம்பழம் வந்திருக்கிறது. உஙகளுக்கு மாம்பழம் பிடிக்குமோ என்னமோ என்று கொண்டு வந்தேன்" என்றுன்.

"எனக்கு மாம்பழம் பிடிக்கவே பிடிக்காதே" என்றுள்.

"இல்லை. நீங்கள் சாப்பிட்டுப் பாருங்கள்; அப்புறம் சொல்லுவேள். இதைப் போன்ற பழம் சென்னை ராஜதானியில் கிடையவே கிடையாது." என்றுன சங்கரன் "சரி. அப்படி யென்றுல் வைத்து விட்டுப் போங்கள்" என்றுள். அப்பொழுதும் அவள் கதவைத் திறக்கவில்லை.

அடுத்த நாள் காலை வேலைக்காரி சொரணி வீட்டுக்குப் போகும் பொழுது ஒரு கூடையில் மாம்பழம் கொண்டு போவதைப் பார்த்தான். "ஏது மாம்பழம் உனக்கு?" என்று கேட்டான்.

"மாடி அம்மா கொடுத்தாங்கோ. அம்மா நேற்றைக்கு டவுனிலேயிருந்து மாம்பழம் வாங்கிக் கொண்டு வந்ததாம், அப்படியே மீந்து போச்சாம், சொரணி! நீ எடுத்துக் கொண்டு போ என்று கொடுத்தாங்க" என்றுள். அவளிடமிருந்த கூடையை வாங்கிப் பார்த்தான். தான் முதல் நாள் ராத்திரி கொண்டு போய் கொடுத்த பழங்கள்தான், [illegible] சந்தேகமே இல்லை. கொண்டு போய் கொ[illegible] பழங்களை அப்படியே ஒ[illegible] கூட தொடாமல் வேலைக்காரியிடம் தன்னை அவமானப்படுத்துவது போல் கொடுத்தாளே என்று அவன் மனம் உதைத்துக் கொண்டது. அவளை அப்புறம் கண்டால் கூட மூஞ்சியை திருப்பிக் கொண்டு போக ஆரம்பித்தான்.

2

மேற்படி சம்பவம் நடந்து ஒரு வாரமிருக்கும். சாயங்காலம் ஆறு மணியிருக்கும். அவன் மாடிப்படியினருகில் நின்று கொண்டிருந்தான்: அப்பொழுது தான் அவள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தாள்.

"நாளை [illegible] வீட்டைக் காலி பண்ணி விடலாம் என்று பார்க்கிறேன்" என்றுன்.

"காலி பண்ணுகிறதாலுல் பண்ணுகிறது, வழக்கப்படி ஒரு மாத நோட்டீசை கொடுத்துவிட்டு" "என்றுள் அவள். அப்புறம் ஒரு செகண்டு கழித்து "ஏன் உங்களுக் கீழ் அசௌகரியமாயிருககிறதா ?" என்று கேட்டாள்.

"அசௌகரியம் ஒன்றுமில்லை. நான் கீழ் இருப்பது உங்களுக்கு சம்மதமில்லை போல் தோன்றுகிறது. உங்களுக்கு என் பேரில் ஏதாவது கோபமா?" என்று கேட்டான் சங்கரன்.

"உங்கள் பேரில் எனக்கு என்ன கோபம்? நீங்கள். மட்டிலும் ஆபீஸிற்கு போகிறேள், ஆபீஸிலிருந்து வருகிறேள்" என்றுள்.

"அப்படியென்றுல் நான் கொடுத்த மாம்பழத்தை அப்படியே [illegible]லக்ஷியமாக வேலைக்காரியிடம் கொடுக்கலாமா?" என்று கேட்டான்.

"நான் ஒன்றும் கொடுக்கவில்லையே. உங்கள் மாம்பழம்

ரொம்ப நன்றுயிருந்ததே" என்று ஒரு மூட்டை விட்டாள் அந்த ஸாகசக்கள்ளி உமா.

"ரொம்ப நன்றாகவா இருந்தது! ரொம்ப சந்தோஷம். மாம்பழத்தை என்னிடம் திருப்பி அனுப்பிக்கும் பாவனையாக வேலைக்காரியினிடம் கொடுத்தது போல் இதை என்னிடம் திருப்பிக்கொடுத்தால் நான் பெற்றுக்கொள்ள தயார் தான்" என்று ஒரு கவரை அவளிடம் கொடுத்தான்.

"இது உங்களிடம் எப்படி வந்தது?" என்று கேட்டாள்.

"தபால்காரன் கீழே போட்டு விட்டு போயிருக்கிறான். நான் ஆபீஸிலிருந்து வந்தபொழுது தான் பார்த்தேன். தபால்காரன் நீங்கள் கீழேதான் இருக்கிறீர்கள் என்று நினைத்தான் போலும்" என்றான் விஷமச் சிரிப்புடன் தன் மனதை அவளழகிற்கு பறிகொடுத்த அந்த இளைஞன்.

அர்த்தபுஷ்டியுள்ள அவனுடைய வார்த்தைகளை அவள் சரியாக கிரஹித்துக்கொள்ளவில்லை. அவள் நடவடிக்கைகளில் கவலை கொண்ட அவன் புக்போஸ்டில் வந்த கவரைத் திறந்து பார்த்திருந்ததினால் கதை போலிருக்கு. திரும்பி வந்து விட்டது போலிருக்கு" என்றான்.

"ஆமாம்! பத்து கதைகள் அனுப்பினால் ஒரு கதையைத் தான் எடுத்துக்கொள்ளுகிறார்கள்" என்றாள். கதை திரும்பி வந்துவிட்டதே என்ற தளர்ந்த மனதுடன்.

"நான் சொல்லுகிறேன் பாருங்கோ. இந்தக் கதையை நான் படித்தேன். ரொம்ப நன்றாயிருக்கு. நீங்கள் 'பாதாள ஜோதி'க்கு அனுப்புங்கோ. கட்டாயம் பிரசுரமாகும்" என்றான்.

"நிஜமாகவா?" என்றாள் அவனுடன்.

"ஆமாம்! என் வார்த்தை பலிக்கிறதோ இல்லையோ என்று பாருங்கள். பிரசுரமானால் என்ன கொடுப்பீர்கள்?" என்று கேட்டான் வேடிக்கையாக.

"எனக்கு பணத்தைப்பற்றி கவலையில்லை, என் கதைகள் பிரசுரமாகி பேர் எடுக்கவேண்டும் என்பதே என் நோக்கம். அதற்காக அவர்கள் என்ன பணம் கொடுக்கிறார்களோ அப்படியே உங்களுக்குக் கொடுத்து விடுகிறேன்" என்றாள்.

"இப்பொழுது தருகிறேன் என்று சொல்லிவிட்டு நாளைக்கு மாட்டேன் என்று சொல்லக்கூடாது" என்றான் சிரித்துக் கொண்டே.

3

மேற்படி சம்பவம் நடந்து பதினைந்து நாட்கள் கழித்து அவன் ஆபீஸிலிருந்து எப்பொழுது வரப்போகிறான் என்று அவள் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தாள். அவன் வந்தவுடன் மான் குட்டி போல துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிவந்தாள். ... கள் வாய்க்கு சர்க்கரை போடவேண்டும். கதை ... ார்கள்.

பத்து ரூபாய் பணம் வந்திருக்கிறது" என்றாள் அவள்.

"ரொம்ப சந்தோஷம்" என்றான் சங்கரன்.

"இந்தாருங்கோ" என்று பத்து ரூபாயை மேஜைமேல் வைத்தாள். அவள் ஹிருதயத்தைக் கவர எண்ணமுள்ள அவன் அவள் பணத்தைக் கவர இஷ்டப் படுவானா?

"நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இது மாதிரி உங்கள் கதைகள் 'பாதாள ஜோதி'யில் பிரசுரமாகி வருகிற பணமெல்லாம் சேர்த்து நூறு ரூபாய் ஆனவுடன் என்னிடம் கொடுங்கள். வாங்கிக்கொள்ளுகிறேன். என்றான். இது மாதிரி அவன் சொல்லுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

"நூறு ரூபாய் ஆனவுடன் கொடுக்கமுடியாது! ஆயிரம் ரூபாய் ஆனவுடன் தான் கொடுப்பேன்" என்றாள் சிரித்துக் கொண்டே அந்த ஸாகஸக் கள்ளி.

"எப்பொழுது வாங்கிக் கொண்டாலும் வட்டியுடன் தான் வாங்கிக்கொள்ளுவேன் என்பது ஞாபகமிருக்கட்டும்" என்றான் சிரித்துக்கொண்டே அவன். வட்டி என்ன பிரமாதம் என்று நினைத்தாள் அவள். ஆனால் அவன் நினைத்த வட்டியோ?

4

மேற்படி சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து ஒரு நாள் சாயங்காலம் "நேற்று ராத்திரி நீங்கள் எங்கே இருந்தீர்கள்? வீட்டிலேயே ...னும்" என்றாள், "ஏது ...ந்து பார்க்கிருப்பலே இருக்கு" என்றான் சிரித்துக் கொண்டு "நேற்றுராத்திரி சினிமாவுக்கு போனேன். ஏக கூட்டம். ஆபீஸிலிருந்து கிளம்பும் பொழுது ஏதாவது ஒரு சினிமாவிற்கு போக வேண்டும் என்று பிளான் போட்டோம். கடைசியில் அதற்கே போனேம்." என்றான் அவன்.

"என்ன கதை?" என்று கேட்டாள்.

"கோபித்துக் கொள்ளாவிட்டால் சொல்லுகிறேன்" என்றான் அவன்.

"கோபித்துக் கொள்ளுகிறதற்கு என்ன இருக்கு. சொல்லுங்களேன்" என்றாள் அவள்.

"மாடியில் ஒரு யுவதி இருக்கிறாள். கீழே ஒரு யுவன் இருக்கிறான். இரண்டு பேரும் காதல் கொள்ளுகிறார்கள், கடைசியில்—"

"போதும் போதும்" என்று சிரித்துக் கொண்டு மாடிக்குப் போய் விட்டாள்.

5

மேற்படி சம்பவம் நடந்து பதினைந்து நாட்களிருக்கும். ஒரு நாள் "ஹல்வா" என்று புனை பெயர் கொண்டு கதை எழுதுகிறாரே, அது யார் என்று உங்களுக்கு தெரியுமா?" என்று கேட்டாள்.

"ஏன்?" என்றான் சங்கரன் திடுக்கிட்டு.

"நீங்கள் 'பாதாள ஜோதி'யின் பழைய பிரதிகளை கொடுத்தீர்களே, அதுகளை படித்தேன்."

'ஹல்வாவின் கதைகள் ரொம்ப நன்றாயிருக்கின்றன. எப்படித்தான் அவ்வளவு நன்றாக எழுதுகிறார் என்று எனக்கு தெரியவில்லை." என்றாள் அவள்.

"அப்படியா! அப்படியென்றால் 'ஹல்வா' என்பவர் ரொம்ப அதிர்ஷ்டக்காரர் என்றே சொல்ல வேண்டும். உங்கள் மனதை அவர் கவர்ந்து விட்டாரல்லவா!" என்றான் சங்கரன்.

"நீங்கள் சொல்லுவது ஒன்றும் புரியவில்லையே" என்றாள்.

அவருக்கு இன்னும் கல்யாணமாகவில்லை" என்றான் சங்கரன் மெதுவாக. அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. "நான்ஸென்ஸ்! அவருக்கு கல்யாணமானால் என்ன, ஆகாவிட்டால் என்ன, அதைப்பற்றி எனக்கு கவலையில்லை என்று சொல்லிக் கொண்டே இரண்டு படிக்கு ஒரு காலாக வைத்து மாடிக்குப் போய் விட்டாள்.

6

அடுத்த நாள் ஆபீஸிற்குப் போய் அறை மணிக்கெல்லாம் ஜுரமாயிருக்கிறது என்று வீட்டிற்கு வந்து விட்டான். சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்த அவளுக்கு அவனுடன் பேசக்கூட இஷ்டமில்லை. இருந்தாலும் அவன் ஜுரமாயிருக்கிறானே என்று கஞ்சி வைத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"என் பேரில் உங்களுக்கு கோபமா?" என்று கேட்டான் சங்கரன்.

"நீங்கள் அதுமாதிரி பேசுவீர்கள் என்று சொப்பனத்தில்கூட நான் நினைக்கவில்லை. ஒரு பெண்மணியின் ஹிருதயத்தில் ஒருவனுக்குத் தான் இடம் உண்டு என்பதை நீங்கள் அறியவில்லை. இச்சமயம் உங்களிடம் வாதாடுவதில் பிரயோஜனமில்லை" என்று சொல்லி விட்டு மாடிக்குப்போய் விட்டாள்.

7

எரியும் தீயில் எண்ணெயை விட்டது போல் அடுத்த நாள் காலை வந்த 'பாதாள ஜோதி' அவள் கோபத்தை உச்சஸ்தாயியில் கொண்டுபோய் விட்டது. இத்தனை நாள் தனக்கும் சங்கரனுக்கு நடந்த சம்பாஷணைகள் பேர் மாற்றுதலை தவிர சங்கரன் அவளுக்கு மாம்பழம் கொடுத்தது. அதை தூக்கி அவள் வேலைக்காரியினிடம் கொடுத்தது. அவள் கதை திரும்பி வந்தது. அதை அவன் 'பாதாள ஜோதி'க்கு அனுப்பியது. எல்லாம் கதை ரூபமாக 'பாதாள ஜோதி'யில் பிரசுரமாயிருந்தது. கடைசியில் காதலர்கள் கல்யாணம் செய்து கொண்டதாகக் கதை முடிந்தது. சங்கரன் அங்கு நடந்ததெல்லாவற்றையும் தன் சிநேகிதன் ஹல்வாவினிடம் சொல்லியிருக்கிறான். அதை அவன் கதை ரூபமாகத் திரித்து விட்டான் என்று அவளுக்கு தெரிய ரொம்ப நாழிகை ஆகவில்லை.

இது மாதிரி கேவலமாக சங்கரன் நடந்து கொள்ளுவான் என்று அவள் நினைக்கவில்லை. அவளுக்கு இருந்த கோபத்தில் 'ஹல்வா' யார் என்று தெரிந்து அவர் மேல் கேஸ் போடலாமா என்று தோன்றியது. அப்பொழுது எரிமலைபோல் கொழுந்து விட்டு எரியும் கோபத்தில் சங்கரன் ஜுரமாய் படுத்திருக்கிறானே—டெம்பரேச்சர் எப்படியிருக்கிறது—பார்ப்போம் என்று பார்க்க அவள் மனம் இடம் கொடுக்காததில் அதிசயமில்லை.

8

அன்றைய ராத்திரி அவள் கஞ்சியை எடுத்துக் கொண்டு வந்தாள். அப்பொழுது அவள் மனதில் காலையில் இருந்த கோபமெல்லாம் சிட்டாய் பறந்து ஆனந்தம் குடிகொண்டிருந்தது என்றே சொல்ல வேண்டும். "ஆயுள் பூராவும் ஜுரமாய்ப் படுத்துக் கொண்டிருக்கிறதானால் கூட எனக்கு சந்தோஷம்தான்" என்றான் சங்கரன் கஞ்சியை பருகிக் கொண்டே.

"ஏன்?" என்று கேட்டாள்.

"உங்கள் கையிலிருந்து தினம் கஞ்சி சாப்பிடலாமல்லவா? உங்கள் கையிலிருந்து கஞ்சி சாப்பிடுகிறதாயிருந்தால் கஞ்சியும தேவாமிருதமாய் இருக்கிறது" என்றான் சிரித்துக்கொண்டே.

"ஹலவாவுக்கு தினம் ஹலவா கொடுப்பேனே தவிர கஞ்சியா கொடுப்பேன் என்று ஒரு போடு போட்டாள்" அந்த சாகசக் கள்ளி.

"நீங்கள் சொல்லுவது ஒன்றும் புரியவில்லையே" என்றான் சங்கரன்.

"நீங்கள் இதுமாதிரி என்னை ஏமாற்றலாமா?

'ஹலவா' என்று புனைப் பெயர் கொண்டு கதை எழுதுகிறவர் நீங்கள் தான் என்று இன்றைக்குத் தான் தெரிந்து கொண்டேன். நீங்கள் நம் சமாசாரங்களை கதை ரூபமாக எழுதி அனுப்பலாமா?" என்று கேட்டாள்.

"அதில் என்ன தப்பு இருக்கு? நம் மனம் ஒத்தபிறகு யார் என்ன லக்ஷியம்? நம் கதை யாருக்காவது சொல்லவேண்டும் என்று ஆசையாய் இருந்தது. ஆகையினால் தான் எழுதி அனுப்பினேன், உமா! என் பேரில் உனக்குத் தயவில்லையா! என்னைக் கல்யாணம் செய்துகொள்ள உனக்கு ஒருவித ஆக்ஷேபணையும் இல்லை என்று சொல்லமாட்டாயா?" என்று கெஞ்சினான். அவள் முகம் நாணத்தினால் கவிழ்ந்தது. அவள் கையை பிடித்து அருகே விழுத்தான் அந்த இளைஞன்.

நவயுகப் பிரசுரங்கள்

வானொலியும் ஒளிபரப்பும்	2	0
புதுமைப்பித்தன் கதைகள்	2	0
உத்தமசீலன்	1	4
பரிமளகேசவன்	1	4
பிச்சைக்காரக் குடும்பம்	0	8
கருணாலயம்	1	0
சாந்தகுமாரி	1	0

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

காமாக்ஷியின் கண்ணீர்

★

ரா. வெங்கடாசலம்

எழுதிய கதை

★

கடலில் படகு செல்வதுபோல் ஆகாயத்தில் சந்திரன் மேகங்களினூடே புகுந்து நகர்ந்துகொண்டிருந்தான். வாடைக் காற்று வீசிக்கொண்டிருந்தது. அன்று இரவு ஒரு மணிக்கு மேலிருக்கும்; தெருக்களில் மனித நடமாட்டம் ஓய்ந்திருந்தது.

காமாக்ஷிக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. பாயில் உட்கார்ந்து தலையணைமேல் வைத்து ஏதோ ஓர் கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். அவள் உட்கார்ந்திருந்த அந்த ஒரே ஹால், அடுத்த சமையல் அறை—இவைதான் அவளுடைய வீடு! வேறு ஒருவருமில்லை. புகை கக்கிக் கொண்டு மினு மினுவென்று ஏதோ லேசாக வெளிச்சம் தந்து கொண்டிருந்த விளக்கொன்றுதான் அவளுடன் விழித்துக்கொண்டிருந்தது.

காமாக்ஷி எழுதிய கடிதத்தில் ஒரு வரி முடிய எத்தனையோ யோசனைகள் செய்ய வேண்டியதாக இருந்தது. எழுத்து வேகமாகச் செல்ல முடியவில்லை. அவள் அடிக்கடி பெருமூச்சு விட்டாள். கண்களில் பிரகாசம் குன்றிக் கன்னங்களும் ஒட்டியிருந்தன. உதடுகளில் ஈரப்பசையில்லை—உலர்ந்திருந்தன. பதினெட்டு வயதுக்கு மேலிராத அந்த யௌவன மங்கையின் இதயத்தில் தாங்க முடியாத பெரும் துக்க அலைகள் மோதிக் கொண்டிருந்தன. தலைமுடி கோதி முடியாமல் ஒழுங்கற்றுச் செருகியிருந்தது.

அவள் எழுதிக்கொண்டிருக்கும்போதே தலைவாசல் கதவை அடிக்கடி பார்த்துக்கொண்டாள். அந்தந்த சமயங்களில் அவளுடைய முகத்தில் பெரிதும் பீதிக்குறிகள் தோன்றின. கடிதத்தைச் சுருக்கமாகவே முடித்துவிட முயன்றாள்; என்றாலும் முதலில் ஒரு பக்கம் எழுதி, அடுத்த பக்கமும்திருப்பி எழுதவேண்டியதாகி விட்டது. மறுபக்கத்தைத்திருப்பி அவள் எழுதப் பேனாவை ஊன்றிய போது வாசல் கதவு தட்டும் சப்தம் கேட்டது. காமாக்ஷி திடுக்கிட்டுவிட்டாள். உடனே பேனாவைமூடித் தலையணைக்குள்மறைத்துவிட்டு எழுதிய கடிதத்தையும் மடக்கி பாய்க்கு அடியில் ஒளித்து வைத்தாள். விளக்கு வெளிச்சத்தையும் ஊதி அணைத்துவிட்டு, அப்போது தான் படுக்கையிலிருந்து எழுந்தவள் போல் உடைகளைச்சரிப்படுத்திக் கொண்டு கதவை அணுகினாள்.

வெளியே இருந்து பெரிய சப்தமாக அதட்டல் கேட்டது. காமாக்ஷி இன்னும் அரண்டு விட்டாள். "இதோ வந்துட்டேன்" எனச் சொல்லிக் கொண்டே கதவு தாழ்ப்பாளை தள்ளினாள். மறு நிமிஷம் என்ன நடக்குமோ என அவளுடைய உள்ளம் பதைத்தது. அவளுடைய மேனி நடுங்கியது.

கதவைத் தள்ளிக்கொண்டு கிருஷ்ணன் உள்ளே நுழைந்தான். காமாக்ஷியின் புருஷன் தான் அவன். கண்களில் ஓர்வித சென்னிறம் படர்ந்திருந்தது. உடம்பில் ஓர் வித போதை உணர்ச்சி ஊடுருவி அவனைத் தள்ளாடச் செய்தது. அடர்ந்திருந்த அவனுடைய மீசையை ஒரு பக்கம் ஒதுக்கி விட்டு, கை நிறைய அதைப் பிடித்து திருகி விட்டான்.

கிருஷ்ணனுடைய பார்வை காமாக்ஷியை இன்னும் அதிகமாகத் திகிலடையச் செய்தது. அவள் ஒரு பக்கமாக ஒதுங்கி ஒடுங்கி நின்றாள்.

"ஏண்டி விளக்கெங்கே?"—கிருஷ்ணன் கேட்டான்.

காமாக்ஷி விளக்கை ஏற்றினாள். கிருஷ்ணன் பாய் மேல் உட்கார்ந்தான்.

"ஏண்டி வருகிறப்போ உள்ளே வெளிச்சம் தெரிந்ததே. நான் வந்தவுடன் இருட்டாயிடுச்சே, அது ஏண்டி?" என்றான் மறுபடியும்.

காமாக்ஷிக்கு என்ன சொல்வதெனத் தெரியவில்லை. கிருஷ்ணனிருக்கும் அந்த கோர நிலையில், அவனுக்கு சாவதானமாக யோசித்துப் பதில் சொல்ல நேரமில்லை: என்றாலும் அவளுடைய இருதயத் துடிப்பு போல், கிருஷ்ணன் 'என்ன பேசாமே நிக்கிறே!' என அதட்டியதற்குள், எவ்வளவோ வேகமாக அவளுடைய சிந்தனை சுழன்றது.

கிருஷ்ணன் பெரிய பாங்கில் வேலை பார்த்து வந்தான். 35 ரூபாய் மாதச் சம்பளம் அவனுக்கு; நல்ல யோக்யனாகவும் யாரையும் திருப்தி செய்யும் மனப்பான்மையுடையவனாகவும் இருந்தான். சிரித்துக்கொண்டுபேசுவான். அவனிடத்தில் யாதொரு களங்கமும் காண்பதற்கில்லை. பாங்கில் பணம் கட்டவோ, சில்லறை மாற்றவோ வருகிறவர்கள், அவன் மேல் தனிப் பிரியமாயிருப்பார்கள். 4, 5 பேர்கள் சராப்பிலிருந்தாலும் கிருஷ்ணனுக்குத் தான் 'கிராக்கி'; அந்த இடத்தில் 'நாயினா! நாயினா' என்று அவனைப் பிரியமாய் கூப்பிடும் வேண்டுகோள் மட்டும் அதிகமாகவிருக்கும்,

கடை வீதிகளில் அவனுக்குத் தனிக் கௌரவம் கிடைத்தது. தெருவில் அவன் நடந்தால் கடைக்குக் கடை அவனை அழைத்து, கலர், வெற்றிலை, வைத்து மரியாதை செய்தனுப்பாத முதலாளிகள், சிப்பந்திகள் ஒருவரும் கிடையாது. கடைகளில் சேரும் சில்லரைகளை பாங்கிக்கு மாற்றக் கொண்டு போகும் குமாஸ்தாக்களும் சிப்பந்திகளும் தங்களை அறிமுகப்படுத்த, பாங்கிக்குப் போனால் தம்மை முதலில் கவனிக்க வேண்டும், என்ற நினைப்பில் விசேஷித்த பேச்சும், மரியாதையும் செய்தார்கள்.

அடுத்த குமஸ்தாக்களுக்கு அவன்மேல் அசூயை, பொறாமை இல்லாமலா இருக்கும்? கிருஷ்ணன் அதைப் பொருட்படுத்தவில்லை.

கிருஷ்ணனுக்கு தாய்தந்தையரில்லை. தாய் மாமன் உதவியால் கொஞ்சம் படித்து அந்த ஷராப் வேலை கிடைத்தது. பூர்வீக சொத்து அம்மையநாயக்கனூரில் ஒரு சிறு வீடும், ஒன்றரை ஏகரா புஞ்சையுமே இருந்தன. அவன் பந்துக்களின் சேர்க்கையை உத்தேசிக்கவில்லை. பெரிய பூஸ்திதி இல்லாததைப் பொருட்படுத்தவில்லை. பையனின் தொழிலும், அவனுடைய குணமும், திறனும் தான் அவனுக்கு உற்ற பந்துக்களாகவும், பெரிய செல்வமாகவுமிருந்தன. திருச்சியிலிருந்து கொஞ்சம் நகையுடனே காமாக்ஷி அவனுக்கு இல்வாழ்க்கைத் துணைவியாக வந்து சேர்ந்தாள்.

இருவரும் உல்லாசமாகவே வாழ்கை நடத்தி வந்தனர். ஒரு குறைவுமில்லை. ஒருவர் மேல் ஒருவர் அளவற்ற பற்றுதலுடனிருந்தனர்.

மணமாகி ஒன்றரை வருஷமானது. அவனுடைய கிரஹங்களில் மாறுதலேதேனும் ஏற்பட்டதோ என்னவோ? கிருஷ்ணன் ஷராபில் சில்லறை மாற்றுவதில், சில்லரை மாற்றுபவரோ, சில்லரையைக் கொண்டு வந்து பாங்கில் போடுபவரோ, அவனுடைய தயவுக்காக, 100 ரூபாய் சில்லரைக்கு கமிஷனாக 1 அணா, 2 அணா இவ்விதம் கொடுக்கலானார்கள். வாங்கலாமா என இரண்டுமூன்று தினங்கள் யோசனை செய்தே முடிவு செய்தான். வலிய வருகிறதை நாம் ஏன் வாங்கக்கூடாது? அவர்கள் கொடுக்கும்இனாமை வாங்குவதால் பாங்கிக்கு ஏதேனும் நஷ்டம் உண்டோ! 100 ரூபாய்க்கு 105 ஆக கொடுக்கப் போகிறதில்லையே. வாங்கினால் தோஷமில்லை. வாங்கலாம் எனத் தீர்மானித்தான்.

கிருஷ்ணன் வீட்டிற்கு வரும் போது அவனுடைய சட்டைப் பையில் சில்லறையாக நிறைந்திருக்கும்:சில நாட்களில் 10, 15 ரூபாய்க்கும் மேலிருக்கும்,

மற்ற குமஸ்தாக்களுக்கு இந்த பாக்கியம் இல்லை. அவர்கள் அவன் மேல் பொறாமை கொண்டவர்கள்தானே! வஞ்சம் தீர்க்க அதுதான் சமயம் என மெதுவாக ஏஜண்டிடம் சொல்லி விட்டார்கள். அதன் பயனாக கிருஷ்ணனுக்கு வேலை போயிற்று!

கிருஷ்ணனுக்குவேலைபோனதிலிருந்து அவனுடைய மரியாதையும் சேர்ந்து போய்விட்டது. முன்போல் அவனை யாரும் தேடுவாரில்லை. வேறு வேலைக்கும் மனுப்போட்டுக்கொள்ள லாயக்கும் இல்லாதவனாகி விட்டான்.

கிருஷ்ணன் தன் வேலைபோனதைப்பற்றிக்கூட அவ்வளவாக கவலைப்படவில்லை, அவனுடைய கௌரவம், சென்றவிடமெல்லாம் சிறப்பு, இவை உதிர்ந்து போய்விட்டதுதான் அடக்கமுடியாத துக்கமாகிவிட்டது. காமாக்ஷியும் எவ்வளவோ தேறுதல் சொல்லிப் பார்த்தும் பயனில்லை.

அந்த துக்கத்தை மாற்ற தன் சுயபுத்தியில் மாறுதல் ஏற்பட்டால் தான் சாத்தியமென நினைத்தான். அதிலிருந்து சாராயம் சாப்பிட ஆரம்பித்தான். நாள் செல்லச் செல்ல அதன் அளவும் அதிகமானது. என்றாலும் கையில் காசும் குறைவாகி விட்டபடியால் கள்ளுக்கடைக்குச் செல்லலானான்,

கிருஷ்ணன் எதிர்பார்த்தபடி வெற்றியடைந்தான். பழைய கவலை அவனுடைய உடலை அரித்துக் கொண்டு வந்த அந்த துக்கம், துயரம் இப்பொழுது அவனிடமிருந்து அறவே ஒருந்தன போல்தான். அந்த உணர்வு அவனிடமிருந்து எப்படிப் போகும்? அதை மறந்திருந்தால் பின்னும் மதுக் குடியின் அவசியமில்லையே! கிணற்றினடியில் கிடக்கும் சாமான்கள் தண்ணீரின் மேல் அடர்ந்திருந்த பாசத்தினால் கண்களுக்குத் தெரிவதில்லை. அதுபோல் அவன் உள்ளத்திலிருந்த அந்த உணர்ச்சி அவன் இப்போது பழகியிருக்கும் குடிப்பழக்கத்தால், போதை மேவியிருப்பதால், அதை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை.

கிருஷ்ணனுக்கு கள் குடி உற்ற தோழனாகிவிட்டது. வெளியூர் செல்லும் சந்தர்ப்பம் நேரிட்டாலும் அவனுடைய இடையில் ஓர் பாட்டில் தொங்கும். அதன் நிறைய கள் விழிம்பு தட்ட இருக்கும்.

கவலையை மறந்திருக்கலாம். விசனம் மறைந்திருக்கலாம். அவன் அந்த வகையில் ஏதோ கொஞ்சம் சாந்தியும் பெற்றிருக்கலாம். ஆனால் அதன் பயனாக இன்னும் எத்தனையோ புதுப் பழக்கங்களும், குணங்களும் ஏற்பட்டுவிட்டால் அதிசயமில்லை. அம்மையநாயக்கனூர் பூஸ்திதி காலியாகிவிட்டது. காமாக்ஷியின் கழுத்துச் சங்கிலியும் பாங்கில் அடமானத்திலிருந்தது.

அவனுக்கு முன்னால் கோபம் வந்து யாரும் அறியார். மீறி வந்தாலும் சமாளித்துக்கொள்ளும் திறமை படைத்தவன் தான். ஆயினும் இப்போது அந்தக் கோபம், கோர ஸ்வாபம், பல்லை

"அதைச் சொல்"

இங்கிலாந்தில் மகாத்மாஜியின் உத்தேசத்தைப் பற்றிப் பலவிதமான கார்ட்டூன் படங்கள் வரையப்பட்டிருக்கின்றன. "டெய்லி மிர்ரா" பத்திரிகையில் "ஸெக்" என்பவர் வரைந்தது இது. இந்திய பாதுகாப்பு ஏற்பாடுகளை இது குறிப்பிடுகிறது

பிரசாரத்தின் மகிமையே மகிமை! கூட்டினால் குறையும்; குறைத்தால் கூடும். ஆச்சர்யமான விளைவல்லவா அது. ஆனால் உண்மை. குறை கூட, குணம் குறையும்; குணம் குறையக் குறை கூடும். குறைத்தும் கூட்டியும் பேசுவது இன்று சகஜமாகிவிட்டது. யுத்தத்தின் விளைவு. தணிக்கை பூறை இடம் தருகிறது. யுத்தத்தில் முளைத்தது யுத்தத்தோடு நிற்கவில்லை. கரைகடந்து காங்கிரஸைக் கவ்விக் கொண்டிருக்கிறது. காங்கிரஸைக் கண்டிக்கப் பிரசாரம் வலுத்து வருகிறது. இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிவருகின்றனர். அடக்கு முறைக்கு அஸ்திவாரம் போலும்!

கிரிப்ஸ் கபட சந்நியாசி என யாரும் எண்ணவில்லை. அடுத்துக்கெடுப்பார் என்று எதிர்பார்க்கவுமில்லை. அமெரிக்கருக்கு அவர் செய்த பிரசங்கம் ஆச்சரியமாயிருந்தது. கூட்டியும் குறைத்தும் பொய்யை மெய்யாக்கினர். ஏமாற்றம் அவர் பிரசங்கத்தில் மாத்திரம் அல்ல; அவரிடத்திலும்

கபட நாடகம்

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

தான். நொடிப்பொழுதில் நாணயத்தை இழந்தார். காங்கிரஸுடன் கூடிக்கூடி கிரிப்ஸ் பேசியபோது அமெரிக்கப் பிரதிநிதி ஜான்ஸன் இந்தியாவில் இருந்தார். நடந்தது பூராவும் அவருக்குத் தெரியும். ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு உள் வயணத்தை சொல்லியிருப்பார். கிரிப்ஸின் கூற்றைக்கேட்டு அவர் ஏமாறப்போவதில்லை. நிலைமை முற்றி வருவதைக் கண்டு கவலை கொள்ளக் கூடியது சகஜம். அடக்கு முறைக்கு ஆதரவு தேடுவது அசம்பாவிதம்.

கிரிப்ஸின் கூற்று இந்த நாட்டில் எஞ்சியிருந்த நம்பிக்கையையும் ஆட்டிவிட்டது. மகாத்மாவின் கக்ஷியில் அபிப்பிராயபேதமில்லை. கக்ஷியை ஸ்தாபிக்க அவர் உத்தேசிக்கும் முறையில் தான் அபிப்பிராய பேதமுண்டு. கக்ஷி எவ்வளவு நியாயமாயினும் காலதேச வர்த்தமானத்தை அனுசரித்தே கார்யத்தில் இறங்க வேண்டும். கார்யக் கமிட்டியின் தீர்மானத்தின் கருத்தைப் பலர் திரித்துக் கூறலாம். தீர்மானத்தால் உத்தேசிக்கப்பட்டதென்ன வென்பதை காங்கிரஸ் அக்கிராசனர் சந்தேகமற விளக்கியிருக்கிறார். யுத்த முயற்சியை பலஹீனப் படுத்துவது நோக்கமல்ல; பலப்படுத்துவதே நோக்கம். அதற்கு ஒரு வழிதான் உண்டு. அதிகாரம் மாறவேண்டும். அதையே தீர்மானம் வற்புறுத்துகிறது. எச்சரிக்கை செய்திருப்பது உண்மை. விஷயத்தை விட்டு கவனம் அதில் திரும்புவானேன்? விஷயம் தீர்ந்தால் வினையும் தீரும்.

நாடு நம்முடையது. சமாதானத்தில் நமக்கில்லாத சிரத்தை பிறருக்கு இருப்பதற்கில்லை. யுத்தம் முற்றிவருகிறது. முயற்சி வலுக்கவேண்டும். காங்கிரஸை அடக்கினால் முயற்சி வலுக்குமா? காங்கிரஸுக்குச் செல்வாக்கில்லை என்கிறார்கள். செல்வாக்கில்லாவிட்டால் அடக்குவானேன்? செல்வாக்கு தேடிக் கொடுக்கவா? காங்கிரஸுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பை இன்னும் சம்பந்தப்பட்டவர்கள் அறியவில்லை. காங்கிரஸ் கார்யார்த்தமாக ஸ்தாபன உருப்பெற்றிருக்கிறது. ஆனால் கருத்தளவில் மக்களனைவர் மனதிலும் பொங்கும் சுதந்தர தாகத்தையே அது குறிப்பிடுகிறது. காங்கிரஸை அடக்க முற்பட்டால், சுதந்தரத்தை அடக்குவதாகவே மக்கள் கொள்வர். நல்ல வேளையாக கவர்ன்மெண்டார் இது வரையில் நிதானம் இழக்கவில்லை. இனியும் பொறுப்பர் என்றே எதிர்பார்க்கிறோம்.

பொறுமையுடன் பொறுப்புக் கழியாது. சிடுக்கை அவிழ்க்க வேண்டும். கவனம் அதில் திரும்ப வேண்டும். தற்கால சாந்தியாக ஸர் ஸப்ரூ சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார். மிகவும் மிதமான கோரிக்கைகள். அந்த அளவுக்காவது கவர்ன்மெண்டார் அசைந்து கொடுப்பாரா? காங்கிரஸ் கோருவது அதிகாரமல்ல; அதிகாரத்தை விட்டுக் கொடுக்கும் மனோபாவத்தையே கவர்ன்மெண்டிடம் எதிர் பார்க்கிறது. அந்தரங்க சுத்தியில் நம்பிக்கை பிறக்க வேண்டும். அவ்வளவுதான். அதற்கு இன்னும் காலப்பிற்பாடாகிவிடவில்லை. நிர்வாக சபையில் ஸ்தானம் வகிப்போர் அதை அறிவுறுத்த வேண்டும். காங்கிரஸைக் கண்டிப்பது தங்கள் கட்டையெனச் சிலர் நினைத்துக் கொண்டு விட்டனர். அடக்கமில்லாமல் பேசி வருகின்றனர். வகிக்கும் பதவிக்கும் அது யோக்கியதையல்ல.



மற்றொரு சித்திரம்

'டெயிலி மெயில்' பத்திரிகையில் இல்லிங்வொர்த என்பவர், தாம் வரைந்த இந்தச் சித்திரத்தில், மஹாத்மா விபரீதமான ஒரு திட்டத்துடன் மாயப்பிரபஞ்சத்தில் சஞ்சரிப்பதாகவும், இது எதிரிகளான ஜப்பானியருக்கு அனுகூலம் புரிவதாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டுகிறார். இவ்விரு சித்திரங்களும் ரேடியோ மூலம் லண்டனிலிருந்து கெய்ரோவுக்கு வந்தவை.

சீவக சிந்தாமணி—7

இசைப்போர்

★

வ. வேணுகோபாலன் எழுதியது

சீதத்தன் இராசமாபுரத்தே உள்ள தன் இல்லத்தில் ஒரு பகுதியை அலங்கரித்துப் புதுமைசெய்து அதில் காந்தருவதத்தையையும் அவளைச் சேர்ந்தவர்களையும் இருக்கச் செய்தான். தன் மனைவியாகிய பதுமைக்குக் காந்தருவதத்தையைப் பற்றிக் கூறி, அவளுக்கு அறிமுகம் செய்வித்தான். பார்ப்பவரைக் கவர்ச்சிகொள்ளும் தோற்றத்தையும், பருவத்திற்கேற்ற அழகையும் உடைய காந்தருவதத்தையைக் கண்டு பதுமை முதலிய மகளிர் வியப்புற்றிருந்தனர். சீதத்தனால் செய்விக்கப்பெற்ற கன்னியாமாடத்தே காந்தருவதத்தையும் வீணாபதியும் வீணை வாசித்தலையும், பாட்டுப் பாடுதலையும் பொழுது போக்காகக் கொண்டு மகிழ்ந்திருந்தனர்.

கலுழவேகன் இட்ட கட்டளையை நிறைவேற்ற எண்ணிய சீதத்தன், தன் மனைவிக்கு அச்செய்தியை முதலில் உணர்த்தினான். பின்னர் அவ்விதம் செய்வதற்கும், இசைப் போர் செய்வதற்குத் தக்க மண்டபத்தை அமைத்தற்கும் அரசன் அநுமதியைப் பெற எண்ணினான். உடனே கட்டியங்காரனிடம் சென்று, அவனுக்குப் பொன்னையும் மணிகளையும் காணிக்கையாக அளித்துத் தன் எண்ணத்தை அறிவித்தான். கட்டியங்காரன் மனமகிழ்ந்து அதற்கு அநுமதி தந்தான். சீதத்தன் மகிழ்வுற்று விரைவில் ஓர் பெரிய மண்டபத்தைக் கட்டுவித்தான். மண்டபத்தைப் பலவகையாலும் அலங்கரித்து அழகு செய்வித்தான். இசைப்போர் நடப்பதை நகரத்தினர்க்குத் தெரிவிக்க எண்ணி முரசறைவானை அழைத்து, "அரசர், அந்தணர், வணிகர் என்ற முக்குலங்களொன்றில் உதித்த ஒருவன் காந்தருவதத்தையோடு யாழ் வாசித்து இசையில் வென்றால், அவனுக்கு அவளை மணம் செய்து கொடுக்கப்படும். இது சீதத்தன் வார்த்தை" எனக்கூறி 'நகரில்முரசறைவாயாக!' என்று கட்டளையிட்டான். முரசறைவானும் அவ்விதமே நகரத்தார்க்கு முரசறைந்து தெரியப்படுத்தினான். இராசமாபுரத்தருகிலுள்ள பல நாடுகளுக்கும் சீதத்தன் ஓலைபோக்கினான்.

காந்தருவதத்தை இசைக்கலையில் வல்லவள் என்பதையும் அழகுமிக்க வித்தியாதரகுலத்து மங்கை யென்பதையும் அறிந்த யாவரும் இராசமாபுரத்தே வந்துசேர்ந்தனர். இசையில் வல் அரசர், அந்தணர், வணிகர் என்ற முக்குலத்தினரும் வந்து கூடினர். தேனை விரும்பி வந்த தேனீக்களைப்போல எல்லோரும் நகரத்தே வந்து தங்கி இசைப்போர் நடக்கபோவதை எதிர்பார்த்திருந்தனர்.

சீதத்தன், சோதிடன்சொன்ன நல்ல நாளொன்றில் இசைப் போர் நடத்த ஏற்பாடு செய்து காந்தருவதத்தைக்கு அதைத் தெரிவித்தான். யாசகர் பலர்க்கும் வேண்டிய பொருளைக் கொடுத்து அருகக்கடவுளுக்குப் பூஜை செய்வித்தான் சீதத்தன். மகளிர் பலர் காந்தருவதத்தையை மணியைக் கழுவுவதுபோல் வாசனை நீரில் நீராட்டி, ஆடையாபரணங்களால் அலங்காரம் செய்தார்கள். அழகுக்கு அழகு செய்தாற்போலக் கலுழவேகனும் அவன் மனைவியும் அளித்த அணிகலங்களால் அலங்கரித்தனர். காந்தருவதத்தை வீணாபதியுடனும் வேறு பல மகளிருடனும் இசைப்போர் செய்தற்குரிய மண்டபத்திற்குப் புறப்பட்டாள். அவளைச் சூழ்ந்து காவலாக ஆணுடைதரித்த மகளிர் நூற்றுவர் வில் வாள் முதலியன ஏந்தி வஞ்சினம் கூறிச் சென்றனர். மற்றொரு பக்கத்தே, மகளிர் பலவேறு வீணைகளையும், இசைக் கருவிகளையும் எடுத்து வந்தனர். பொன்னரிமாலையும், மேகலையும் அசைய, சிலம்பு கிண் கிணியும் ஒலிக்க, 'அன்ன நடை இதுவோ, என்று கூறும்படி அசைந்து நடந்து வந்தாள் காந்தருவதத்தை. அவள் அழகையும் நடையையும் கண்டு மதிமயங்கினர் மண்டபத்திருந்தவர்கள். "இவள் திருமகளோ! அன்றி வித்யாதரமகள்தானோ!" என்று கூறினர் பலர். "இவளை யாழால் வென்று மணப்பதல்லது வலிதிற்கொண்டால் போர் செய்வோம்" என்று பலர் கூறினர். "யாழில் எல்லோரையும் இவள் வென்றுவிட்டால் இவளைப் பெறுமாறு தவம் செய்வோம்" என்றனர் பலர். இவ்வாறு பலரும் பலவாறு சொல்லிக்கொண்டிருந்தனர்.

காந்தருவதத்தை மண்டபத்தில் நுழைந்து உட்புறத்தே திரைக்குப் பின்பு போய் அமர்ந்தாள். உடன் வீணாபதி கொடுத்த வீணையைக் கையில் வாங்கி நரம்பைத் தெறித்தாள். காந்தருவதத்தையின் அழகிலே மயங்கிப் பேசிக்கொண்டிருந்த எல்லோரும் நரம்பினொலியைக் கேட்டதும் மெய்ம்மயிர் சிலிர்த்துக் கண்ணீர் வீழ்த்திப் பேச்சவிந்து திரையை நோக்கினர். வீணை வாசிப்பதற்குக் காந்தருவதத்தை ஆயத்தமாயிருப்பதை எல்லோருக்கும் உணர்த்த எண்ணிய வீணாபதி, திரையினின்றும் வெளிவந்து சபையை நோக்கிச் சொல்லலானாள்.

"இசையில் வல்லவர்களே! எமது காந்தருவதத்தை வீணை வாசிப்பாள். அதற்கேற்பக் கண்டப்பாடல் பாடுபவர் வருக; அன்றேல், இவள் கண்டத்தாலே பாடுவதற்கேற்ப வீணை வாசிப்பவர் வருக" என்று கூறி புன்முறுவல் செய்து நின்றாள்.

அம்மொழியைக்கேட்ட யாவரும் வீணாபதியின் உருவத்தைக் கண்டு அதிசயமுற்று அவளையே நோக்கினர்.

"அங்க அமைப்பிற்கேற்ற அழகும், குழலினினிமையைப் போன்ற மொழியும் கொண்ட இவளுக்கு பார்பில் தனமில்லாதது என்ன அதிசயம்! நாம் உயிருடன் இருக்கவேண்டியே பிரமன் இவளுக்குத் தனத்தைப் படைக்க வில்லைபோலும்! காந்தருவதத்தையுடன் வந்திருக்கும் வீணாபதி என்னும் பேடியோ இவள்!" என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர்.

அவர்கள் பேசிக்கொள்வதைக் கேட்டு வீணாபதி நகைத்தாள்: "ஆடவர்களே! உங்கள் ஐயத்தை யான் போக்குகிறேன். பிரமனார் என்னைப் படைத்த பொழுது காலபாசம் போன்று என் கண்களே பார்த்தவருயிரைப் பறித்தலால் இவள் ஆடவர்க்குக் கூற்றமேதான் என்று எண்ணித் தனத்தைப் படைக்காமல் விட்டார்." என்று கூறிச் சிரித்து திரைக்குள் மறைந்தாள். சபையிலுள்ளவர் அதைக் கேட்டு வெட்கி வாய் பேசாதிருந்தனர். வீணாபதியின்வேடிக்கையைக் கண்ட காந்தருவதத்தை அவளைப் பரிகசித்து நகை செய்தாள்.

மகளிர் காந்தருவதத்தைக்கு முன் போடப்பட்டிருந்த உருவுதிரையை அகற்றினர். காந்தருவதத்தை எழுந்து சபையை வணங்கி, தனக்கென அமைத்த ஆசனத்தில் அமர்ந்து வீணையை வாசித்து அதற்கேற்பப் பாடினாள். அவள் பாடலைக் கேட்டு ஆடவர் மனமுருகினர். கின்னர மிதுனங்களென்ற இசைக் குருகும் பறவைகள் மண்டபத்தே வந்து தங்கின. உடனே அரசர்களில் பலர் காந்தருவதத்தை முன்சென்று உட்கார்ந்து வீணை வாசித்துப் பாடினர். அவர்கள் பாடலைக்கேட்ட கின்னர மிதுனங்கள் வெளியே பறந்து சென்றன. அவர்கள் காந்தருவதத்தைக்குத் தோற்று எழுந்து சென்றனர். அவ்வாறே அந்தணரும், வணிகரும் காந்தருவதத்தையின் இசைப்போருக்குத் தோற்று வருந்திச் சென்றனர். இவ்வாறு யாவரும் தோற்றுவிடவே கட்டியங்காரன் மிகக் கோபம் கொண்டான்.

"இனி இவளை இசையில் வெல்பவன் காமனையன்றி இப் பூமியில் எவனும் இல்லை; ஆதலால் இசைப்போர் நாளையோடு ஒழிவதாக" என்று கூறி வெறுத்துச் சென்றான். இவ்விதம் ஆறு நாட்கள் இசைப்போர் நடந்தும் வெற்றி பெற்றவர் எவரும் இலர் என்று சீதத்தன் மனம் வருந்தியிருந்தான்.

காந்தருவதத்தையின் இசைப்போரினைப்பற்றி நன்றாக அறிந்திருந்த சீவகன் அன்று நடந்த நிகழ்ச்சியை அறிந்து, தன் நண்பன் புத்திசேனனைப்பார்த்து, "புத்திசேனா! நான் இசைப்போருக்குச் சென்று வருவதைக் கந்துக்கடனுக்கு அறிவித்துவா; ஆனால் கன்னியிடத்து விருப்பத்தால் செல்லவில்லை. அவளை வென்று என் இசைக் கல்வி வெளிப்படுத்தற்குச் செல்வதாகக் கூறுவாயாக" என்று அனுப்பினான். உடனே புத்திசேனன் அவ்வாறே கந்துக்கடனிடம் சென்று சொன்னான்.

கந்துக்கடன் அதைக்கேட்டுச் சிறிது ஆலோசித்தான்.

"புத்திசேனா! சீவகன் இசையில் வல்லவனாதலின் வெற்றி பெறுவான். ஆனால் கட்டியங்காரனுக்கு அவனிடத்து இன்னும் பொறாமை வளர்ச்சியுறும். அதற்காக மனம் வருந்துகிறேன், அதனால்......" என்று கந்துக்கடன் கூறுமளவில் அவனுக்கு அறிமுகமான நாகமாலையென்பவளின் தோழி ஒருத்தி அங்கு வந்து தன் கூந்தலில் செருகியிருந்த குவளைப்பூ ஒன்றைத் தந்தாள்.

கந்துக்கடன் அப்பூவை வாங்கிப் பிரித்துத் தனக்கு ரகசியங்களைத் தெரிவிக்கும் நாகமாலை யென்பவள் அப்பூ இதழில் எழுதிய வார்த்தைகளைப் படித்தான்

"கட்டியங்காரன் என்னிடம் ஒன்று கூறினான். அது சீவகனைக் கொலை புரியும் சூழ்ச்சி. ஆதலால் நம்பியை நகரினின்றும் போக்கிப் பாதுகாப்பான இடத்தில் வைக்க" என்று அதில் எழுதியிருந்தது. அதைப் படித்தபின் அங்கு நின்ற தோழி அவர்களை நோக்கிக் கூறலானாள்.

"ஐயன்மீர்! யான் கூறுவதையும் கேட்டருளுக! முன்பு அனங்கமாலை என்னும் மங்கை நாட்டியமாடினாள். அதற்குக் கட்டியங்காரன் வந்திருந்தான். சீவகனும் வந்திருந்தான்: பலர் வேண்டுகோளின்படிச் சீவகன் அனங்கமாலைக்கு அலங்காரம் செய்ததால், அனங்கமாலை சீவகனழகைக்கண்டு காதல் கொண்டாள், அவள் நடித்த போது தான் சீவகனிடம் காதல் கொண்டுள்ளதைக் குறிப்பித்தாள். அதையறிந்த கட்டியங்காரன் அவள் மீது தான் காதல் கொண்டுள்ளமையால் சீவகனிடம் கோபம் கொண்டான். உடனே அம்மங்கையைக் கட்டியங்காரன் வலிதிற் தூக்கிச் சென்று தன் அரண்மனையில் அவளைக்கற்பழித்தான். அனங்கமாலை பலர் முன்பாகத் தான் சீவகனைக் காதலிப்பதாக முறையிட்டாள். கட்டியங்காரன் சீவகனை இகழ்ந்து கூறித் தன் அமைச்சர் பலரையும் நோக்கி "சீவகனே இந்நகருக்குத் தலைவன்!" என்று பரிகசித்தான். சீவகன் பிறப்பையறியாத மந்திரியர் அவனிடத்து உள்ள அன்பால் புகழ்ந்து பேசினர். அது பொறாத கட்டியங்காரன் சீவகனை அன்றுமுதல் கொலை செய்ய சமயம் பார்த்திருக்கிறான்" என்று மொழிந்தாள்.

கந்துக்கடன் அவளை நோக்கி "இன்னும் ரகசியம் உண்டேல் அறிந்து வா" என்று அவளுக்குப் பரிசளித்து அனுப்பினான்.

பின்னர் புத்திசேனனை நோக்கி, "வீர! இங்கு நிகழ்ந்த யாவற்றையும் சீவகனுக்குக் கூறிச் சேனையுடன் செல்லும்படிச்சொல்; நீயும் தோழரும் உடன் செல்லுங்கள்" என்று மொழிந்து சென்றான். புத்திசேனன் சீவகன் இருக்குமிடம் நோக்கிச்சென்றான்.

அடுத்தவாரம்—

காந்தருவதத்தையின் மணம்

விதியின் சதி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும்போது மனமில்லாமல் மற்ருெருவனை 'நாதா' என்றழைத்து நடிக்கும்போது, உண்மையாகவே அவளுக்கு அது வெருப்பாயிருந்தமையால், தன் துக்கத்தையும், வெறுப்பையும், நன்ருய் வெளிப்படுத்தி அற்புதமாய் நடித்தாள். கொட்டகையே அதிர்ந்து விடும்போல் கைகொட்டி ஆர்ப்பரித்தனர் ஜனங்கள். அவள் ஜனங்களை தன் சோகம் நிறைந்த கண்களால் ஒரு முறை நோக்கினுள், எல்லோரும் கண்களாலேயே அவளை ஏற்றுக்கொண்டு புன்முறுவலால் அவளுக்கு உற்சாக மூட்டினுர்கள்.

மன்மதனை ஒரு கண்ணுல் ஈசன் பார்த்த போதே அவன் இருந்த இடம் சாம்பலாயிற்று. ஆனல் கணக்கற்ற இரு கண்கள் தன்னை கபளீகரம் செய்வதைப் போல் பார்க்கவே நாணத்துடன் தலை கவிழ்ந்தாள். அவள் உள்ளம் குமுறிற்று. அதில் அர்த்தமற்ற வேதனை. அவ் வேதனையை சகிக்கக்கூடிய சக்தி அவளுக்கில்லை. கண்ணீர் சோர அவ்விடத்தை விட்டகின்ருள்.

* * * *

சுந்தரேசன் தன்மனைவி உள்ளம் கொள்ளைக் கொள்வதைப்போல் நடிப்பதைப் பார்த்து வியந்து மயங்கினுன். ஜனங்கள் அவளை பார்க்கும் பார்வைக்கு பொருமை கொண்டான். தனக்குச் சொந்தமான பொருளை அவர்கள் அப்படி திருப்தியடங்காமல் பார்ப்பதைப் பார்த்து திகைத்தான். தான் வற்புறுத்திய அன்று அவள் சொன்னது அவன் காதில் ஒலித்தது. 'இது நல்லதற்கல்ல. விதியின் சதி!'

ஹா! என்மேல் உண்மை அன்புடையவர்கள், இவர்கள் இப்படி இருப்பார்களென்று அறியாமற் போனேனே! இனி என்னுடன் கூட மாலினியை அழைத்து வரமாட்டேன் எவ்வளவோ சொல்லியும் நடிபபதற்கு இஷ்டமில்லாதவள் போல் இருந்து இத்தனை பேரை இன்று மயக்கினுளே! இதுவும் ஒரு பெண்மையின் தன்மையா? அல்லது பெண்மையின் வெற்றியா" என்று நினைத்து எழுந்து மேடைமேல் தடதடவென்ருேடினுன், இவன் மனுேபாவத்தை அறிந்த மாலினி காதலின் வெறுப்பு. காதலர்களின் கண்ணுேக்கம் எல்லாம் ஒன்று சேர மனம் முறிந்து, மனம் பதைக்க இருளில் மறைந்தாள். மறுநாள் காலை மாலினியின் மேல் புகழுரைகள் பத்திரிகைகளில் வெளிவரும்போது அவன் வீட்டில் சோகக்கடலிலாழ்ந்து "விதியின் சதியில்" வீழ்ந்து விம்மிக்கொண்டிருக்கிருன் சுந்தரேசன்.

விஜயனின் காதலி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு தன் அண்ணுவின் பக்கம் பார்த்து "அண்ணு! நீங்கள் கோபிப்பது முற்றிலும் அநியாயம்! இந்த விஷயத்தில் வாக்களத்து அதை மாற்ற சமயம் வந்தால் அது ஒரு விஷயமல்ல! விவாகம் என்பது குழந்தைகளின் விளையாட்டன்று! ஸிதாம சுசீமை சென்று, ஐ. ஸி எஸ். பாஸ் செய்து விட்டு வந்திருக்கிருர். பெரிய மனிதர் அனிதா பார்ப்பதற்கு நன்ருக இருக்கிருள். பி ஏ. பாஸ் செய்திருக்கிருள்—ஆனல் நான? இங்கும் பாஸ் செய்ய முடியவில்லை! சீமையில் ஏழெட்டு வருஷம் இருந்தும் எந்தப் பட்டத்தையும் பெற முடியவில்லை இப்பொழுது மரக்கடையில் மரம் விற்றுக கொண்டிருக்கிறேன். எந்தப் பதவியும் இல்லை. எந்தக்கிதாப்பும் இல்லை! இதில் அனிதா எந்த அநீதியும் இழைக்கவில்லை. அண்ணு!" என்ருன்.

அண்ணு கோபத்துடன் "ஆயிரம் தரமும் அனியாயம்தான்! நீ என்ன சொல்கிருய் உனக்குச் சிறிது கூட வருத்தமில்லையா?" என்ருர்.

"அண்ணு நீங்கள் பெரியவர்! பூஜிக்கத் தகுந்தவர்! நான் தங்களிடம் பொய் சொல்ல மாட்டேன்! தங்கள் பாதங்களைத் தொட்டுச் சொல்கிறேன். எனக்குச் சற்றுக் கூடத் துக்கமில்லை! என் புண்ணியத்தால் அல்ல! யார் செய்த புண்ணியத்தால் தப்பித்தேன் அதுவும் தெரியாது! ஆனல் தப்பித்து விட்டேன் என்றே தெரிகிறது. மன்னி! செல்லுங்கள்! நான் தங்களை அழைத்துச் செல்கிறேன்! அண்ணு வேண்டுமானல் கோபித்துக்கொண்டு வீட்டில் இருக்கட்டும் நாம் இருவரும் செல்வோம் உங்கள் தங்கையின் கல்யாணத்தில் வயிர் நிறையச் சாப்பிட்டு விட்டு வருவோம்!" என்ருன் விஜயன்.

பிரபா அவன் பக்கம் பார்த்து "நீ என்னைக் கேலி செய்கிருயா லாலாஜீ?" என்ருள்.

"இல்லை மன்னி! கேலி செய்யவில்லை! நான் இன்று ஹிருதய பூர்வமாக தங்கள் ஆசியை விரும்புகிறேன்! உங்கள் வரத்தால் பாக்யம் மீண்டும் என் பக்கம் திரும்பட்டும்! ஆனல் இப்பொழுது தாமதம் செய்யாதீர்கள்! நீங்கள் சென்று வேறு உடையணிந்து கொள்ளுங்கள். நான் ஆபீஸ் உடையை மாற்றிவிட்டு வருகிறேன்" என்று சொல்லி வேகமாகச் செல்லப் புறப்பட்டான். இதற்குள் அண்ணு "உனக்கு அழைப்பொன்றும் வரவில்லையே, நீ எப்படி அங்கு செல்வாய?" என்று கேட்டார்.

விஜயன் திகைத்து நின்று விட்டான். "வாஸ்தவம தான்! ஒருக்கால் அவர்களே வெட்கமடைந்திருப்பார்கள்!" ஆனல் அழைக்காமல் அங்கு செல்ல இன்று எனக்கு எந்த சங்கோஜமும் இல்லை ஒடுவோமா! ஓடிப்போய் அனிதாவிடம் அனிதா நீ என்னை ஏமாற்றவில்லை உன்னிடம் எனக்கு கோபம ஒன்றும் கிடையாது! வெறுப்பும் கிடையாது நீ சுகமாக இருக்க வேண்டுமென்பதுதான் என் பிரார்த்தனை!" என்று சொல்லுவோமா என்று கூட மனம் எண்ணுகிறது. அண்ணு என் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளுங்கள்! மன்னியை அழைத்துச் செல்லுங்கள்: எனக்காக மாத்திரமல்ல! இருவரும் அனிதாவை ஆசீர்வாதம் செய்து விட்டு வாருங்கள்?" என்ருன்

அண்ணுவும் மதனியும் ஒன்றும தோன்ருமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்கள், இருவருடைய பார்வையும் விஜயனின் முகத்தில் வீழ்ந்தன. ஆனல் அவன் முகத்தில் கேலியோ வருத்தமோ துளிக்கூட இல்லை! அவன் குரலில் கோபமோ, கர்வத்தின் சாயையோ லவலேசமும் இல்லை உண்மையில் நிச்சயமான ஒரு விபத்திலிருந்து தப்பியதால் அவனுடைய மனம் ஆனந்தத்தால் புளகித்துக் கொண்டிருந்தது.

என்ன இருந்தாலும் பிரபாமயி அனிதாவின் சகோதரி! இந்த சங்கேதத்தை அவளால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை? அவமானத்தின் தாக்குதலால் அவள் உள்ளம் கொதிக்கலாயிற்ற அவள் ஏதோ சொல்ல விரும்பினுள்! ஆனல் குரல் தடைபட்டுவிட்டது.

விஜயன் உடனே "மன்னி! உன்னுடைய விஷயங்கள் யாவற்றையும் சொல்ல இப்பொழுது சமயம் வரவில்லை. எப்பொழுதாவது வருமோ வாராதோ அதுவும் தெரியாது ஆனல் ஓர் தினம் வரும். அன்று தினம் நீயே! "லாலாஜீ நீ பாக்யசாலி! உனக்கு நான் ஆசீர்வாதம் செய்கிறேன் என்று சொல்வாய்" என்ருன்.

"சர்மா" மொழி பெயர்த்தது.

சுபம்!

ரத்த பாசம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தைரியப்படுத்த யாரும் இல்லை.

சக்தி ஸிங், இரவு நேரமாகியும் கூடாரத்திற்கு வரவில்லை. அவனுடைய மனைவி மோஹினி அவனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய மனதில் வாழ்க்கையின் ஆசை-நிராசையைபபற்றிய விஷயங்கள் கணத்திற்கொரு முறை தோன்றி மறைந்தன.

மேகம் மேலும் இருண்டது. திடீரென்று சக்தி ஸிங் கூடாரத்தினுள் பிரவேசித்தான. மோஹினி அவனை வெகு சந்தோஷத்துடன் பார்த்தாள்-அவன் உடை பூராவும் ரத்தத்தால் நனைந்திருந்தது.

"ப்ரியே!"

"நாதா!"

"உன் விருப்பம் பூர்த்தியாயிற்று—நான் என் அண்ணனுடன் சேர்ந்து விட்டேன்" என்ருன் சக்தி ஸிங்.

இது போல்தான் நான் என் சருமத்தைக் காப்பாற்றிக்கொள்கிறேன்



LTS. 63-172 TM.

LEVER BROTHERS (INDIA) LIMITED

அமெரிக்காவில இந்திய ஸர்க்காரின் ஏஜண்ட்-ஜனரலாக இருக்கும் ஸர் கிரிஜா சங்கர் பாஜ்பைக்கு மெட்ரோ-கோல்ட்வின் மேயர் கம்பெனியார் அளித்த விருந்தில், ஸர் பாஜ்பை மிஸ்டர் ஸாம் கோல்ட்வினுடன் சம்பாஷிக்கிருர்.

சித்திரமும் சிருங்காரமும்

இந்தியா ஏஜண்ட்-ஜனரல்.

அமெரிக்காவில் இந்தியாவின் ஏஜண்ட்-ஜெனரலாக இருக்கும் ஸர் கிரிஜா சங்கர் பாஜ்பைக்கு மெட்ரோ—கோல்ட்வின் மேயர் ஸ்டூடியோவில் ஒரு விருந்து நடத்தப்பட்டது. அச்சமயம் சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருந்த பல பிரபலஸ்தர்கள் வந்திருந்தனர். தமக்கு அளிக்கப்பட்ட உபசாரத்திற்குப் பதில் கூறுகையில் ஸர் பாஜ்பை, இந்தியா மீது எதிரி படையெடுக்க நேர்ந்தால் இந்தியா ஒருமித்து எதிர்க்கும் என்று தெரிவித்தார்.

"இந்தியர்களாகிய நாங்களும் க்ரேட் பிரிட்டன், யுனைடட் ஸ்டேட்ஸ், ஆஸ்திரேலியா, கானடா தேசத்து மக்கள்போலவே இந்த யுத்தத்தில் அதிக சிரத்தை கொண்டிருப்பதுடன் மற்ற தேசத்தார் போலவே உணர்ச்சியுடனும் இருக்கிருேம். ஏற்கெனவே 13 லக்ஷம் பேர்களை சேனைக்குத் திரட்டியாகிவிட்டது. 'ஜப்பானியரை எதிர்க்கத் தாங்களாகவே அநேகர் ராணுவத்தில் சேர்ந்து கொண்டிருக்கின்றனர். இப்போது நாம் ஈடுபட்டிருக்கும் இந்த பொதுவான யுத்தத்தில் இந்தியா முழுமனதுடன் உதவும் என்பது நிச்சயம்."

இந்த விருந்துக்கு நாற்பது பிரபலஸ்தர்கள் வந்திருந்தனர். மோஷன் பிக்சர்ஸ் புரொட்யூஸர்ஸ் அஸோஸியேஷன் தலைவர் மிஸ்டர் ப்ராங்க் ப்ரீமன் தலைமை வகித்தார். மெட்ரோ கோல்ட்வின் மேயர் கம்பெனி உப தலைவர் மிஸ்டர் ஆல் லிக்ட்மன் அதிதியை வரவேற்று சில வார்த்தைகள் பேசினுர்.

ஸர் ஸிட்ரிக் ஹார்ட்விக், லாஸ் ஆஞ்ஜிலாஸ் வைஸ்கான்ஸல் மிஸ்டா கில்ட்பர்ட் ஹாலிடே, பிரிட்டிஷ் யுத்த ஆலோசகர் போர்ட் தலைவர் கர்னல் ப்ராங்க் ஹாட்ஸால், மிஸ்டர் ஹாரி கோஹன், மிஸ்டர் டேவிட் ஸெல்ஸ்னிக், ஸர் அலக்ஸாண்டர் கோர்டா, மிஸ்டர் எட்வர்ட் ஆர்னுல்ட், நடிகர்களான ஆலன் மோப்ரே. ஹெர்பர்ட் மார்ஷல், ரெஜினுல்ட் கார்டனர், மிஸ்டர் ஸாமுவெல் கோல்ட்வின் முதலியோர் பிரஸன்னமாயிருந்தனர்.

இளம் நடிகர்

20ம் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனியாரின் "என்பள்ளத்தாக்கு எவ்வளவு பசுமை" என்ற படத்தில் சிறப்புடன் நடித்த ரெடி மக்டவல் என்ற இளம் நடிகர்.

குட்டிக் கதை

தன்னையும் மறந்தாள்!

★ "ரேவதி" எழுதியது

* * * சகுந்தலா திவான் பரமசிவய்யருக்கு வயது காலத்தில் பிறந்த ஒரே குழந்தை. அவள் பிறந்த தினத்திலிருந்து, வீட்டில் யாருக்குமே "நான்" என்ற சிந்தனையே இல்லாமல் இருந்தது. என்ன காரியமாக இருந்தாலும், சகுந்தலாவைக் கவனித்த பிறகுதான் எல்லாம் அவள், அளவிலாத செல்வத்திற்கும், அளவு மீறிய செல்லத்திற்கும் பாத்திரமானுள்.

வயது ஆக.ஆக, அவளது பிடிவாத குணமும், சுய நலக்கொள்கையும் அதிகரித்துக்கொண்டே வந்தன. அவள் நினைத்தது, நினைத்தபடி நடக்காவிட்டால், அன்று வீடு இரண்டு படும். அவள் நினைப்பதெல்லாம். தன்னைப்பற்றியேதான். தான் நினைத்ததை எல்லாம், பிறர் இடமிருந்து எதிர் பார்த்தது போல், அவர்களுக்குத்தானும் கடமைப்பட்டவள் என்ற உண்மையை அவள் அறிந்து கொள்ளவே இல்லை. பிறருக்காக, அவள் தானுக அறிந்து, சுண்டு விரலைக் அசைத்தது கிடையாது

சகுந்தலாவிற்கு அவள் ஸ்திதிக்கு ஏற்றபடி, பெரிய இடத்தில் விவாகம் நடைபெற்றது. தன்னைப் பெருமைப் படுத்தி, நாலு பேர் தன்னைப் பார்த்துப் பொருமைப்படும் ஒரு சம்பவமாகவே, கலியாணத்தைக் கருதினுள் சகுந்தலா. இனி, தான் பிறருக்குக் கடமைப் பட்டவள், பல முக்கிய விஷயங்களுக்குப் பொருப்பாளி, என்ற எண்ணமே அவள் மனதில் தோன்ற வில்லை.

புக்ககம் சென்று, ஒரு வருஷம் ஆகியும், அவள் தன்தோள் தாண்டவத்தைக் கொஞ்சமும் குறைத்த பாடில்லை. கணவன் ஆபீஸிலிருந்து வர நேரமானுல் என்ன? அவன் களைத்து வந்தால் என்ன? தான் கிளப்புக்கு நாழி கழித்துச் சென்ருல், பங்தாட்டம் போய் விடுமே? அவள் கணவனும், தன்னுல் முடிந்தவரையில் அவளைத் திருத்த எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தான். அவள் பிடிவாதமும் முன் கோபமும், அதிகரித்தனவே தவிர, வேறு ஒரு பிரயோசனத்தையும் காணுேம்!

சில நாட்களாகவே. சகுந்தலா, ஒரு காரணமும் இல்லாமல் எல்லார் பேரிலும் எரிந்து விழுந்தாள். தனக்கு ஏற்பட்ட தலை வலியை நினைத்துத் தன்னைத் தானே பரிதவித்துக் கொண்டாள். தனக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்பதை அறிந்ததும் அவள் ஆச்சரியம் அடைந்தாள்!

"என் சிநேகிதி மாலினி, போன வருஷம் பிரசவித்துத் தானே இறந்து போனுள்? இந்தக் குழந்தையும் என்னைக் கொன்று விடுமோ?" என்று நினைத்து ஏங்குவாள். "ஒரு மாசம் வெளியே போகாமல் எப்படி வீட்டில் அடைந்து கிடப்பது? ஒன்றுமே தெரியாத அந்தக் குழந்தையை, யார் எடுத்து வளர்த்து ஏற்றபடி சிச்ருஷை செய்ய முடியும்?" என்று மயங்குவாள். இப்படிக் குழந்தை பிறப்பதற்குள் அவள் தன் நினைவினுலேயே மெலிந்து துரும்பானுள்.

பாவம்! ரொம்பவும் கஷ்டப்பட்டு விட்டாள்! மயக்க மருந்து தெளிந்து அவள் விழிக்கும் சமயத்தில் கவலை தோய்ந்த முகத்துடன் அவள் கணவன் அருகே வந்தான். சகுந்தலா, கண்ணை விழித்துத் திரும்பிப் பார்த்தாள். அவள் தேகம் சிலிர்த்தது: அவள் முகம் கோடி சூரியப் பிரகாசத்துடன் ஜொலித்தது. அந்தக் குழந்தை அவளைப் பார்த்துச் சிரித்ததாக எண்ணிப் பூரித்தாள். தன் கணவனின் கரங்களை அவள் அன்புடன் பற்றிக் கொண்டாள்.



சென்னை டி. எல். ஓ. ஆபீஸ் மானேஜர் ஸ்ரீ டி. எல். என். கோபாலஸ்வாமி அய்யங்கார் குமாரத்தி மிஸ் ஜயலக்ஷ்மிக்கும், ஸ்ரீரங்கம் ரிடயர்ட் சப்-ஜட்ஜ் ஸ்ரீ பி. பார்த்தசாரதி அய்யங்கார் குமாரன் ஸ்ரீ பி. எஸ். ராஜனுக்கும், 15-7-42உ தியாகராய நகரில் விவாகம நடைபெற்றது.

ரிடையர்டு ஹௌஸ் ஹெட் அஸிஸ்டண்ட் திருச்சி ஸ்ரீ டி. ஆர். சுந்தரேச அய்யரின் பௌத்திரன் ஸ்ரீ கி. ராமதுரைக்கும், சென்னை ராவ் பகதூர் ஸ்ரீ எ. ரங்கசாமி அய்யரின் பௌத்திரி சௌ. பங்கஜத்திற்கும் சமீபத்தில் பழூரில் சிறப்பாக விவாகம் நடைபெற்றது.

சென்றவார நிகழ்ச்சிகள்

மஹாத்மாஜியின் பதில்

"இந்திய பொதுஜன போராட்டம்பற்றிக் காரியக் கமிட்டி செய்துள்ள தீர்மானத்தின் பேரில் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் ஆத்திரப்பட்ட அபிப்பிராயங்கள் கிளம்புகின்றன. மறை பொருளாகவும், நேரடியாகவும் வெளியாகும் இந்தப் பயமுறுத்தல்களால் காங்கிரஸ் பயந்து தன் லக்ஷியத்திலிருந்து நழுவி விடாது. எதிர்ப்பு. அடக்குமுறை இவற்றினாலேயே காங்கிரஸ் வளர்ந்து பலம் பெற்றிருக்கிறது. இப்போதும் அப்படித்தான் நடக்கப் போகிறது" என்பதாக "ஹரிஜனி"ல் காந்திஜி எழுதியிருக்கிறார்.

* * * *

"அபூர்வமானது"

"மகாத்மா காந்தியின் கடைசிப் போராட்டம் வெகு துரிதமாக நடந்து, ஒரே வாரத்துக்குள் முடிந்துவிடும்" என்று தேசிய மாணவர் சங்கத்தை ஆரம்பித்து வைக்கையில் ஸர்தார் வல்லபாய் படேல் தெரிவித்தார்.

"அடுத்து வரும் போராட்டம் ரொம்ப அபூர்வமானதாக இருக்கும். இதுவரை யாரும் கண்டிராத வகையில் அப்போராட்டம் நடக்கும். இந்தியர் யாரும் அதில் சேராமல் ஒதுங்கி நிற்க மாட்டார்கள். மாணவர்கள் படிப்பை விட்டுவிட்டு அதில் கலந்துகொள்வர்" என்றும் ஸர்தார் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

இந்திய மாணவர்களிடையே பிளவுகள் இருக்கின்றன. ஆனல் அவற்றை ஒன்றுபடுத்த வேண்டும். இந்தியரிடையே பிரிவினை உண்டுபண்ண மூன்றும் பேர் வழிகள் முயலுகின்றனர்; எனினும் தங்கள் வசம் நிர்வாக அதிகாரம் கிடைத்தால். அதை மூஸ்லிம்களுக்கு மாற்றிவிட காங்கிரஸ் தயாராக இருக்கிறது. போராட்டத்தில் இறங்க வேண்டாமென்று காங்கிரஸுக்கு உபதேசிக்க வைஸ்ராய் நிர்வாக சபை மெம்பர்கள் கிளம்பியிருக்கிறார்கள். $2\frac{1}{2}$ வருஷம்தான் காங்கிரஸ் அதிகாரம் வகித்தது. அது தவிர, வேறு எப்பொழுதும் காங்கிரஸ் பதவி ஏற்றதில்லை. அதன் போராட்டங்களால் ஏற்படும் பலனை மற்றவர்களே அநுபவித்து வந்திருக்கிறார்கள்.

ஓர் சிலர் தான் காங்கிரஸை ஆதரிப்பதாக இவர்கள் சொல்லுகின்றனர். பம்பாயில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் முடிந்து மகாத்மா போராட்டத்தை ஆரம்பித்ததும், எத்தனை பேர் காங்கிரஸை ஆதரிக்கின்றனரென்பதும் தெரியும்.

பிரிட்டிஷ் அமெரிக்கப் பத்திரிகைகளிடையே இப்பொழுது மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன் எப்பொழுதும் அவை இவ்வளவு பரபரப்பு காட்டியதில்லை.

யுத்தம்முடியும்வரை பொறுத்திருக்கும்படியும், அப்பொழுது இந்தியாவுக்கு விடுதலை கிடைக்குமென்றும் காங்கிரஸுக்குப் போதிக்கப்படுகிறது. யுத்தம் தீர்ந்ததற்குப் பிறகு இந்தியாவுக்கு விடுதலைகிடைப்பது வாஸ்தவமாயின், யுத்தத்துக்கு முன்னமேயே ஏன் அதற்கு விடுதலை வழங்கியிருக்கக்கூடாது?

போன யுத்தத்தில் கொடுக்கப் பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை. இந்தியா சுணங்காமல் உதவியதற்குப் பதிலாக அதற்கு ரௌலட் சட்டமும், ஜலியன் வாலாபாகும் தான் கிடைத்தன. அநுபவத்தைக் கொண்டு காங்கிரஸ் விவேகம் பெற்றிருக்கிறது. அன்னிய ஆக்ரமிப்பை எதிர்த்து இந்தியாவைக் காக்க அது சுதந்திரம் கோருகிறது. இந்தியா சுதந்திரம் பெற்றால் உலகில் யுத்தமே இராது.

மால்டாவின் தோற்றம்

அநேக தடவைகள் மால்டா எதிரிகளது குண்டு வீச்சுக்கு இரையாகியது. ஆயினும் அங்குள்ள மக்கள் சிறிதாவது மனோ தைரியத்தை இழக்கவில்லை: வழக்கப்படி அவர்கள் தங்களது காரியத்தைக் கவனித்து வருகின்றனர்.

* * * *

ராஜன் பாபு எச்சரிக்கை

"இந்தியாவிலிருந்து வாபஸாகுக" என்ற கோரிக்கைக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் இணங்காவிட்டால் தன்னுடைய அஹிம்ஸா பலம் பூராவையும் உபயோகிக்கக் காங்கிரஸ் செய்துள்ள முடிவைக் கவனிக்கையில், பர்தோலியில் நடந்த வரிகொடா இயக்கம், சமீபத்தில் நடந்த தனிப்பட்டவர் ஸத்யாக்ரஹ இயக்கம் இவையெல்லாம் எம மாத்திரம்?" என்று பாட்னவில் நடந்த பீஹார் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் அவசரக் கூட்டத்தில் பேசுகையில் ராஜன் பாபு கூறினார்

வர்தா தீர்மானத்தின் தத்துவத்தை விளக்குகையில், ராஜன் பாபு "இந்தத் தடவை வெறுமனே ஜெயிலுக்குப் போவதுடன் இயக்கம் நிற்கப் போவதில்லை. போராட்டம் மிகத் தீவிரமாக இருக்கும்; அடக்குமுறையும் ரொம்பக் கடுமையாக இருக்கும்: துப்பாக்கிப் பிரயோகம், குண்டுவீச்சு, சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் — இவையெல்லாம் நடக்கலாம். ஆகவே. இவ்வளவு கஷ்டங்களையும அநுபவிக்க வேண்டியிருக்கும் என்பதைப் பூரணமாக அறிந்துதான் காங்கிரஸ்காரர்கள் இயக்கத்தில் சேரவேண்டும். புதிய நடவடிக்கையில் பூரண அஹிம்ஸா தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட எல்லா ஸத்யாக்ரக முறைகளும் கையாளப்படும். இதுவே இந்திய சுயேச்சைக்கான இறுதிப் போராட்டமாகும். ஸத்யாக்ரஹத்தின் சிறந்த ஆயுதமாகிய அஹிம்ஸையைக் கொண்டு உலகின் ஆயுத பலம் பூராவையும் நாம் எதிர்த்து நிற்கமுடியும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

* * * *

நெருக்கடி தீர

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தீர ஸர் டேஜ் பஹதூர் ஸப்ரூ 7 யோசனைகளை வெளியிட்டு 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகைக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

(1) யுத்தம் முடிந்து ஒரு வருஷத்திற்குள் இந்தியாவுக்குப் பூரண சுய ஆட்சி அளிப்பதாகப் பிரிட்டிஷ் ஸர்க்கார் வியக்தமாக அறிவிக்க வேண்டும்.

(2) அதுவரையில் கொள்கை சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் வைஸ்ராய் தமது சபையினரின் ஏகோபித்த யோசனைப் பிரகாரமே நடக்க வேண்டுமென்று அறிவிக்க வேண்டும்.

(3) நிர்வாக சபையைச் சேர்ந்த உள்நாட்டிலாகாவையும், பொக்கிஷ இலாகாவையும் இந்தியர்வசம் ஒப்புவிக்கவேண்டும்.

(4) மாகாணங்களில் உத்தியோகப்பற்றுள்ள ஆலோசகர்களுக்குப் பதிலாக கூட்டு ஸர்க்கார்களை ஏற்படுத்த வேண்டும்.

(5) சட்ட மறுப்பு ஆரம்பிக்கும் யோசனையைத் திட்டமாக விட்டு விட்டு, விரோதியை எதிர்க்க நாட்டை ஒன்று திரட்ட வேண்டும்.

(6) காந்திஜி, ஜனப் ஜின்னா, ஸ்ரீ ஸவர்க்கார் இவர்களும், இதர கட்சிகளின் தலைவர்களும் (அ) யுத்த காலத்துக்கு சமரஸ ஏற்பாடடைச் செய்வது பற்றியும் (ஆ) எதிர்கால அரசியலை வகுக்கக் கமிட்டி நியமிப்பது குறித்தும் விவாதிக்க ஒரு மகாநாட்டைக் கூட்ட வேண்டும்,

(7) இத்தகைய மகாநாட்டைக் கூட்டுவோருக்கு இந்திய சர்க்கார் தீவிரமாக உதவ வேண்டும். இவையே ஸர் ஸப்ரூ வெளியிட்டுள்ள யோசனைகள்.

* * * *

அதிபதிகளுக்கு எச்சரிக்கை

"ஹரிஜன்" மூலம் சமஸ்தானதிபதிகளுக்கு காந்திஜீ ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார். காலப்போக்கை அனுசரித்து அவர்கள் நீந்து கொள்ள வேண்டுமென்றும் இப்போது அநுபவித்து வரும் ஏதேச்சாதிகாரத்தை விட்டொழிக்க வேண்டுமென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஒட்டிக்கொண்டிருப்பதில் லாபமில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

* * * *

இந்த இதழில் இருப்பவை

★

கபட நாடகம்	(ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்)
இசைப் போர்	(சீவக சிந்தாமணிக் கதை)
விதியின் சதி	(சிறு கதை)
ரத்த பாசம்	(விநோத சங்கர்—ஹிந்திக் கதை
விஜயனின் காதலி	(நமது தொடர் கதை)
புதையல் வேட்டை	('நியாயவாதி')
மூட்டு நோய்	(வைத்யரத்ன எம் துரைசாமி ஐயங்கார்)
ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனம்	(சங்கீதப் பகுதி)
தன்னையும் மறந்தாள்	('ரேவதி'-குட்டிக் கதை)
பண்டைக்காலப் போர் முறை	(தி. நா. சுப்ரமணியம்)

ஐரோப்பியச் செய்திகள்

இந்தியா மந்திரி எச்சரிக்கை

இந்தியாவில் ஒரு பொதுஜன இயக்கத்தை ஆரம்பிக்கப்போவதாக காங்கிரஸ் காரியக்கமிட்டி கூறியிருப்பது சம்பந்தமாக, பிரிட்டிஷ் ஸர்க்காரின் மனப்பான்மை என்னவென்பது பற்றி இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி காமன்ஸில் தெளிவாக எடுத்துக் கூறினார்.

"இந்தியா பூர்ண சுயேச்சையை அடைவதற்கு அதற்கு முழு வசதியைக் கொடுக்க தாங்கள் தீர்மானித்திருப்பதை பிரிட்டிஷ் சர்க்கார் இப்பொழுதும் ஊர்ஜிதம் செய்கிறது. ஆனால் நிலைமையைச் சமாளிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் இந்திய சர்க்கார் தங்களது கடமையில் பின் வாங்க மாட்டார்களென்று, காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கொள்கையை ஆதரிக்கும் எல்லோருக்கும் பிரிட்டிஷ் சர்க்கார் எச்சரிக்கை செய்கிறது" என்று அவர் கூறினார்.

* * * *

ஸ்டாலின் உத்தரவு

ஒவ்வொரு ஸோல்ஜரும் உத்தியோகஸ்தரும் வெற்றி கிடைக்கும் வரையில் நின்று போராட வேண்டுமென்றும் அல்லது சாகத் துணியவேண்டுமென்றும் உணர்ச்சி ததும்பும் உத்தரவொன்றில் ஸ்டாலின் கூறியுள்ளார். 'ரெட் ஸ்டார்' என்னும் ராணுவப்பத்திரிகையில் இவ்வுத்தரவு வெளியிடப்பட்டிருக்கிறது. அது மேலும் கூறுவதாவது:—ஒரு அடி கூடப் பின்வாங்கக்கூடாது. நமது பாதுகாப்பு அதிகாரியும் ராணுவத் தலைவருமான தோழர் ஸ்டாலினின் கோரிக்கை இத்தகையது. இதை நிறைவேற்றி வைத்தால் வெறுக்கப்படும் விரோதிகள் நமது நாட்டை அழிக்காமல் அதைக் காப்பாற்றலாம், வெற்றிக்கான உத்தரவாதமும் நிச்சயம்.

* * * *

நாஜி முன்னேற்றம்

ரஷ்யாவில் டான் நதிக்கரைகளில் நதி முகத்வாரத்திலுள்ள ராஸ்டாவிலிருந்து கிழக்கே 300 மைலுள்ள கலாச் வரை உக்ரமான போர் நடந்து வருகிறது. நதி வழியாக அடித்துக்கொண்டு முன்னேறிச் செலவதற்கு ஜெர்மனியர் இப்பொழுது மூன்று பெரிய முயற்சிகளைச் செய்து கொண்டு வருகின்றனர்.

மேற்கே அவர்கள் ஏற்கனவே ராஸ்டாவையும் நோவோசெர்காஸ்கையும் பிடித்துக்கொண்டு விட்டனர். டான் நதியையும் கடந்து படெய்ஸ்கின் துறைமுகமான அஸாவையும் கைப்பற்றி விட்டதாக அவர்கள் கூறுகின்றனர்.

ராஸ்டாவுக்குக் கிழக்கே டான் நதியிலுள்ள ஒரு பால முனையை விஸ்தரித்துவிட்டதாக ஜெர்மன் ராணுவத் தலைவர்கள் கூறுகிறார்கள்.

* * * *

கெய்ரோவில் குண்டு வீச்சு

சென்ற மாதம் 30-ந் தேதி காலை கெய்ரோப் பிரதேசத்தில் குண்டு வீசப்பட்ட தென்றும், ஒருவர் கொல்லப்பட்டாரென்றும் பொருட் சேதம் மிகச் சொற்பமென்றும் ஓரறிக்கை கூறுகிறது.

சூயஸ் கால்வாய் பிரதேசத்திலும், அபாய எச்சரிக்கைகள் செய்யப்பட்டன.

"எல் அலமின் படை நிலையங்களில் இருதரப்பினரும் தங்களது படைகளை ஒன்று திரட்டுகின்றனர், வட பகுதியில் ஜெர்மனியர் சுரங்க வெடிகளை விதைத்து வருகின்றனர்" என்று ராய்ட்டர் விசேஷ நிருபர் கூறுகிறார். ருவேஸாத் மேட்டுக்கு மேற்கே பிரிட்டிஷ் பீரங்கிகள் மும்முரமாக விருக்கின்றன.

* * *

ஜப்பான் முஸ்தீப்பு

ஜப்பான் கூடிய விரைவில் ரஷ்யாவைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது என்று சங்கிங்கிலுள்ள சீன ராணுவ நிபுணர்கள் கருதுகிறார்கள். ஜப்பான் சீனவை பெருவாரியாகத் தாக்க ஏற்பாடுகளைச் செய்யாததே இந்த நம்பிக்கை வலுப்படுவதற்குக் காரணம். ஸோவியத்-மஞ்சூரியா எல்லையைச் சுற்றி ஆகஸ்ட் மாதம் 16-ந்தேதி வாக்கில் யுத்தம் ஆரம்பித்துவிடுமென்று கூட மேற்படி நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

வடக்கே மஞ்சூரிய எல்லையை நோக்கி ஜப்பானியப் படைகளும் சப்ளைகளும் அனுப்பப்படுகின்றன வென்று மென்மேலும் தகவல்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

சீனவின் பல்வேறு முனைகளிலிருந்து வந்த செய்திகளிலிருந்து அவ்விடங்களில் பொதுவாக போர் நடவடிக்கைகள் நின்று விட்டனவென்று தெரிகிறது.

செகியாங்-கியாங்ஸி மாகாணங்களில் ஜப்பானியரின் தாக்குதல்கள் முடிவடையும் கட்டத்தை அடைந்து விட்டதென இப்போது திட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானியர் மேற்கொண்டு தாக்கவில்லை. சில எதிரிப் படைகள் யாங்ட்ஸிக்கு வடக்கே வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன,



ஆனி மாதம் 31-ம் தேதி ஸ்ரீ சேஷாசலய்யர் குமாரன் சி. சுப்பிரமணியனுக்கும், ஸ்ரீ வெங்கடராமய்யர் (W A A. Office, Golden Rock) குமாரத்தி சௌ. பத்மாவதிக்கும், ஆரணியில் சிறப்பாக விவாகம் நடைபெற்றது.

நீதிக் கதை

கூலியில்லை

★

எ. எஸ். பி. அய்யர்
ஐ. ஸி. எஸ்.

வயிற்றை அறுத்து பெரிய ரண சிகிச்சை செய்து வியாதியைக் குணப்படுத்துவதாக ஒப்புக்கொண்டு பிஜுர் என்னும் வைத்தியர் ஆயிரம் ரூபாய்களைக் கேட்டார். நோயாளியும் கொடுப்பதாக ஒப்புக் கொண்டான். பிஜுர் அதிக ஜாக்கிரதையுடன் வயிற்றைக் கிழித்து ரண சிகிச்சை செய்து, மறுபடியும தைத்து விட்டார். அவசரத்தில் வயிற்றிற்குள்ளே தான் வைத்திருந்த கத்திரியை எடுக்க மறந்து போய்விட்டார். மறுநாள் வியாதி அதிகரித்து நோயாளி இறந்து போன பிறகு தான் அவருக்கு தான் செய்தது பிசகென்று தெரிந்தது. தான் செய்த குற்றத்தை அவர் ஒருவரிடமும் சொல்லவில்லை. சொன்னல் தன் வரும்படி குறைந்துபோய்விடுமென்பதை அவர் நன்ருக அறிந்திருந்தார். ஆனல் அவ்விஷயத்தை அப்புவிடம் மாத்திரம் சொல்லி இரகசியமாக வைத்துக்கொள்ளும்படி எச்சரிக்கை செய்திருந்தார். அவர்மீது ஒருவரும் சந்தேகம் கொள்ளவில்லை. நோயாளியின் சவம் சுடுகாட்டிற்குக் கொண்டு போகப்பட்டு தகனம் செய்யப் பட்டது. ரண சிகிச்சை செய்ததற்கு தனக்குச் சேரவேண்டிய கூலியை வைத்தியர் வேண்டாமென்று சொல்லிவிட்டார். வைத்தியருடைய உதார குணத்தைக் குறித்து ஜனங்களும், நோயாளியின் சுற்றத்தாரும் புகழ்ந்து பேசினர் எங்கு பார்த்தாலும் வைத்தியர் நோயாளிகளைக் கவனித்து சிகிச்சை செய்யும் விதத்தையும் நோயாளி இறந்து போன பிறகு தனக்குச் சேரவேண்டிய கூலியைப் பெற மறுத்த விஷயத்தையும் பற்றி ஜனங்கள் பேசிக்கொண்டனர்: ஒரு நாள் இறந்துபோன நோயாளியின் தாயார், அப்புவிடம் வைத்தியரின் பெருந் தன்மையைப் பாராட்டிப் பேசினாள். 'ஆம், அவர் பெரிய மனிதர். தங்களுடைய மகன் விஷயத்தில் அவர் கூலியே வாங்கிக்கொள்ளவில்லை. அது மட்டுமா அவர் தங்களுடைய மகனிடம் கொடுத்ததைக் கூடத் திரும்பி எடுத்துக்கொள்ளவில்லை' என்று அப்பு சொன்னன். 'அப்படியா, அது எனக்குத் தெரியாதே. அவர் என் மகனுக்கு என்ன கொடுத்தார்' என்று இறந்து போன நோயாளியின் தாயார் கேட்டாள். 'நான் அதைக் குறித்து தங்களிடம் சொல்ல முடியாததைக் குறித்து விசனிக்கிறேன், அதை இரகசியமாக வைத்துக்கொள்ளும்படி அவர் என்னிடம் கண்டிப்பாகக் கூறியிருக்கிறார்' என்ருன் அப்பு. அதைக்கேட்டு அவள் அதிக சந்தோஷத்துடன் பின் வருமாறு சொன்னள்: 'என்ன தயாள குணம்; என்ன பெருந்தன்மை; சுயநலம் என்பதே அந்த பெரிய வைத்தியருக்குக் கிடையாது'.

குழந்தை காப்பாற்றப்பட்டது

கல்யாண் என்னுமிடத்திற்கு பிஜுர் என்னும் வைத்தியரும் அவருடைய மனைவியும் விடுமுறை நாட்களைக் கழிக்கச் சென்றிருந்தனர். பிஜுரின் மனைவியோ மிக்க இளம்பிராயத்துப் பெண்ணுயிருந்தாள். அவளுக்கு ஆறுமாதம் நிரம்பிய ஒரு குழந்தை இருந்தது.

ஒரு நாள் வெளியே சென்று உலாவி விட்டு வீட்டிற்குத் திரும்பியதும், பிஜுரின் மனைவி தொட்டிலுக்கருகில் ஒரு பெரிய சர்ப்பம் இருப்பதைக்கண்டு பயந்து நடுங்கினுள். தொட்டிலருகில் சென்ருல், பயத்தினல் சர்ப்பம் தொட்டிலிலிருக்கும் குழந்தையைக் கடித்து விடுமோ வென்று அவள் எண்ணினுள். என்ன செய்வதென்று தோன்ருமல் அவள் திகைத்துப்போனுள். அப்புவின் மனதில் ஒரு எண்ணம் உதித்தது. ஒரு கிண்ணத்தில் பாலை எடுத்துக் கொண்டு போய், சர்ப்பத்திற்குத் தெரியும்படி—தொட்டிலுக்கு எதிர்ப்புறத்திலிருந்த ஒரு ஜன்னலின் மீது அப்பு வைத்து விட்டான். சர்ப்பம் நேராகச்சென்று பாலைக்குடிக்கத்தொடங்கிற்று. அப்பு ஓடோடியும்சென்று தொட்டிலிலிருந்த குழந்தையை எடுத்து, பிஜுரின் மனைவியிடம் கொடுத்துவிட்டான். அவன் செய்த பெரிய உபகாரத்திற்காக பிஜுர் அவனுக்கு ஆயிரம் ரூபாய்கள் வெகுமதியாகக் கொடுத்தார். அப்பு வேண்டாமென்று சொல்லியும் வைத்தியர் கேட்டவேயில்லை. 'நான் செய்யும் ரணசிகிச்சையைப் போலவே, நீ அதிக தைரியத்துடன் என் குழந்தையைக் காப்பாற்றியிருக்கிருய். உனக்கு ஒரு ஆயிரம் ரூபாய்களையாவது கொடுக்காமற் போனல், நான் மனிதத்தன்மையை இழந்தவனுவேன்' என்று வைத்தியர் சொன்னர். 'இந்த மாதிரி நான் அநேகம் ஆயிரம் ரூபாய்களைச் சம்பாதித்து விடலாம் போல் தோன்றுகிறதே' என்ருன் அப்பு, ஆனல தினந்தோறும் இங்கு சர்ப்பங்கள் வரமாட்டா என்ருர் வைத்தியர். 'அவை வந்தாலும், என் குழந்தையை அவைகள் காண்பதரிது. நாம் இந்தப் பாழாய்போன இசித்தை விட்டு இன்னும் அரைமணி நேரத்தில் புறப்பட்டுச் செலல வேண்டும்' என்று பிஜுரின் மனைவி சொன்னள்.

தமிழ் நூல்கள்

[illegible]	0	
தழக ஷ்க்கட்டு	1	4
[illegible]ரகசியப	1	0
[illegible]ல மபிகை	2	4
[illegible]ராஞ்சிதமால	0	
[illegible]கஜ்ஜ லன	1	12
[illegible]வாத்னலாகெட்	0	1
[illegible]கலா சேகரன	1	0

[illegible]தேசமித்திரன் [illegible] சென்னை.

பண்டைக்காலப் போர் முறை

படையெழுச்சி

★

——தி. நா. சுப்ரமணியம் எழுதியது——

முன் காலத்திலே ஓர் அரசன் பக்கத்து நாட்டின் மீது படையெடுத்துக் செல்வதென்று தீர்மானித்த வுடனேயே அந் நாட்டுள் புகுந்து சூரையாடி ஆரவாரம் செய்வது வழக்க மில்லை. யுத்தப்பிரகடனம் செய்த பிறகு அவன் புறப்படு வதற்குக் கொஞ்ச நாட்களாவது செல்லும்.

அரசன் யுத்தத்துக்குப் புறப் படுவதற்கு முன்னர் நல்லநாள் ஒன்றைப் பார்த்துச் நிச்சயம் செய்வான். அன்றையதினம் தான் அவன் புறப்படுவான். அன் றைக்கு அவன் அரண்மனையி னின்றும் எந்த வேளையில் புறப் பட வேண்டும் என்றும், அவன் எந்த திசையை நோக்கிச் செல்ல வேண்டும் என்றும் முன்ன தாகவே தீர்மானிக்கப்படும்.

அவன் அரண்மனையினின் றும் புறப்படும் போது ஜய பேரிகை முதலிய பலவகை வாத் தியங்கள் முழங்கும். மற்ற விதங்களில அரசன் சாதாரண மாக பவனி செல்வது போலவே தோன்றும். அவனுடன் மெய்க் காவலர்கள் முதலிய பரிவாரத் தைச் சேர்ந்த படைவீரர்கள் உடன் செல்வர். அரசன் அநேக மாக யானை மீது ஏறியே புறப் படுவான். சில சமயங்களில் பல் லக்கில் செல்வதுமுண்டு.

நகர்ப்புறத்தை அடைந்ததும் அவன் தன் வாகனத்தினின்றும் இறங்கிக் குதிரைமீது ஏறிக் கொள்வான். அப்போது அவன் கையில் வில்லும் அம்புமோ அல்லது கத்தியும் கேடயமு மோ தாங்கிக் கொள்வான். அவன் உடன் வந்த படைகள் உடனே போர்க்கோலத்தில் அணிவகுத்துக் கொள்ளும்.

போர் முடிந்த பிறகு தான்

அவர்கள் பெருங்கூட்டமாக நகருக்குப் பக்கத்தில் உள்ள ஒரு பெரிய மைதானத் துக்குச் செல்வர். அரசன் நல்ல வேளையில், தான் படையெடுத் துச் செல்லும் நாட்டை நோக்கி ஓர் அமபை எய்வான்.

அந்த இடத்துக்குப் பக்கத்தி லே அதிகாரிகள் ஒரு பெரிய கூடாரத்தை அமைத்திருப்பர். அதற்கு 'வெளி கூடாரம்' என்று பெயர். அரசன் அப்பால் நக ருக்குத் திரும்பமாட்டான் அவன் அந்தக் கூடாரத்தி லேயே தங்கிவிடுவான். போர் முடிந்த பிறகே அவன் தலை நக ரத்துக்குத் திரும்புவான்,

அரசன் கோட்டையைவிட்டு வெளிகூடாரத்துக்கு வந்தபிறகு தான் ஸைன்யங்கள் போருக்கு எப்போது கிளம்பவேண்டும் என்று நிச்சயிக்கப்படும். அர சன் உடனே சேனைத்தலைவர் களுக்கு ஓலை அனுப்புவான். அவர்கள் என்றைத்தினத்திற் குள் அவர்கள் அந்த இடத் துக்கு வந்து சேரவேண்டும் என்பதையும் எப்போது அவ் விடத்திலிருந்து கிளம்பவேண் டும் என்பதையும் தெரிவித்து ஓலைகள் செல்லும்.

போருக்குக் கிளம்பும்சேனை ஓட்டமும் நடையுமாகச் சென்று எதிரி நாட்டின் எல்லையை அணு காது. மிகவும் மெதுவாகத் தான் செல்லும். சாதாரண மாக அது ஒரு நாளில் மூன்று யோஜனை தூரம் வழி நடந்து அவ்விடத்தில் மூன்று நாள்கள் தங்கி இளைப்பாறும் பொதுவாக இன்றைக்கும் இந்தப் பழக்கமே அனுஷ்டானத்தில் இருந்து வரு கிறது. முதலில் இவ்விதம் மெது வாகச் செல்வது நாட்டில் அங் கங்கே சிதறிக்கிடப்பவர்களை ஒன்றாகக் கொணர்ந்து சேர்ப் பதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

போர் முனைக்குச் செல்வது

யுத்தத்துக்குச் செல்லுங் காலங்களில் அரசன் படையின் மத்தியில் இருப் பான். அவனைச்சுற்றிக் கூலிப் படையினர், அதாவது அரசாங் கத்திலிருந்து வருஷச் சம்பளம் பெற்று நிரந்தரமாக அரசனு டைய சைன்யத்தைச் சேர்ந்தவர் கள் சூழ்ந்திருப்பர். சிற்றரசர் கள், மஹா ஸாமந்தர்கள் ஆகி யோருடைய படைகள் நான்கு பிரிவுகளாகப் பிரிந்து அரச னுக்கு முன்னும் பின்னும், வலது புறமும் இடது புறமும் ஆக நான்கு பக்கங்களிலும் இருப்பார்கள். முன்னணியில் அரசனுடைய கொடியைத் தாங் கிச்சென்று எத்தகைய இடுக் கண் நேர்ந்தாலும், அதைக் கை விடாமல் காப்பாற்றும் பிரிவினர் செல்வர். ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனியான சேனைத் தலைவர்கள் உண்டு.

ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் படை புறப்பட்டு செல்லும்போது இப்பொழுது உள்ளத்தைப்போல அவர்கள் ஒழுங்காக அணிவகுத்துச் செல் லும் வழக்கம் முற்காலத்தில் கிடையாது என்று சிலர் கூறு கிறார்கள். அதைப்பற்றி நாம் நிச்சயமாகக் கூற முடியவில்லை.

போர் முனைக்குச் செல்லும் படைகளுள் இபபோது உள்ள தற்கும் முற்காலத்தில் இருந்த தற்கும் முக்கியமான வித்தியா சம் உண்டு. இப்போது போர் முனைக்குச் சேனையைச் சேர்ந்த வீரர்களே போகிறார்கள். அவர் களுடைய குடும்பங்கள் தங்கள் தங்கள் ஊர்களிலோ அல்லது போர் முனைக்குத் தொலை தூர த்தில் பத்திரமாக உள்ள இடங் களிலோ தங்கியிருப்பார்கள். ஆனால் முற்காலத்தில் போர் வீரர்களுடைய குடும்பங்களும் அவர்களுடனேயே போர்க்களத் துக்குச் சென்றன.

இவ்விதம் தங்கள் குடும்பங் களையும் பெண்டாட்டி பிள்ளை களையும் உடன் அழைத்துச் செல்வதால் போர் வீரர்களுக்கு மனச்சோர்வும் கவலையும் ஏற் படாதென்றும் நினைத்தனர் போலும். அன்றி, போர்க்களத் தின் நடுவிலே அகப்பட்டுக் கொண்ட தங்கள் நெருங்கிய உறவினர்களைப் பாதுகாக்கப் போர் வீரர்கள் மிக்க தைரியத் துடனும் வீரத்துடனும் சண்டை செய்வர் என்று எண்ணியிருக்கலாம்.

குடும்பம் இல்லாதவர்களுக் கோ அல்லது அவர்களை அழை த்து வராமல் தனியாகவே போருக்கு வந்தவர்களுக்கோ ஏற்படும் மனச்சோர்வை நீக்கி உற்சாகமளிக்கப் பரத்தையர் பலரும் சைனியத்துடன் செல் வர். அவர்கள் யாவரும் இளம் வயதும் மிக்க அழகும் வாய்ந்த வர்களாக இருப்பர். மனித சமூ கத்தின் மனோ தத்துவத்தை நன் றாக அறிந்து அதற்கேற்ப நடக் கக் கற்றுக்கொண்டவர்கள். அவர்களுக்கு உரிய சம்பளமும் வேண்டிய ஸௌகரியங்களும் அரசாங்கத்திலிருந்தே வழங்கப் படும். அரசனே நேரில் அவர் களை அக்கரையுடன் பரி பாலித்து வருவான்.

இவ்விதமாகச் சில சமயங் களில் போர் வீரர்களை தொடர் ந்து செல்வோர்களின் தொகை வீரர்களைக் காட்டிலும் அதிக மாக இருத்தல் கூடும். வீரர்கள் அல்லாத பிறர் அவர் அவர் தகு திக்கு ஏற்றபடி வண்டியிலோ நடந்தோ தங்கள் இஷ்டம் போலச் செல்வர். அதனைப் பார்த்தே பழைய காலத்தில் சேனை அணிவகுத்துச் செல் லும் வழக்கம் இல்லை என் றும் கூறியிருக்கலாம்.

வழியில் தங்க வசதி

படை நடந்து செல்லும் வழி யில் அங்கங்கே தங்குவ தற்கான இடங்கள் முன்ன தாகவே தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கும். அத்தனை பேர்களும் தங்கக் கூடிய ஒரு பெரிய மைதா னமோ தோப்போ தேர்ந்தெடுக் கப்படும். அவர்களுக்கு வேண் டிய உணவுப்பொருள்கள், கால் நடைகளுக்கு வேண்டிய தீவனம் ஜலவசதி முதலிய ஸௌகரியங் களும் பக்கத்திலே உள்ள இடங் களைத்தான் பொறுக்குவார்கள்.

சேனை பாடி இறங்கியிருக்கும் இடம் சாதாரணமாக ஒரு பட் டணம் போலவே காணப்படும். கல்லும் சுண்ணும்பும் கொண்டு கட்டப்பட்ட பங்களாக்குப் பதி லாக கீத்து, வைக்கோல் துணி முதலியவற்றால் நிர்மாணிக்கப் பட்ட மாளிகைகள் தோன்றும். நகரங்களில் உள்ளவற்றைப் போலவே வீதிகளும் திறந்த வெளிகளும் அமைக்கப்பட்டிருக் கும்.

அரசனின் கூடாரம்

அரசனுக்கென நிர்மா ணிக்கப்பட்ட கூடாரம் மத்தியில் தலை நிமிர்ந்து நிற்கக் காணலாம். அதனைச் சுற்றி முள்ளால் ஆகிய வேலி ஒன்று போடப்பட்டிருக்கும். அதற்கு ஒரே ஒரு வாசல்தான் உண்டு; அங்கே பலமான காவல் நிறுத் தப்பட்டிருக்கும். அரசனைச் சேர்ந்த அந்தரங்க ஊழியர்கள் அங்கே தான் வேலிக்குள் இருப் பர். அரசன் தன் குல தெய்வத் தின் விக்கிரகத்தையும் அநேக மாக உடன்எடுத்தே செல்வான். அதற்குத் தினந்தோறும் பூஜை செய்வதற்காக நியமிக்கப்பட்ட வனும் அங்கேயே இருப்பான்,

வேலியைச் சுற்றி அங்கங்கே காவல்காரர்கள் உண்டு. அரண் மனை உத்யோகஸ்தர்களில் பலர் அங்கேதான் தங்கியிருப்பார்கள் அங்கிருந்து நான்கு புறங்களி லும் பெரிய வீதிகள் பிரிந்து செல்லும். சேனைத் தலைவர்கள், சிற்றரசர்கள் முதலியோர் அவர் அவர் தகுதிக்கேற்ப அந்த வீதி களிலேகூடாரம் அடித்துத்தங்கி யிருப்பர். போர் வீரர்கள் இடை வெளிகளில் நிரம்பியிருப்பர்.

பாடி இறங்கியிருப்பது அநேகமாகச் சதுரமாகவே அமைந்திருக்கும். சில சமயங் களில் அது வட்டமாகவும் இருக் கும். மத்தியில் உள்ள வற்றைப் போலவே ஓரங்களிலும் பெரிய வீதிகள் உண்டு. அவற்றைக் காவல்காரர்கள் ஓயாமல் சுற்றி ரோந்து பார்த்து வருவார்கள்.

பண்டங்கள் கிடைக்க ஏற்பாடு

வண்ணான் முதலிய ஊழியக் காரர்கள் இவற்றைத் தாண்டி அப்பாலே ஒதுக்குப் புறத்தில் தனியாக இறங்கி யிருப்பர். நீரோடை, தோய்க் கும் துறை முதலிய வசதிகள் பக்கத்தில் இருக்கும்

இந்தக் காலத்திலே போர் முகத்துக்குச் செல்லும் வீரர் களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள். துணிமணிகள் முதலிய எல்லாத் தேவைகளை யும் அளிக்க அரசாங்கத்தாரே ஏற்பாடு செய்கிறார்கள். அதற் கெனத் தனி இலாகா அமைத்து உத்தியோகஸ்தர்களை நியமித் துள்ளார்கள். ஆனால் பண்டைக் காலத்திலே அவ்விதம் கிடை யாது.

போர் வீரர்களுக்கும் அவ னைச்சேர்ந்தவர்களுக்கும் தேவை யான பொருள்களை விற்க வணி கர்கள் சைனியங்களுடனே செல் வர். அவர்கள் அநேகமாகப் பெரும் பணக்காரர்களாக இருப்பர்; தங்கள் சொந்தச் செலவிலே சரக்குகளைப் பிடி த்து வந்து பாடி இறங்கியிருக் கும் இடங்களில் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்வார் கள். அந்தக் கடைகளிலே உப்பு முதல் கர்ப்பூரம் வரையில் எல் லாச் சாமான்களும் கிடைக்கும். யானை குதிரைகளுக்கு வேண் டிய புல் வைக்கோல் முதலியன வும் கிடைக்கும். தான் ஆசை கொண்ட பரத்தை ஒருத்தி விரும்பும் நகையை வாங்கி அவ ளுக்கு அளிக்க ஒரு போர் வீரன் எண்ணினால், அதுவும் கிடைக் கும். வைரம், பச்சை முதலிய விலை உயர்ந்த கற்களும் கிடைக் கும். அந்தக் கடைகளிலே கிடைக்காத பொருள்களே இல்லை என்று கூறலாம்.

சில சமயங்களிலே அவர்களு க்கு அரசாங்கத்திலிருந்து முன் பணம் கொடுத்து உதவுவதும் உண்டு. ஆனால் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் மிகவும் குறை வாகவே ஏற்படும். அதற்குப்பதி லாக அந்த வியாபாரிகள் பல சமயங்களில் அரசாங்கத்துக்குக் கடன் கொடுத்து உதவி செய் திருக்கிறார்கள்.

அநியாய லாபத் தடுப்பு

சண்டையொன்றுஏற்பட்டால் அதில் இரு கட்சிகளும் வெற்றிபெறமுடியாது. ஏதாவது ஓர் கட்சி தோற்றுப்போவது சக ஜம்அந்தச் சமயங்களில் தோற்ற வர்கள் வெற்றி கொண்டவர் களுக்கு ஏராளமான பொன் னும் பொருளும் காணிக்கை யாகவோ யுத்தச் செலவை ஈடு கட்டவோ தப்பமாகவோ செலுத்த வேண்டி நேரிடும். அந்தப் பணத்தை உடனே கொடுக்க வேண்டும் என்றும் வெற்றியடைந்தவர்களில் சிலர் பிடிவாதம் செய்யும் வழக்கம் உண்டு. அப்போது, தோல்வி யுற்றவர்கள் பணத்துக்கு எங் கேபோவார்கள்? இந்த வணிகர் களே முன் வந்து உதவுவர்.

படையின் ஒவ்வொரு பகுதிக் கும் தனித்தனிக் கடைகள் உண்டு. அவர்கள் அநேகமாகச் சாமான்களை ரொக்கத்துக்கு விற்க நேரிடாது. முன்னதாக வேண்டிய சாமான்களைக் கட னாகக் கொடுத்துப் பின்னால் போர் வீரர்களுக்குச் சம்பளம் கிடைத்தவுடனே வாங்கிக் கொள்வார்கள். அவர்களை சாமான்களை அநியாய விலைக்கு விற்றுக் கொள்ளை லாபம் சம் பாதிக்காமல் அரசாங்கத்தார் பார்த்துக்கொள்வர்.

கிளம்பும் போது

படைபாடி இறங்கியிருக்கும் ஓர் ஊரை விட்டுக்கிளம்பி மற்றோர் இடத்துக்குப் போவது என்று முடிவு செய்யப்பட்ட வுடன் எல்லோரும் கிளம்பு வதற்கான ஏற்பாடுகளைச் செய் வர். எல்லாம் தயார் ஆனவுடன் சேமக்கலத்தை அடித்து செய்தி யைத் தெரிவிப்பார்கள். அவர் கள் கிளம்பிச் சென்ற பிறகு அந்த இடத்தைப் பிறர் உப யோகிக்காமல் இருக்க வேண்டி அதைத் தீயிட்டுக் கொளுத்தி விடுவார்கள். அதுபற்றி எரிந்து இருட்டில் நெடுந்தூரம் அவர் களுக்கு வழி காட்டும்.

(இந்தத் தொகுதியில் முந் திய மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஜூன் 28-ம் தேதி, ஜூலை 5-ம் தேதி 12-ம தேதிகளில் முறையே வெளியாகியிருக்கின்றன.)

உங்கள் சாதாரண ஆவசியத்திற்குப் போதுமான ஸோப்புகள் கையிருப்புள்ளன:

என், சிறந்த 501 வாஷிங் ஸோப்புகூட நீங்கள் உபயோகிக்கவேண் டித்தானே! எல்லோருடைய வழக்கமான ஆவசியத்திற்கும் போதிய அளவு சரக்குகள் கையிருப்புள்ளன. உண்மையில் ஒரு குறைவுபாடு மில்லை. இது நீங்கள் அறிந்திருத்தல் அவசியம். ஜாஸ்திப்படி வாங்கி சேகரம் செய்வதால் யாருக்கும் பிரயோஜனமில்லை. அப்படி சேகரம் செய்வோருக்கும் லாபமில்லை.

ஆனால்—என்ன பண்ணுவது ?—அனேக வியாபாரிகள்-என் ஸோப்பு கள் உபயோகிப்போர்கூட - நாட்டிலேனையோரும் விரும்பும் இந்த 501 ஸோப்புகள் எங்கே கிடையாயல் போய்விடுமோவென்று பயந்து தங்கள் வழக்கமான ஆவசியத்திற்கு எத்தனையோ மேற்கொண்டு வாங்கி வைத்திருக்கிறார்கள்! அது காரணந்தான் 501 ஸோப்புகளுக்கு எங்க ளால் சமாளிக்கக்கூட முடியாத அவ்வளவு அதிக கிராக்கி.

ஒவ்வொருவரும் தங்கள் சாதாரண ஆவசியத்திற்குப் போதுமான அளவு மட்டுமே வாங்குவதாயிருந்தால் 501 ஸோப்புகள் ஏச்சமயமும் எல்லோருக்கும் நியாயமான விலைக்கே வெகு ஒழுங்காக கிடைத்து வருவது நிச்சயம். சகலமான பெயர்களுக்கும் எங்கள் ஸோப்புகள் கிடைத்துவருமாறு நாங்களும் முயற்சிப்போம். எங்கள் விற்பனையாட் களும் ஊரூராய் ஒன்றுவிடாமற்சென்று சகல வியாபாரிகளிடமும்— பெரியவர்களாயினும்சரி சிறியவர்களா யினும் சரி-விற்பனைக்குப் போதுமான அளவு சரக்குகள் இருக்கின்றனவா இல்லையா வென்று எப்பொழுதும் நன்கு கவனித்தும் வருவார்கள்.



தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.

F S. 2861.

காலையில் எழுந்து செய்யவேண்டிய விதிகள்

1 சோம்பலை நன்கு முறித்தல்;

2 கூந்தல் அடர்த்தியாக வும் அழகிய மேனியுடனு மிருக்க, கூந்தல் தேங்கா யெண்ணெயை கூந்தலில் தடவி நன்றாய் தேய்த்தல்

3 பிறகு சீப்பு அல்லது புருஷ் ஷால் கூந்தலை நன்கு வாரி சீர் படுத்தவும். உடனே கவனித் தால் இந்த நேர்த்தியான கூந் தல் தைலம் உங்கள் கூந்தலுக்கு எவ்வளவு மிருதுத் தன்மையை யும் மேனியையும் அளிக்கிற தென்பதை அறிவீர்கள்!

உங்கள் கூந்தல் அழகுக்கும் ஆரோக் கியத்திற்கும் எப்போதும் டாம்கோ பரிமள கூந்தல் தேங்கா யெண்ணெ யை உபயோகியுங்கள். எல்லா பிர பல கடைகளிலும் கிடைக்கும்.

டாம்கோ
பரிமளக் கூந்தல்
தேங்கா யெண்ணெய்.

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா.

1, வாரன் ரோட், பீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.

தயாரிப்போர் :-
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமி., டாடாபுரம் & பம்பாய்.

TH. 2394

FREE!

"அமெரிக்கன் நியூ கோல்ட்", அற்புத தயாரிப்பு, உண்மையில் உலகில 8-வது அதிசயம. இனி பிரபலப்படுத்த வேண்டிய அவசிய மில்லை. ஏற்கனவேயே இந்தியா பூராவும் பிரபலமாய் விட்டது நிறம் மாறாமலிருப்பதற்கு பத்திரி கைகளாலும் பொதுமக்களாலும் புகழப்பட்டது நாகரீகமான நகை களும் செய்யலாம.

எமது "அமெரிக்கன் நியூ கோல் டை" மேலும் பிரபலப்படுத்த தாற்காலிகமாக 6 தோலா அமெ ரிக்கன் நியூ கோல்ட் 2 ஜதை. வசீ கரமான கை வளையல்கள், 2 மோதிரம், சாம்பிள் செட்டாக கொடுக்க உத்தேசித்துள்ளோம். இந்த அனுகூலத்தை நிறுத்து வதற்கு முன முந்துங்கள்,

இலவசம்: பூராவிவரங்களுடன் கூடிய படங்களுள்ள காட்லாக் இலவசம.

AMERICAN NEW COLD COMPANY
Post Box 61, (S. M. M.) LAHORE

(EAB)

சிறுவர் கதை

சக்தி தேவி

எம். எஸ். கமலா

மந்தார தேசத்து மச்சீந்திரன் மனு நீதி தவருமல் ஆண்டு வந்தான் அவன் ஆளுகையில் மக்களுக்குத் துன்பமென்பது கிடையாது. மந்தாரேஸ்வரன் இரக்க குணமுள்ளவன். இளகிய மனதுடையவன். இரப்பவர்களுக்கு இல்லையென்னுமல் தானம் செய்வான் கேவலமாய் மச்சீந்திரன் மனைவி அவனைத் தூற்றுவாள். அதனுல் அரசனுக்குத் தீராத் துன்பம் ஏற்பட்டது. கவலையுடன் தன் காலத்தை கழித்தான். வேறு விவாகமும் செய்து கொள்ளவில்லை. பெண்களென்ருலே அரசனுக்கு அருவருப்புத் தோன்றியது.

பிரஜைகளும், மந்திரிப்ரதானிகளும், ஆஸ்தான கவிகளும் ராஜனுக்கு ஏற்பட்ட இக்குறையை தீர்க்க தங்களாலான மட்டில் முயன்றனர். அதில் எவ்வித பலனும் ஏற்படவில்லை. அதனுல் பிரஜைகளும் தங்களையறியாமலே தங்கள் அரசனின் மனே கஷ்டத்தில் பங்கெடுத்துக் கொண்டு கவலையிலாழ்ந்தார்கள். மந்தாரேச்வரனுக்குப் பின் அவன் அரசைகை கொள்ள யாருமில்லாமல் ராஜ்யம் அராஜகமாய் போய்விடும் நிலைமைக்கு வந்து விட்டது. அரசன் மேல் அன்புள்ள சிலர் அரசனை வேறு மணம் செய்து கொண்டு இல்லறத்தை நடத்தும்படி வற்புறுத்தினர். அரசன் அதற்கு இசையவில்லை.

மந்தார தேசத்து அமாத்யசேகரன் மிக வயது சென்றவன். மச்சீந்திரனின் தந்தை காலம் முதல் அரச சபையில் அமாத்யவர்யன் பதவியிலிருக்கிறுன். அக்கிழ மந்திரிக்கு தன் அரசனின் கஷ்டத்தை எவ்வகையில் தீர்ப்பதென்ற கவலை அஹோராத்ரம் இருந்தது: மன்னனிடம் எதை பற்றிப் பேசினுலும் விடை கிடைக்கும். மஹாராணியைப் பற்றிப் பேசச் சென்ருல் சீறிக்கொண்டு எழுந்து செல்வான். மெள்ள மெள்ள மந்தாரேஸ்வரனின் மகிழ்ச்சி பெற்ற வாழ்க்கை உலகுக்கு வெட்ட வெளிச்சமாயிற்று.

மச்சீந்திரன் மனைவிக்கு தன் கணவன் ராஜரீகத்திலும் தானதர்மத்திலுமே தன் பொழுதைக் கழிப்பது இஷ்டமில்லை. எப்பொழுதும் தன்னுடன் கேளி கிரஹத்திலிருந்து கொண்டு ஆடல் பாடல்களில் பொழுதை ஆனந்தமாய்க் கழிக்க வேண்டுமென்ற ஆவலுள்ளவளாதலால் எப்பொழுதும் அவனை தூற்றிக் கொண்டே இருப்பாள். அரசனுக்கோ தன் மனைவி தன் நற்காரியங்களில் குறுக்கிடுவது சம்மதமில்லாததால் அவளை வெறுத்ததுமன்றி பெண்ணினங்களென்ருல் பேயுருவங்கள் என்னும் ஸித்தாந்தத்திற்கு வந்தான்.

ஒரு நாள் அரசனும் அமாத்யனுமாய் நந்தவனத்திற்குச் சென்றனர். அந் நந்தவனத்தினுள் மாதவீ விருக்ஷமொன்று வெகு நேர்த்தியாக இலைகள் தெரியாமல் செவேலென்று பூத்திருந்தது. அவ் விருக்ஷத்தின் கீழ் ஓர் வாலிப துறவி வீற்று ஓர் மங்கையின் சித்திரத்தை வைத்துக்கொண்டு நிச்சய மனத்துடன் ஆராதித்துக்கொண்டிருந்தார். அதைக் கண்டதும் கிழ மந்திரிக்கு திகைப் பேற்பட்டது. மச்சீந்திரனுக்கோ ஆச்சரியம் மேலிட்டது.

"அப்பா! உடையைப் பார்த்தால் உலகை வெறுத்தவன்போன்றிருக்கிருய். உடலோ உலகை வெறுக்க மனமின்றி பஞ்சேந்திரியங்களும் பாவையின் மனனத்திலிருக்கிறது. இது பகவத் பூஜையா? பைங்கிளியாளின் தியானமா?" என்று உசாவினுன் சக்ரவர்த்தி.

"அரசே! உலகை வெறுக்கும்படியான சின்னத்தை மேற்கொள்ளும்படிச் செய்தது இதோ இச் சித்திரத்தில் இருக்கும் ஞான ரூபியாகிய சக்தி தேவியே ஆதலால் இத்தேவியை த்ரிகாலமும் பூஜிக்கிறேன்."

"இப்பேர்ப்பட்ட தேவியின் இருப்பிடமெது? தயவு செய்து சொல்"

"மஹாராஜா! இத் தேவிகள் இக் காலத்தில் ஏராளமாய் இருக்கிருர்கள்."

"எங்கப்பா அப்பேர்ப்பட்ட தேவிகள்?"

வீட்டிற்கு வீடு சக்தி தேவிகள். அவர்களைப் பார்ப்பது மிகப் பிரயாசையன்று. அரசே! இவள் என் கிருஹதேவி. இவளை எதிரில் ஆராதிக்கும் சக்தி எனக்கில்லையாதலால் மறைவில் பூஜிக்கிறேன். எப்பொழுதும் என்மேல் சீற்றம் கொண்டிருக்கிருள். இந்த சக்தி தேவியைச் சாந்தப்படுத்தத் தான் இக்கோலமே தவிர உண்மையில் அல்ல.

ராஜா! யுகயுகாந்தரங்களில் ஒவ்வொரு யுகத்திற்கு ஒவ்வொரு சக்தி தேவி தான் உத்பவித்தாள். இக் கலியிலோ வீட்டிற்கு வீடு சக்தி தேவிகள்.

"க்ருதயுகே ரேணுகா சக்தி:;
த்ரேதாயுகே ஜனகாத்மஜா!
த்வாபரே த்ரௌபதீ சக்தி:;
கலௌ சக்தி க்ருஹே க்ருஹே!

நாம் எத்தனை தான் நற்காரியங்கள் செய்தாலும் சக்தி தேவிகளைத் த்ருப்தி செய்யாவிடில் நம் வாழ்க்கையில் இன்பம் இல்லை. துன்பம் தான். நாம் எக்காரியங்களைச் செய்கிருேமோ அதை அவர்களுடன் சேர்ந்து செய்தால் அவர்களும் ஆனந்தித்து நம்மையும் ஆனந்தத்திலாழ்த்துவார்கள்.

முதல் யுகமான க்ருதயுகத்தில் ரேணுகா என்னும் ரிஷி பத்தினி சக்தி தேவியாய் விளங்கினுள். த்ரேதாயுகமான இரண்டாவது யுகத்தில் ஜனகராஜரின் மகள் சீதா தேவி சக்தி தேவியாய் விளங்கினுள். மூன்ரும் யுகமான த்வாபர யுகத்தில் பாண்டவர்களின் பத்னியான த்ரௌபதி சக்தி தேவி. நான்காம் யுகமான இக் கலியுகத்தில் வீட்டிற்கு வீடு சக்தி தேவிகள். ஆதலால் நாம் நம் வீட்டு சக்தி தேவிகளைப் பூஜித்துத் தான் நாம் நம் கீர்த்தியை பிராபல்யப்படுத்த வேண்டும்" என்று சொன்னுன்.

காலையில் எழுந்து
செய்யவேண்டிய விதிகள்:

1 சோம்பலை நன்கு முறித்தல்.

2 சீக்கிரத்தில் ஸ்நானம் செய்தல்.

3 கூந்தல் அடர்த்தியாகவும் அழகிய மேனியுடனுமிருக்க கூந்தல் தேங்காயெண்ணெயை கூந்தலில் தடவி நன்ருய்த் தேய்த்தல்,

4 பிறகு சீப்பு அல்லது புருஷ்ஷால் கூந்தலை நன்கு வாரி சீர்படுத்தவும். உடனே கவனித்தால் இந்த நேர்த்தியான கூந்தல் தைலம் உங்கள் கூந்தலுக்கு எவ்வளவு மிருதுத்தன்மையையும் மேனியையும் அளிக்கிறதென்பதை நீங்களே அறிவீர்கள்!

உங்கள் கூந்தல் அழகுக்கும் ஆரோக்கியத்திற்கும் எப்போதும் டாமகோ பரிமளக்கூந்தல் தேங்காயெண்ணெயை உபயோகியுங்கள். எல்லாப் பிரபலக் கடைகளிலும் கிடைக்கும்.

டாம்கோ பரிமள கூந்தல் தேங்காயெண்ணெய்.

டாம்கோ விற்பனை இலாகா:
நெ1. வாரன் ரோட்,
பீமன் பேட்,
மைலாப்பூர்,
மதராஸ்,

A TATA PRODUCT

தயாரிப்போர்:
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி.,
டாடாபுரம் & பம்பாய்,

T H 2365

காப்பத்தைத்தடுக்க 'ரஹர்த்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42,
Churchgate St., Fort, Bombay.
Phone 21343.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள்:—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, லிங்கியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

குறைந்த விலையில் கொசு வலைகள்

எமது வலைகள் அழுத்தமானவை. நான்கு முனைகள் நன்கு தைக்கப்பட்டவை. எல்லா வர்ணமும் கிடைக்கும்.

நீளம்	அகலம்	உயரம்	சாதா ரூ.	உயர் ரூ.	சிறந் ரூ.
6 அடி	$3\frac{1}{2}$ அடி	$3\frac{1}{2}$ அடி	2-0	2-4	3-10
6 ,,	4 ,,	4 ,,	2-4	2-8	4-2
$6\frac{1}{2}$,,	$4\frac{1}{2}$,,	$4\frac{1}{2}$,,	2-8	3-0	5-2
7 ,,	5 ,,	5 ,,	3-0	3-8	6-0
$7\frac{1}{2}$,,	6 ,,	6 ,,	3-8	4-0	7-2

மூன்று சேர்ந்தாற்போல் வாங்கினுல் 6 அடி X 4 அடி X 4 அடி வலை ஒன்று இனும். ஒவ்வொரு இனத்திற்கும் தபால் சார்ஜ் பிரத்யேகம். ஆங்கிலத்தில் எழுதவும்.

CALCUTTA CLOCK CO., (H 64)
15/1, Jay Mitter St.,
P. O. Hatkhola. Calcutta.

சலவைக்குச் சிறந்தது.

அன்று வேலைகளை நன்று செய்ய, காலையிலெழுந்தவுடன் அரை குறை தூக்கத்தையும், சோம்பலையும் துரத்தி, உற்சாகத்தையும் ஊக்கத்தையுமளிக்கவல்லது ஒரு கப் காபி அல்லது டீதான். வாங்கும்போது நரஸூஸ் காபி, டீயை வாங்கத்தவருதீர்கள். அவைகள் எப்பொழுதும் உயர்ந்தவை.

எந்தத் தரத்திலும், எவ்வளவு வேண்டுமானுலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி

ஹெட் ஆபீஸ்:—சேலம்.

MNK. 10 TM

FREE!

"அமெரிக்கன் நியூ கோல்ட்" அற்புத தயாரிப்பு. உண்மையில் உலகில் 8-வது அதிசயம். இனி பிரபலப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஏற்கனவேயே இந்தியா பூராவும் பிரபலமாய்விட்டது. நிறம் மாறமலிருப்பதற்கு பத்திரிகைகளாலும், பொதுமக்களாலும் புகழப்பட்டது. நாகரீகமான நகைகளும் செய்யலாம்.

எமது "அமெரிக்கன் நியூ கோல்டை" மேலும் பிரபலப்படுத்த தாற்காலிகமாக 6 தோலா அமெரிக்கன் நியூ கோல்ட், 2 ஜதை வசீகரமான கை வளையல்கள், 2 மோதிரம் சாம்பிள் செட்டாக கொடுக்க உத்தேசித்துள்ளோம். இந்த அனுகூலத்தை நிறுத்துவதற்கு முன் முந்துங்கள்.

இலவசம்: பூரா விவரங்களுடன் கூடிய படங்களுள்ள காட்லாக் இலவசம்.

American New Gold Company,
Post Box 61, (S. M. M.) LAHORE.

(E A B)

ஜகஜ்ஜாலன்

ஓர் அரிய பெரிய நூதனமான துப்பறியும் நாவல். ஜகஜ்ஜாலன் என்னும் திருடனுடைய வீரதீர பராக்கிரமங்கள். படிக்கப் படிக்க ஆச்சர்யமாயிருக்கும். 518 - பக்கங்கள் கொண்ட சுத்தப்பதிப்பு. விலை ரூ. 1—12—0 — தபாற்செலவு அணு 8.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

அழகுத் தெய்வமான மன்மதன் இளமேனியில் ஒய்ந்ததும் பெண்மணிகள் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் மஹாகவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக்கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இளமையும், அழகும் கூந்தலுக்குத்தந்து கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினுல் அழகு படுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினிகொண்டு அழகு படுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப்பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணு 12. மேற்செலவுவேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C. R. Srinivasan, B. A.